புரட்சி வேசி

"ஆண்டி"

8 அணா

…வியர் பி.ஸ்ரீ.

தினமணி வெ…

தினமணி வெளியீடு : 28

பதிப்பாசிரியர் : பி. ஸ்ரீ

புரட்சி முரசு

அல்லது

இரட்டை நீதி

(சீர்திருத்த நாடகம்)

“ஆண்டி”

2005

894.8112

24 NOV 1945

MADRAS

“இருள் அகற்றும்
கைவிளக்கே கற்ற அறிவுடைமை”

தினமணி காரியாலயம்

100, மவுண்டு ரோடு, சென்னை

1945

காபிரைட்]

[விலை அணா 8

தினமணி வெளியீடு

இலக்கிய ஆலோசனையாளர்கள்

ஸ்ரீமதி. எஸ். அம்புஜம்மாள்,
ஆழ்வார்பேட்டை, சென்னை

திரு. கி. சந்திரசேகரன்,
மயிலாப்பூர், சென்னை

,, ஏ. என். சிவராமன்,
"தினமணி" ஆசிரியர்

,, கே. சுவாமிநாதன்,
ஆங்கிலப் பேராசிரியர்,
ப்ரெஸிடென்ஸி காலேஜ், சென்னை

,, டாக்டர் டி. எஸ். திருமூர்த்தி,
நுங்கம்பாக்கம், சென்னை

,, கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார்,
சரித்திரப் பேராசிரியர்,
சென்னை யூனிவர்ஸிடி

,, ஸி. என். முத்துரங்க முதலியார்,
பேட்டை, செங்கற்பட்டு ஜில்லா

,, ஏ. வி. மெய்யப்ப செட்டியார்,
ஸரஸ்வதி ஸ்டோர்ஸ், பிரகதி பிக்சர்ஸ்,
சென்னை

,, எஸ். வையாபுரிப் பிள்ளை,
தமிழ் ஆராய்ச்சித் தலைவர்,
சென்னை யூனிவர்ஸிடி

பொருள் அடக்கம்

1. பிரஸ்தாவனை 5

2. நாடகப் பாத்திரங்கள் 11

3. புரட்சி முரசு—நாடகம் 15

4. அநுபந்தம் :—நாடகக் கலைக்கோயில் கி. பி. 1930

   I. தமிழர் நாடகக் கழகம் 74

   II. அமெரிக்காவிலுள்ள ஒரு நாடக ஆராய்ச்சி மேடை 80

   III. நாடகக் கதா வஸ்துக்கள் 88

2005

NOTE

Rights of Production and translation are reserved by the author. Particulars and terms can be had of:

Mr. V. Ramasubramaniam,
No. 5, Rangiah Gardens,
Mylapore, Madras.

உத்தம வாழ்க்கை

வழிகாட்டும் காந்தியத் தத்துவம்

"........காந்தியத்தின் அடிப்படையான தத்துவம் அஹிம்ஸா விரதம் கொண்ட சத்திய சேவை என்பதைத் திருஷ்டாந்தமாகக் காட்ட ஸ்ரீ. சங்கு - கணேசன், "உத்தம வாழ்க்கை" என்ற பெயரில் காந்திஜியின் கட்டுரைகளைத் தொகுத்துள்ளார். இது எட்டணு விலையில் "தினமணி" வெளியீடாக வந்துள்ளது. "கதர் இயக்கம் ஏன் பூர்ண வெற்றியாகவில்லை? அதற்கு நம் அரசியல் வாதிகளே காரணமாவார்கள். கதரியக்கத்தை அரசியல் வாதிகள் தங்கள் அரசியல் விளம்பரச் சரக்காகப் பயன்படுத்திக் கொண்டார்களே யல்லாமல், பலவீனர்களைப் பலவான்களாக்கும் தொண்டாகச் செய்துகொள்ள வில்லை" என்று ஸ்ரீ. சங்கு கணேசன் பொதுப்படையாகச் சொல்லும்போது, அவர் கல்மஷமாக யாரையும் குறிப்பிடுவதாகச் சொல்வதற்கில்லை. நமக்கே பல உதாரணங்கள் தெரியுமல்லவா? ஸ்ரீ. கணேசன் தொகுத்திருக்கும் "உத்தம வாழ்க்கை" காந்தியத்தின் ஜீவ அம்சங்களையும் அடிப்படைத் தத்துவத்தையும் தெளிவாக எடுத்துக் காட்டுகிற தென்பதால், வரவேற்கத் தக்க ஓர் வெளியீடு" என்று 10—6—'45 "ஹனுமான்" எழுதுகிறது.

பிரஸ்தாவனை

சுமார் பதினேழு வருஷங்களுக்கு முன்பு திருவனந்தபுரம் "கலை ஆராய்ச்சி - அரங்க மேடை" என்ற கழகத்தாரால் எனது "மாங்கல்யம், அல்லது சிந்தனை விஷயம்" என்ற நாடகம் பிரசுரம் செய்யப்பட்டது. அதில், வதூவரர்களுடைய வருங்கால இல்லற இன்பங்களை மறந்து பொருளை மட்டும் ஆஸ்பதமாக்கி நடத்திய விவாகத்தினால் துன்பம் அடைந்த ஒரு ஜீவாத்மாவின் மனக்கொதிப்பையும் ஹிருதயச் சோர்வையும் சித்திரித்திருந்தேன். மன வேற்றுமையும் அருவருப்பும் நிறைந்ததும், பெற்றோர்களால் இள வயதிலேயே செய்விக்கக்கூடியதும் ஆகிய விவாகங்களின் கொடுமைகள் நமது முன்னோர்களை விட நமக்குப் புலப்பட்டிருக்கிறதானாலும், இன்னும் எத்தனையோ பெற்றோர்களின் மூளைகளில் நன்றாகப் பதியவில்லை என்றதையும் விளக்கி யிருந்தேன். தமிழ் நாட்டிலும், திருவாங்கூரிலும், மலாய் நாடுகளிலும், ரங்கூனிலும், கல்கத்தாவிலும் உள்ள அநேக 'அமெட்யூர் நாடக சபை'களால் அந்த நாடகம் பன்முறை தமிழிலும் இங்கிலீஷிலும் நடிக்கப்பட்டு ஆதரவடைந்தபடியால், 1937-ல் சென்னை "ஸ்திரீ ஸம்ரக்ஷண சபா" என்ற மாதர் சங்கத்தார் தங்களுடைய பெண்ணுரிமைப் பிரசார வெளியீடாக அதன் இரண்டாம் பதிப்பை "மாங்கல்யம்" என்ற பெயருடன் வெளியிட்டார்கள்.

இந்த நாடகமும் 1927-ல் எழுதப்பட்டது. "மாங்கல்ய"த்தின் தொடர்ச்சியாகத் தோன்றுமாயினும் இது உண்மையில் அப்படியல்ல. "மாங்கல்ய"த்தின் கதாநாயகியே இதிலும் தோன்றி, தன் "மெய்க்காதலனுடைய இன்பத்திற்காக" என்று தான் கருதும் துணிகரச் செய்கை யொன்றைச் செய்கிறாள். எனினும், இக்கதையின் உண்மை - லட்சியம், "சமுதாய நோய்" (Social Disease) என்று கூறப்படும் பிரமேகத் தொத்துநோயினால் ஏற்படும் அட்டூழியங்களைப் பற்றி விளக்குவதேயாம்.

28—1

நமது நாட்டிலுள்ள பல்லாயிரக் கணக்கான கல்வி மான்களும் கூட இந்தப் பிரமேக நோயினால் நேரும் தீமைகளை நன்றாகத் தெரிந்துகொள்ளவில்லை, இவ் விஷயமாக ஒன்றிரண்டு மேற்கோள்களை இங்கு எடுத்துக் காட்டுவது மிகையாகாது.

டாக்டர் பி. வின்ஸ்கோ எம். டி, (Dr. P. Winsco, M.D.) என்ற நியூயார்க் ஆஸ்பத்திரி அதிகாரி கூறுகிறார்:

"கொனோரியா, ஸிபிலிஸ் என்ற இரண்டு வியாதிகளில் யாதேனும் ஒன்றின் கிருமிகள் சரீரத்தில் மிகுந்திருக்கிற வர்களுக்கு ஜனித்த குழந்தைகளில் 80 சதமானம் பிறக்கும்பொழுதோ, அல்லது கர்ப்பத்திலோ, இறந்து விடுகிறதாக என்னிடம் புள்ளி விவரக் கணக்கு இருக் கிறது. பத்துச் சதமானம், பிறந்தும் பிறவாதிருப்பின் நல மென்று சொல்லும்படி ஜீவிக்கின்றன.

"நான் பரிசோதனை செய்த இருபத்துநாலு வய துடைய சிறுமி ஒருத்திக்கு விவாகமாகி எட்டு வருஷங் களே ஆயிருந்தும் எட்டுத் தடவை கர்ப்பச் சிதைவு ஏற்பட்டிருந்தது. நான் அவளுடைய புருஷனை விசா ரித்தேன். அவன் தனது விவாகத்துக்கு முன்பே அந்த வியாதி இருந்ததாகவும், அது ஒரு பொருட்டாக எண்ணத் தக்கதல்ல வென்றும், அதை அவன் தன் மனைவியிடம் தெரிவித்து அவளும் பாதகமில்லை யென்று சொன்ன பின்பே அவளை விவாகம் செய்ததாகவும் தெரி வித்தான்!

"அந்தப் பதினாறு வயதுச் சிறுமிக்கு இந்தப் பெரிய வியாதியின் கொடுமைகளைப் பற்றி என்ன தெரியக் கூடும்? பித்தகோராஸ் என்ற தத்வ ஞானியின் கொள்கைகளைப் பற்றி என்ன ஞானமிருக்க முடியுமோ, அவ்வளவுதானே இதைப்பற்றியும் இருக்கும்! ஆரோக்கிய சாஸ்திர நிபுணர் ஒருவரை யழைத்து ஆலோசனை செய்யா மல் அவளை மணந்துகொண்ட அந்த மனிதன் மனித வர்க்கத்துக்கே துரோகியாய்விட்டான்!"

டாக்டர் டப்ளியூ. எஸ். ப்யூ எம், டி. (Dr. W. S. Pugh, M. D.) என்றவேறொரு நியூ யார்க் வைத்திய நிபுணர் எழுதுகிறார் :

"தங்களுடைய மலட்டுக்குக் காரண மென்னவென்று அறிந்து சிகித்ஸை செய்துகொள்வதற்காகப் பல நோயாளிகள் என்னிடம் வருகிறார்கள். அவர்களில் பெரும்பாலார் தங்கள் மனைவியர் மலடு என்று குறை கூறும் புருஷர்களே. அவர்கள் கூறுவது முற்றிலும் நியாய மற்ற பழியாகும். பல கேசுகளிலும் பெண்ணின் மலட்டுத் தன்மைக்குக் காரணம் புருஷனே யாகிறான், புருஷர்கள் மலடாவதற்குக் காரணம் அவர்களிட மிருக்கிற கொனோரியா நோயின் உச்சிஷ்டமே!

"மாதர்களே! ஆயிரத்தில் எண்ணூறு புருஷர்களுக்கு கொனோரியா நோய் தோன்றுகிறது என்பதை உணருங்கள்! இவர்களில் பெரும்பான்மையோரும், குணமடையாதவர்களும், விவாகம் செய்துகொள்ள முயல்கிறார்களாகையால் உங்களுக்கு எவ்வளவு அபாயகரம் தெரியுமா?

"ஸ்திரீகளுடைய உதர சஸ்திரக் கிரியைகளில் 85 சதமானமும் குனோரியா சம்பந்தபட்டவைதான். காலம் சென்ற டாக்டர் ஜோஸெப் ப்ரைஸ் 95 சதமான மென்று கணக்கிடுகிறார். போஸி என்பவரும் ப்ரேடரிக் என்பவரும் 75 சதமானமென்று எழுதியிருக்கிறார்கள். இந்த ஸ்திரீகளில் பலரும் நன்றாக நடக்கக்கூட இயலாமல், மாதவிடாய் நோய்களால் பாதிக்கப்பட்டுத் தங்கள் ஆயுள் முழுவதையும் நோயாளிகளாகவே கழிக்கிறார்கள். முடிவில் ஒரு டாக்டரிடம் சென்று சஸ்திரக்கிரியை செய்து நபும்ஸகர்களாகி உயிரை மாத்திரம் காப்பாற்றிக் கொள்ளுகிறார்கள்.

"பிரமேக ரோகிகளான ஸ்திரீகளில் பலர் கர்ப்பம் தரிக்கிறார்களென்பது உண்மையே. ஆனால் இந்த வியாதி பல ஸ்திரீகளுடைய கர்ப்பத்தையும் தடை செய்கிறது என்பதும் உண்மைதான். பேர்பெற்

பிரசவ வைத்திய நிபுணர் ஒருவர் 75 சதமானம் கர்ப்பச் சிதைவுக்குக் காரணம் கருப் பையில் தோன்றிய கொனோரியாவே என்று கூறுகிறார்.

"குருடர்களுக்காக ஸ்தாபித்திருக்கும் ரக்ஷா மந்திரங்கள் பலவற்றில் ஆராய்ச்சி செய்ததில் 60 சதமானம் குருடர்களும் மேகரோகிகளின் சந்ததிகளென்று புலப்பட்டிருக்கிறது. அவர்களுள் பலர் பிறவிக் குருடர்களும் கூட!"

மேலே குறிப்பிட்ட புள்ளி விவரக் கணக்கைப் பார்க்கிலும் ஊன்றி உரைத்திட யாரால் முடியும்?

பிரமேக ரோகங்களை ஜனங்களிடையே பரப்பும் பிரதானக் கருவி விபசாரத் தொழில். நமது சட்டங்களும் பொதுஜன அபிப்பிராயமும் அந்த விபசாரத்தைப் பெண்கள் விஷயத்தில் மாத்திரம் குற்றமாக்கி யிருக்கின்றன; புருஷர்களைக் குறை கூறுவதே யில்லை. இந்த நாடகத்திலுள்ள சுந்தரம் என்ற பாரிஸ்டரைப் போன்ற உயர்ந்த கல்வி பயின்ற பல புருஷர்கள் தங்களுடைய பேதை மனைவியரிடத்திலும், நிரபராதிகளான சந்தானங்களிடத்திலும் தங்களுக் கேற்பட்ட பிரமேகத் தொத்து வியாதியைத் தானம் செய்வதை நம்முள் பலரும் அறிந்திருக்கிறார்கள். எல்லா மனைவிகளுக்கும் இந்நாடகத்திலுள்ள சாரதாவைப்போல் தம்முடைய புருஷர்களுடைய பாபகரமான சேர்க்கையை எதிர்த்து நிற்கும் வல்லமை ஏற்படுவதில்லை. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் "பெண்மை - அலங்காரங்கள்" அவர்கள் மனங்களை அடிமைப்படுத்தி யிருப்பதால், புருஷர்கள் என்ன கொடுமை புரிந்தாலும், என்ன கெட்ட நடத்தை யுள்ளவர்களாயிருந்தாலும், அவர்களை நீக்கி வைக்கும் மனோதிடம் ஏற்படுவதில்லை. ஆனால் ஏதேனும் அற்ப சந்தேகத்தால் கூடப் புருஷர்கள் மனைவியரைத் தள்ளிவைத்துவிட்டு மறுமணம் புரிவது சர்வ சாமான்யமாகிவிட்டது. ஸ்ரீமதி ராதா பாய் சுப்பராயன் தமது "பலதார மண நிரோதன மசோதா"வைப் பிரேரேபணை செய்யும் முன்னுரையில் கூறினார்:

"நமது அரசியல் உலகின் முன்னணியில் நிற்கும் பல ஸ்திரீ புருஷர்கள் இக்குற்றத்திற்கு ஆளாயிருப்பது மிகவும் வருந்தத் தக்கதாகும். இப்படிப்பட்ட இரண்டாம் தார விவாகங்களுக்கு — அதிலும் வதூவரர்கள் பணக்காரர் களாகவோ, உயர்ந்த உத்தியோகஸ்தர்களாகவோ, செல்வாக்கு உடையவர்களாகவோ இருப்பார்களானல்—நமது தற்கால ஜன சமுதாயம் ஆதரவளித்து வருவதையும் மனவருத்தத்துடன் நாம் பார்கிருேம். ஆகையினல், நமது தற்கால நாகரிக உலகமே இந்தப் பலதார மணத்தை ஆதரிக்கிறதென்றும், இதனல் பெண்களுக்கு உயர்தரக் கல்வி அளிப்பதே நமது பத்தினிப்பேதையருக்கு அபாயகர மென்றும் சனுதனிகள் வாதிக்க ஆரம்பித்திருக்கிருர்கள்."

ஸ்ரீமதி கமலா தேவி ஒரு உபந்யாஸத்தில் சொன்னுள்: "சாமான்ய மனித உரிமைக்காகக்கூட மாதர்கள் என்றும் ஓயாமல் போராடிக் கொண்டே யிருக்கவேண்டி யிருக்கிறது. யாதேனும் ஓர் அநியாயத்தை அவர்கள் எதிர்க்காமல் விடுவார்களானுல், அதுவே மறுநாள் அந்நிய ஸ்த்ரீ ஒருத்திக்கு மற்ருெரு தீங்கு புரிவோருக்கு ஒத்தாசைக் கருவியாக அமைந்து விடுகிறது."

அநியாயச் சட்டங்களையும் பாரம்பரியங்களையும் மீறுதல் ஒன்றே இதற்குள்ள ஏக மருந்து என்று சில மேதாவிகளுடைய கொள்கை. 'கேடுகெட்ட' முதலாளி வர்க்கம், காட்டுச் சட்டம், லஞ்சத்தில் ஊறிய அதிகார வர்க்கம், நெறிதவறிய புரோகிதன், கொடுமை புரியும் பர்த்தா இவர்களை யதா சமயத்தில் எதிர்க்கவேண்டியவர் எதிர்க்காதபடியால், அவர்கள் தத்தம் துறைகளில் அமல் செலுத்துகிருர்கள். உரிமைகளைப்பற்றிக் கண் விழிப்புடன் இராத ஜன சமூகம் சீக்கிரமாகச் சுதந்திரத்தை இழக்காமல் என்ன செய்யும்? சட்டம், ஒழுங்கு என்றெல்லாம் வெறும் வாயை மென்ருல் போதுமா? அநியாயச் சட்டங்களை உடனடியாக மாற்ருவிட்டால் நாளடைவில் அராஜகமே தோன்றிவிடும். ஒரு

அநியாயச் சட்டம் பொறுக்கமுடியாமல் ஆகும்பொழுது தானே சட்ட மறுப்பும் தோன்றுகிறது? அந்தச் சந்தர்ப்பங்களிலேதான் நமது நாடக பாத்திரங்களான பிச்சை, சாரதா, கமலா இவர்களைப் போன்ற ஆர்வமுள்ள யுவர்களும் தோன்றித் தங்களுடைய புரட்சிக்குத் தேவையான ஆடம்பர எதிர்ப்புகளையும் ஆரம்பிக்கிறார்கள்.

இந்நாடகம் ''மாங்கல்ய''த்தைப் போன்றதல்ல: ஒரு லட்சிய நாடகமாகும். இதை 'இயற்கையின் பிரதிமை' என்று கூறமுடியாது. இயற்கையின் பிரதிபிம்பமாகவும், அதன் தத்துவ விளக்கமாகவுமே கருதலாம். சுத்தப் பிரதிமையில் கலை-ஆசிரியன் உள்ளத்துக்கு இடமே கிடையாது. ஆனால் இதில் ஆசிரியர் ஹிருதயமும் அத்யாத்மிக லட்சியமும், இயற்கைச் சித்திரத்துக்குப் பிறகே நின்று ஒரு புதிய உயிரையும் வர்ணத்தையும் அளிக்க முயலுகின்றன. இதற்கு நிக்கலாஸ் ரோரிச் என்ற ரஷ்ய ஒவியர் (Spiritualised Realism) அத்யாத்மிக இயற்கைச் சித்திரம் என்று நாமகரணம் செய்து, தமது ஒவியங்களிலும் விளக்கியிருக்கிறார். தமிழிலக்கியத்துக்குப் புதிதாகையால் தமிழபிமானிகளின் பொறுமையைப் பணிவுடன் கோருகிறேன்.

ஆசிரியன்

4 NOV 1946

நாடக பாத்திரங்கள்

ராவ் பகதூர் நடேச சாஸ்திரி, எம்.ஏ., எம்.எல்.:—60 வயது. பல நாள் கேசில்லாத வக்கீலாயிருந்து, பின்பு "எப்படியோ" ஜில்லா ஜட்ஜியாகி, அதிலும் ஞான சூன்யம் வெளியானதால் சமஸ்தான வழக்கப்படி திவான் பேஷ்காராக உயர்த்தப்பட்டு, பென்ஷன் பெற்றவர். தனது ஏக புத்திரனை "பிச்சை" சம்பளமில்லாமலும், விவாகம் செய்துகொள்ளாமலும் "திரிவது" பற்றி அடிக்கடி கவலைப்படுவாராயினும், அக்கவலையைச் சீட்டாட்டத்தாலும் வேதாந்த சம்பாஷணைகளாலும் மறக்க முயன்று வருகிறார்.

பிச்சை:—34 வயது. சாஸ்திரியாருடைய ஏக புத்திரன். "கிருஷ்ணஸ்வாமி" என்ற பேரானாலும், இவனுக்கு மூக்கும் குத்திப் "பிச்சை" யென்றும் பெயரிட்டு, சாஸ்திரியாருடைய ஜாதகப்படி யுள்ள "சந்தான தோஷ"த்தை ஒரே அடியில் மாற்றிவிட்டாள் அவருடைய தாயாரான நாகம் பாட்டி! இவன் தொழிலுக்கோ உத்தியோகங்களுக்கோ போகவில்லையானாலும், அமெட்யூர் நாடகங்களில் நடிக்கவும், "பிச்சை" என்ற புனைபெயருடனேயே நாடகங்கள் எழுதிப் பிரசுரிக்கவும் செய்கிறான். சமூக-சீர்திருத்தத்தில் ஆர்வமுள்ளவன்.

"கரூர்" ராஜா:—ஒரு மிட்டாதார். 35 வயது. "கரூர்" குடும்பப் பெயர். எவ்வளவு ராஜத்தன்மை யுண்டோ அவ்வளவு கருரு முண்டு! அதனால் இந்த மிட்டாதாரைத் "தகரார்" ராஜா என்றும் சிலர் தமாஷ் பண்ணுவார்கள். தாம்பூலத்திலும் சீட்டாட்டத்திலும் மிகுந்த அனுபவம்.

கிட்டு ஜோஸ்யர்:—59 வயது. ஜோஸ்யரும் புரோகிதரும். இறந்துபோன தம் இரண்டு மனைவியரிலும் சந்தானம் இல்லாததால் தமது தம்பியின் புத்திரி

கமலாவைத் தம் அருமைக் குழந்தையாகவே அபி மானித்து வருகிறார்.

"தீவட்டி" சுப்பிரமணிய ஐயர் பி. ஏ., பி.எல்.:—50 வயது. விதண்டா வாதம் புரிகிற வக்கீல். கிட்டு ஜோஸ்ய ருடைய தம்பி. கறுப்பு நிறத்துடன் வீரப்பல்லு முண்டு. கலப்பில்லாமல் இங்கிலீஷும் தமிழும் பேச மாட்டார்.

சுப்பராயன் போற்றி:—சாஸ்திரியாருடைய பரிசாரகன். உடுப்பிப் பிராம்மண வகுப்பைச் சார்ந்தவர்களுக் கெல்லாம் திருவாங்கூரில் "போற்றி" என்ற ஜாதிப் பெயருண்டு.

விச்வநாத சர்மா, ஐ. ஸி. எஸ்:—50 வயது. சென்னை ஜில்லாக் கலெக்டர்.

சுந்தரம் பி.ஏ., பார்-அட்-லா:—26 வயது. கலெக்டர் விச்வ நாத சர்மாவுடைய புத்திரியை விவாகம் செய்தபடி யால் அவரால் சீமைக்கு அனுப்பப்பட்டு, பாரிஸ்ட ராகத் திரும்பி வந்து திருவாங்கூரில் உயர்தர வக்கீலாகத் தொழில் ஆரம்பித்திருக்கிறவர்.

சங்கர வாத்தியார்:—34 வயது. விச்வநாத சர்மாவின் சகோதரி மைந்தர். பாலக்காட்டில் பிறந்து அங்கேயே புரோகிதத் தொழிலில் இருக்கிறவர். பாலக்காட்டுத் தமிழே பேசுவார்.

திவான் பகதூர் வெங்கு ஐயங்கார் ஸி.ஐ.இ.:—65 வயது. சென்னைமாகாணத்தில் அட்வகேட் ஜெனரலாயிருந்து, கவர்னருடைய சட்ட மெம்பராக உயர்த்தப்பட்டவர். "லா வெங்கு ஐயங்கார்" என்று பட்டப் பெயர். மறு படியும் வக்கீலாக அமர்ந்திருப்பதுடன், சனாதனி களுக்கும் மிதவாதிகளுக்கும் தலைவராக விளங்குகிறார். பொக்கை வாயாகையால் தாம்பூலம் இடிக்கும் இடி கல்லும் குழவியு மில்லாமல் எங்கும் கிளம்பமாட்டார்.

கமலா:—26 வயது. தீவட்டி சுப்பிரமணிய ஐயருடைய புதல்வி. கிட்டு ஜோஸ்யருடைய வீட்டிலேயே

வளர்ந்து வருகிறவள். இவளது அபஸ்மார புருஷன் இறந்து சுமார் இரண்டு வருஷமாகிறது. சென்னை விதவா மந்திரத்தில் சிறிது காலம் தங்கியிருந்தவள். இங்கிலீஷும் தமிழும் நன்ருகப் படித்தவள். பெண்கள்-இயக்கத்திலும் அவர்கள் முன்னேற்றத்திலும் மிகுந்த ஆர்வங் கொண்டவள். தன் அபஸ்மாரக் கணவனுடன் வாழ முடியாதென்று தாலியை அவிழ்த்து மாமனுர் காலில் வீசி யெறிந்துவிட்டு வெளியேறினவள்.

சாரதா, எம்.பி.பி.எஸ்.:—23 வயது. விச்வநாத சர்மாவுடைய புதல்வி. வைத்தியக் கல்லூரியிலிருந்து இப்பொழுதுதான் டாக்டராகப் பட்டம் பெற்றிருக்கிருள். பாரிஸ்டர் சுந்தரத்தை நாலு வருஷங்களுக்கு முன்பே மணந்திருந்தாலும், அவனைச் "சீமை"க்கனுப்பிவிட்டதால் இது வரையிலும் 'ருது சாந்தி' (விவாஹ பூர்த்தி) நடைபெறவில்லை.

பொன்னம்மாள்:—56 வயது. விச்வநாத சர்மாவுடைய சகோதரி. பாலக்காட்டில் இளமையிலேயே ஒரு புரோகிதரை விவாகம் செய்து, பல வருஷம் இல்லற வாழ்க்கைக்குப் பின் விதவையானவள். சங்கர வாத்தியாரின் தாயார். சனுதன முறைப்படி முண்டனம் செய்துகொண்டு வாழைநார்ப் பட்டுப் புடவை தரித்திருப்பவள். இவளும் சங்கர வாத்தியாரும் பேசுவது சென்னைத் தமிழிலோ, திருவாங்கூர்த் தமிழிலோ, டாக்கீத் தமிழிலோ சேராத பாலக்காட்டுத் தமிழ்.

போலீஸ் சார்ஜெண்ட், ஜவான்கள், வேலைக்காரர்கள், பரிசாரகர்கள்

கதை நிகழுமிடங்கள்:

திருவாங்கூரிலும் சென்னையிலும்

காலம்

1931 கி. பி.

ஹாஸ்ய நாடகங்கள் — கட்டுரைகள்

வி. ஸி. கோபாலரத்னம், பி. ஏ., பி. ல்.

[எஸ். ஒய். கிருஷ்ணஸ்வாமி, ஐ. ஸி. எஸ். முன்னுரையுடன்]

பெடரல் ஜட்ஜ் ஸர். எஸ். வரதாசாரியார் எழுதுவது :—

இந்த ஹாஸ்யக் கதைகளைப் பெரிதும் அனுபவித்தேன். விலாத்தெறிக்கச் சிரிப்பதற்கு என் மனப்பான்மை இடங் கொடுப்பதில்லை; ஒருவேளை வயதும் காரணமாய் இருக்கலாம். இதனால் இக்கதைகளைப் பற்றிய என் ஹிருதய பூர்வமான மதிப்பு கொஞ்சமும் குறைந்துவிடவில்லை.

கி. சந்திரசேகரன், எம். ஏ., பி. எல். (ஆச்ரமம்) எழுதுவது :—

உடனே வாசிக்கத் தொடங்கி..............முடித்தாய் விட்டது.........அதற்குள் என் சந்தோஷத்தையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்ள உத்ஸாகம் உண்டாகிவிட்டது..........ஆசிரியரிடம் அடங்காத தோர் அபிமானமுண்டாகிறது. வாழ்க்கையில் நகைச் சுவை எவ்வளவு அவசியம்!........"ஐயோ கடவுளே!" என்பதை வாசித்து அதில் அடங்கிய நுண்ணிய கருத்துக்களையும் உலக அனுபவங்களையும் புரிந்து கொள்ளாதவன் படித்தவன் என்று சொல்லிக்கொள்வது வீண் ஜம்பமாகும். எஸ். ஒய். கே. (எஸ். ஒய். கிருஷ்ணஸ்வாமி ஐ. ஸி. எஸ்)யின் முன்னுரை வாய்ப்பாய் அமைந்தது பற்றியும் எனக்குச் சந்தோஷம்தான். நிச்சயம் 'தினமணி' வெளியீட்டில் இந்த ஒரு புஸ்தகம் மட்டும் ஐயாயிரம் என்ன, பதினாயிரம் விற்பனையாகும், சந்தேகமில்லை.

அழகிய கட்டுக்கோப்பு. தெளிவான அச்சு.

விலை 'கவர்'ப் பின் பக்கம் பார்க்க.

புரட்சி முரசு

(சீர்திருத்த நாடகம்)

அங்கம் I

காட்சி I

[திருவாங்கூர் சமஸ்தானத்திலுள்ள ஒரு நகரத்தில் ராவ் பகதூர் நடேச சாஸ்திரியாருடைய வீட்டில் முக்கிய அறை.]

(ராவ் பகதூர் நடேச சாஸ்திரியார் எம்.ஏ., எம். எல்., நாற்காலியில் சாய்ந்து கிடக்கிறர். அவர் கையில் "கலையும் மானுட வாழ்வும்" (Art and Life) என்ற சிறு புஸ்தகம் (pamphlet) இருக்கிறது. மேஜைமீது பல பத்திரிகைகளும், ஒரு சீட்டுப் பாக்கெட்டும் கிடக்கின்றன. கிட்டு ஜோஸ்யரும் கறர் ராஜாவும் வாயில் தாம்பூலத்துடன் உட்கார்ந்திருக்கிறர்கள்.)

நடேச சாஸ்திரி :—(கையிலிருந்த புஸ்தகத்தை அருவருப்புடன் மேஜைமே லெறிந்து) ட்ராஷ்! ரேவிங்ஸ் ஆப் எ மேனியக்! (Trash! Ravings of a maniac!) அசமந்தம்! பைத்தியக்காரன் புலம்பருன், அதுகளையும் வெளியிடுகிருனே ஒரு மடையன்! ரப்பிஷ்! குப்பை!

கிட்டு ஜோஸ்யர் :—உம், என்ன அது? மறுபடியும் தாறுமாரு அச்சுப் போட்டுட்டாளா என்ன, அந்த வெள்ளக்காரக் கம்மினுட்டி?

"கறர்" ராஜா:—(புஸ்தகத்தை எடுத்துப் பார்த்து) "ஆர்ட் அண்ட் லைப்—ஏ கார்லண்ட் ஆப் மாக்ஸிம்ஸ் பை பிச்சை" (Art and Life, a garland of Maxims by Pichai) இது நம்ப பிச்சை எழுதின புஸ்தகமின்னு?

நடேச :—பிச்சை! கிருஷ்ண ஸ்வாமி இன்னு பேரையே போட்டுண்டுடக் கூடாதோ? அஹம்பாவம்! கன்ஸீட்!

க. ராஜா :—பிச்சை இண்ரதும் அவன் பேராச்சே!

கிட்டு :—யாரு, யாரு? நம்பாத்துப் பிச்சையா? இந்தாத்துக் கிருஷ்ணஸ்வாமியா? இந்த பேஷ்கார் அண்ணு புள்ளையாண்டானு? — அவன் புஸ்தகம் அச்சுப் போட்டிருக்கானு என்ன?

நடேச :—புஸ்தகம் ஏதையா? திரியருன்! — பெரிய மேதாவி!

கிட்டு :—அதிலே என்னதான் எழிதுட்டான்? (புஸ்த கத்தை வாங்கிப் பார்த்து) அடடா! அந்த மேயோக் கம்மினுட்டி பாஷையுன்னு இது! வாசிக்கத் தெரி யாதே!—ப்ஸ! இது அஞ்சாறு பக்கந்தானே இருக்கு —இதுக்குள்ளா கவர்மெண்டெ திட்டிட்டானு என்ன, காந்தியெப் போலெ?

நடேச :—கவர்மெண்டைத் திட்டினு கௌரவமாச்சே இந்தக் காலத்திலெ! குடுங்கோ அதை இப்படி! படிச்சுக் காட்டரேன் ஆபாசங்களை. (புஸ்தகத்தை வாங்கிப் படிக்க ஆரம்பிக்கிருர்).

க. ராஜா :—(எழுந்து) உம்—நில்லுங்கொ! (வாய்த் தாம்பூ லத்தைச் சுட்டிக் காட்டி) வந்துட்டேன்.

[வெளியே போகிருன்.]

கிட்டு:—யாரோடேன் தலேலெ துப்பிட்டு வந்துடாதே!

க ராஜா :—(மறுபடியும் வந்துட்கார்ந்து) படியுங்கோ!

நடேச :—" All recognised religions contain some truth, but that which distinguishes each is its special absurdity. Religion is therefore the self-delusion of a limb of humanity." உலகத்திலுள்ள மதங்களி லெல்லாம் தத்துவ லேசம் இருக்கிறதாம்—புதி சாகக் கண்டுபிடிச்சுட்டானே இதை? — இந்த மதங்களை வேற்றுமைப் படுத்துவது இவைகளிலுள்ள அசமந்தங்களாம். அதினுலெ மதம் என்பதே மனித வர்க்கத்தினுடைய மூளைக் கொதிப்பாம்!— மூளைக் கொதிப்பு இவனுக்கா, மனித வர்க்கத்துக்கா?

கிட்டு :—அடடா! மதமில்லாட்டா தெய்வமேது? சத்ய மேது? நீதி உண்டா, என்ன உண்டு?—தெய்வம் தான் உண்டு இங்கிறானே, அதுவு மில்லையோ?

நடேச :—இன்னும் கேளுங்கோ: "Marriage is an institution humanity has invented by which an equitable distribution of the objects of lust is insured. It means, in plainer language, a lifelong license for lustful indulgence."—விவாக மென்பது காமக் கிரீடைப் பங்கீடு ஆபீஸாம்! அதினலெ மனுஷ்யாளுக்கு மிதமிஞ்சின போகத்திற்கு லைஸென்ஸுச் சீட்டு கிடைச்சுட்டுதாம்!—ச்சீ! (புஸ்தகத்தை மறுபடியும் வீசி யெறிந்து) ஆபாஸம்!—மஹான்களும் மகரிஷிகளுமாகச் சேர்ந்து விவாகத்தைத் தெய்விக ஸங்கல்பமாகவும், மந்திர அக்நி சாக்ஷியாகச் செய்யவேண்டிய ஸம்ஸ்காரமாகவும் ஏற்படுத்தி யிருக்கா—அத்தெப் பத்தி இவனுக் கென்ன தெரியும்? நாளிது வரையிலும் ஒரு தம்பிடிகூடச் சம்பாதிக்கத் தெரியலெ—பிறத்தியாருக்கு உபதேசம் செயருன்! இடியட்!

கிட்டு :—நேக்கு ரொம்ப ஆச்சர்யமாருக்கே! பிச்சாண்டி புத்திசாலியாச்சே!—சுருட்டு, பொகேலெ, பொடி, குடி, காப்பி, டீ இதுகளொன்னுமே இல்லாத யோக்யனுச்சே!

நடேச :—யோக்யனு?—அதுதான் உம்முடைய தம்பி—இவருடைய பொண் கமலாவை நாலு வருஷத்துக்கு முன்னுடி, அவள் புருஷன் உசிரோடு இருக்கச்சையே புனர் விவாகத்துக்கு அழைச்சானே?

க. ராஜா :—அப்பிடிச் சொல்லூடாதீங்கோ, அண்ணு! அந்தப் பொண்ணை அபஸ்மார ஆம்பிடையாங் கிட்டிருந்து காப்பாத்தி, விவாக ரத்து வேணும் இன்னு வாதிச்சானே ஒழிய......

கிட்டு :—அதொன்னிருக்கு — ஆனலும் இது ஸம்ஸர்க்க தோஷமா இருக்குமோ?

நடேச :—ஸம்ஸ்ர்க்கமா? வீட்டை விட்டு வெளியே இறங்கவேமாட்டானே!—எல்லாம் இந்த இப்ஸென், பெர்னர்ட்ஷா, நெவ்ஷீ, பெர்ட்ராண்ட் ரஸல், ஹாவ்லக் எல்லிஸ், மாக்ஸ் நார்டொ இவாளெழுதின நாடகங் களும் புஸ்தகங்களும்தான் இவன் புத்தியையும் கெடுத்து, வாசிப்பையும் குட்டிச் சுவராக்கியவை!

கிட்டு :—இந்தப் பேர்வழிகளெல்லாம் யாரு? வெள்ள மூஞ்சிகளா, மஞ்ச மூஞ்சிகளா?

நடேச :—கலியுக ஹிரண்யாக்ஷ ஹிரண்யகசிபுக்கள்!

கிட்டு :—இவாளெக் கேக்கச்செ நம்ம நாட்டு காந்திகூடத் தேவலெப் போலிருக்கே!

நடேச :—காந்தி நீச ஸம்ஸர்க்கம் வேணும் இன்னு சொன் னாலும் ஆஸ்திகனாச்சே! இதுகள் பேய்ப் பிறவிகள் இன்னா!

கிட்டு :—நாசமாப் போக! இந்தப் பேய்களோட பாதை தான் பிச்சைக்கும் புடிச்சுட்டுதோ என்னமோ?

நடேச :—என் மச்சினன்—இவனோட மாமா—மெட்ராஸ் கலக்டர். அவன் பொண் சாரதா மெடிக்கல் காலே ஜிலெ படிச்சுண்டிருந்தா. இவனுக்குக் குடுக்கறேன் இன்னு சொல்லிக் கெஞ்சினான் மூனரை வருஷங் களுக்கு மின்னாலெ. ஆளெப் பாக்காமலே வாண் டாம் இன்னுட்டான்!

கிட்டு :—அடாடா, என்ன அசட்டுத் தனம்! த்ஸு— த்ஸு—த்ஸு! அப்ரம்?

நடேச :—பக்கத்தாத்து சுந்தரத்துக்குக் குடுத்தான் பொண்ணே விசுவம். சீமைக்கனுப்பினான் ஐ. ஸி. எஸ்ஸுக்கு. அதிலெ தோத்துப்பூட்டானானாலும் பெரிய பாரிஸ்டராக வந்திருக்கான் சுந்தரம் இப்பொ. இங்கேயேதான் ப்ராக்டிஸ் பண்ணப் போறான். நாளன்னிக்கி ருதுசாந்தியாகப் போரது. விச்வமும் சாரதாவும் இன்னிக்கு இந்தாத்துலேதான் வந் தெறங்கப் போறா. இவன் திரியறான் இப்படி!

கிட்டு :—எப்பொ நடந்துது இதெல்லாம்?

நடேச :—அபஸ்மார புருஷன் வாண்டாம் இன்னு ஒங் காத்துக் கமலம் என்னிக்குத் தாலியெ வீசி நம்ம காலிலெ எறிஞ்சாளோ, அன்னே தினம் ராத்திரி தான் விச்வம் இங்கெ வந்தான். இந்தப் பயல் கிட்டெ சம்மதம் கேட்டான். ஒங்க கமலாவையே கல்யாணம் பண்ணிக்கட்டுமா இன்னு கேட்ட தட புடல்லெ சம்மதிச்சிருப்பனு? மனசுக்குள்ளெ சர்வதா கமலா தியானமான்னு இருந்திருக்கும் அன்னிக்கு!—அந்த அசந்தர்ப்பத்திலெ அபசகுனம் இன்னு நானும் நிர்ப்பந்தப் படுத்தலெ. அன்னிக்கே சுந்தரத்துக்கு நிச்சிதார்த்தம் பண்ணிண்டு போயுட் டான் விச்வமும்.

கிட்டு :—இதெல்லாம் நடந்து மூனரை வருஷமாகரதே இப்போ. அந்த அபஸ்மாரம் இறந்து போயே பதினலு மாசமாச்சே. அதுக்கப்ரந்தானே நானும் கமாலாவை மட்ராஸ் விதவாச்ரமத்துக்கு அனுப் பினேன்.

நடேச : வலுவிலெ கூப்பிட்டுக் குடுக்கறேஞ் சொன்ன சர்க்கார் வேலையக்கூட வாண்டாம் இன்னுட்டான் இன்னுக்க?

க. ராஜா :—ஐயையோ! சர்க்கார் வேலெ குதிரக் கொம் பாச்சே இந்தக் காலத்துலெ!

நடேச :—இந்தக் காலத்துலே இம்பானேன்? எந்தக் காலத்துலெயும் குதிரக் கொம்புதான்!—எம். ஏ. எம். எல். பாஸ் பண்ணின நானே பதினலு வருஷம் காத்திருந்து எப்பிடி எப்பிடி யெல்லாமோ லஞ்சம் குடுத்து ஜட்ஜி வேலெ வாங்கினது எனக்குத் தெரியும்!

கிட்டு :—நில்லுங்கோ—அவன் நக்ஷத்ர மென்ன?

நடேச :—கார்த்திகை நாலாம் பாதம்.

கிட்டு :—வயசு?

நடேச :—ஹேவிளம்பி, சித்திரை இருபத்திரண்டு, சிம்ம லக்நம்.

கிட்டு :—ஹேவிளம்பியா? அப்படியானு குரு சிம்ம லெக்நத்துலெ, ஆதித்யன், சந்திரன் ரெண்டு பேரும் உச்சம். சனி யெங்கே?—விருச்சிகத்திலேதான், ராகு மகரத்திலே—ஆறிலெ. அந்த வீட்டுக் குடையவன் நாலிலேயோ?—கேது பனிரண்டிலே.

நடேச :—குஜன் மிதுனத்துலெ, சுக்கிரன் மேஷத்துலெ, புதன் வ்ருஷபத்துலெ, குளிகனும் ரெண்டிலெ.

கிட்டு :—சரி! வாக்குலெ குளிகனிருக்கான்—அப்பொ சரிதானே! அதுதான் திரியாவர மெல்லாம் சொல்லி அச்சுப் போடரான்.—ஆனாலும் இது மஹா யோக ஜாதகம்! யஸஸ்கரமா யிருக்க வேண்டிய ஜாதகன்! சந்தேகமே யில்லே.

நடேச :—என்ன யோகமையா? சம்பளமில்லே, தொழிலில்லே, கல்யாணமில்லே — இதுவா புகழும் யோகமும்?

கிட்டு :—இந்த ராகு தசை முடியலாச்சு. குரு தசையும் ஏற்பட்டு, அஞ்சிலெயும் அந்த குரு வரட்டும். கேது பன்னிரண்டிலெ யானாலும், இவனலெ இன்னம் பதினறு வருஷங்களுக்கு ஸம்ஸாரத்தை விட்டுத் தப்பி ஓடவே முடியாது! அவளாலேயேதான் யசஸ்ஸும் யோகமும் அடையப் போரான்.—ஆமாம்! (மணி மூன்று அடிக்கிறது) பாத்தீளா? அதோ மணியும் அடிக்கிறது. நிச்சயம்.

க. ராஜா :—மணி மூனயிடுத்தே, ஜோஸ்யரே! ஒங்க தம்பி தீவட்டி சுப்ரம்மண்ய ஐயர் ஏன் இன்னும் வரக் காணலே? (சீட்டுக் கட்டை எடுத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறான்.)

கிட்டு :—கேஸென்னமேன் இருக்கும். வக்கீலோ இல்லியோ—ஏன் அவனெ விசாரிக்கறே இப்போ?

க. ராஜா :—சீட்டாட்டத்துக்கு நாலாம் கை வரலியே இன்னு!—கரூர் ராஜா காரியமில்லாமல் வாயசைக்கிறதில்லே—புரிஞ்சுதா ?

கிட்டு :—அப்பிடி வாய் அசச்சாக்கா கரூர் தகரார்தான்!

நடேச :—யாரங்கே ?—சுப்பராயா !

சுப்பராயன் போற்றி :—(உள்ளிருந்தபடியே) ஸ்வாமி !

நடேச :—சீக்கிரம் காப்பியைப் போடு.

சுப்பராயன் : — (பிரவேசித்து) உருளக்கெளங்கு பொடி மாஸு பெச்சு ரெடி ! மணிமேட மணி மூனு தன்னெ அடிச்சு. காப்பி இட்டு இப்போ கொண்டு வராம்.

நடேச :—போரும் உன் லெக்சர்! போ.

(சுப்பராயன் போகிருன்).

பிச்சை : — (வெளியிலிருந்து) ஆகட்டும் — சொல்லிவிடுகிறேன்.

கிட்டு:—நம்பாத்துப் பிச்சையோட சத்தமல்லவா கேட்டுது?

க. ராஜ :—ஆமாம், அதோ வருகிருன்.

பிச்சை :—(கையில் ஸூட் கேஸ் ஒன்றுடன் பிரவேசித்து) வக்கீல் தீவட்டி சுப்ரமண்ய ஐயரும் இதோ வந்து சேருவதாகச் சொல்லி அனுப்பினுர்.

நடேச :— இதென்னடா, திருவனந்த புரத்திலெ இவ்வளவு நாள் தாமஸம்? நாடகம்தான் அன்னிக்கே தீர்ந்துட்டுதே. போனல் போன இடம், வந்தால் வந்த இடமா ?

பிச்சை :—மெட்ராஸ் விடோஸ் ஹோமிலிருந்து தன்னைக் கூட்டிக்கொண்டு வரவேணுமென்று கமலா தந்தியனுப்பி யிருந்தா, போயழைத்து வந்தேன்.

க. ராஜா :—பட்ணத்திலேருந்தா வருய் இப்பொ ?

பிச்சை :—ஆம்.

கிட்டு :—கமலா வந்தாச்சா ? (எழுந்திருக்கிருர்).

பிச்சை :—உங்காத்தில் இறங்கி யிருக்கிருள்.

க. ராஜா :—(கிட்டு ஜோஸ்யரை உட்காரச்செய்து) காப்பி சாப்பிட்டுட்டுப் போகலாம்.

நடேச :—நீ யாருடா அவளைக் கூட்டிண்டுவர ? உனக்குத் தந்தி யனுப்புவானேன் ?

பிச்சை :—தந்தி கிடைத்தால் உடனே புறப்பட்டுப் போகக் கூடியவன்: அதினாலேயே எனக்கனுப்பினாள்.

நடேச :—கேட்டீரா, ஜோஸ்யரே?— காலம் !—

க. ராஜா :—(தாம்பூலம் உமிழ்வதற்காக வெளியே சென்று திரும்பி வந்து) தீவட்டி வருகிறது!

தீவட்டி சுப்ரமண்ய ஐயர் :—(பிரவேசித்து) நமஸ்காரம் — குட் ஈவெனிங் டு யூ ஆல்.

க. ராஜா :—அப்ப! என்ன தேஜஸ்ஸு!—வாருங்கோ!

தீ. சுப்ர :—என் தேஜஸுக் கென்ன, தகராறு ராஜா?

க. ராஜா :—அந்தப் பல்லும் நிறமும் போயட்டா, தகராறே இல்லே !

தீ. சுப்ர:—அப்பவே அஸெம்பிள் பண்ணியாச்சோ இங்கே? நான் என்ன லேட்டா? (மணியைப் பார்க்கிறார்).

க. ராஜா:—லேட்டா? காப்பிக்கு இன்னும் அஞ்சு நிமிஷம் பிடிக்கும்.

தீ. சுப்ர :—பிச்சை! உன் நாடகத்தை பப்ளிக் எப்படி ரிஸீவ் பண்ணினா ?

பிச்சை :—சிலர் புகழ்ந்தார்கள், சிலர் வாயாரத் திட்டினார்கள்!

தீ. சுப்ர :—கன்க்ராட்யுலேஷன்ஸ் !

பிச்சை :—தாங்க் யு ! (உள்ளே போகிறான்.)

க. ராஜா :—(சீட்டைக் கலைத்துக்கொண்டே) என்ன விசேஷம் இன்னிக்கு-வக்கீலவாள் ! - இத்தனெ நேர மாகிறதுக்கு ? கேஸென்னமேன் இருந்ததோ ? — அதாரவன் தீவட்டி வக்கீலண்டே வக்காலத்தெக் கொண்டு தந்தவன்? ஊருக்குப் புதிசோ ?

தீ. சுப்ர :—நல்ல பழம் பெருச்சாளி — அது தான் தீவட்டிக்கு பயப்படாது !

நடேச :—விதண்டா வாதமோ ?

தீ. சுப்ர :—பிரதிவாதி வக்காலத்து ; அதுக்குத்தானெ மூளை யும் வேண்டியிருக்கு !

நடேச :—ஓஹோ ! சீட்டையும் அதுக்குள்ளாலெ நாலு கைக்கும் போட்டுட்டியா ராஜா?—சரி ! (சீட்டை நாலு பேர்களும் எடுத்துக் கொண்டு பார்க்கிறார்கள்.) ப்ரிட்ஜா ?

க. ராஜா :—ஆமாம், — பார்ட்னர் ! எதிர்க் கை !

கிட்டு :—ஒம் பாட்டனருக்கு விட்டுட்டியா ? ஆறு நோ ட்டெறும்பு தான் !

நடேச :—நோ ட்ரம்ப்ஸா? டபிள் ;—ஆடுதன் ஏஸ் எறக்கு கிறேன்.

கிட்டு :—(தன் சீட்டுகளைக் கீழே விரித்துப் போடுகிறார்) வந்தது வரது இன்னுதான் சொன்னேன். ராஜா! தைரியம் புருஷலக்ஷணம்.

க. ராஜா :—(தாம்பூலத்தை உமிழ்ந்துவிட்டு வந்து) என்ன சீட்டு, ஐயா ? இத்தெ வைச்சுண்டு எப்படி நோ ட்ரம்ப்ஸ் சொன்னீர், ஐயா?

தீ. சுப்ர :—தகரார் தான் !

க. ராஜா :—உம்மோட எவன் சீட்டாட ஒக்காருவான் ? எந்த மனிசப் பயல் உக்காருவான் இன்றேன் ?

கிட்டு :—வேறெ என்னத்தெச் சொல்ரது ? துருப்புச் சொல்ல வேறெ என்ன இருக்கு என்னண்டே ?

க. ராஜா :—அப்பிடியானு ஸ்பேடெத்தானெ சொல்லித் தொலைக்கணும் ?

கிட்டு :—அதுலேன் ரெண்டு பந்து தானே இருக்கு ?

க. ராஜா :—ஸ்பேட் சொல்லவும் ஒசந்த சீட்டு வேணுமோ? மூளைகெட்ட ஆட்டம் !

[சுப்பராயன் போற்றி பக்ஷணங்கள் அடங்கிய தட்டையும் கூஜாவையும் எடுத்துக் கொண்டு வருகிறன்.]

நடேச :—இங்கே கொண்டுவர வேண்டாமடா! அங்கெ கூடத்துக்குக்கே வந்துடறேம்.—ராஜா! காப்பி சாப்ட்டுண்டே சண்டை போட்டா! தொண்டைக்கும் ஹிதமா இருக்கும்,—வாங்கொ உள்ளே எல்லாரும்.

[நால்வரும் உள்ளே போகிறார்கள்.]

[பிச்சை வெளியே வந்து ஒரு நிலைக் கண்ணாடியைப் பார்த்து நின்று தலையைச் சீவிக்கொள்ளுகிறன். சுப்பராயன் போற்றி மறுபடியும் வந்து காப்பியைக் கோப்பை களில் நிறைத்து ஒன்றொன்றாக உள்ளே கொண்டு போகிறன்.]

சுப்பராயன் :—(காப்பியை ஆற்றிக்கொண்டே) அதுக்கப் பரம் கண்ணைய்யா ஸெட்டு பந்துது. சங்கீத கிட்டப்பா—ஸெத்து போச்சில்லெ?—அந்த கிட்டப்பா ஸெட்டு, சுப்புராய போத்தி காப்பி கொண்டுவா இன்னு ஸொல்லும். நானு காப்பி கொடுக்கும். அந்த காப்பி குடிச்சிட்டு ஒரு பாட்டு பாடும்—எந்து ஸ்தாயிலெ பாடும் தெரியுமா?—அப்படா!—(உள்ளெ கொண்டு காப்பியை வைத்து விட்டு மறு படியும் வந்து) அதுக்கப்ரம் ஆரியகான சபை பந்துது —அனந்த நாராயணய்யருடெ ஸெட்டு. நானு காப்பி கொடுத்து. ஹா! அத்தேகத்துடெ ஸ்பீச்சு கேக்கணம்! கண்ணு நீரு ஸொட்டும் அப்படி!—அப்பரம் ஆண்டி நாடகம் பந்துது. நானு காப்பி கொடுத்தில்ல—என்னெ விளிச்சில்ல! ஆனு நானுபோயி பாத்து. ஆறுமணியமில்ல, (ஹார் மோனியம் இல்லெ.) பக்கபாட்டில்ல, டான்ஸில்ல, படுதாவில்ல, ஸீனில்ல, ஒன்னுமில்லா—ஸுத்த மோசம்! ஸுத்த மோசம்!—ஆனு உத்யோகஸ்தரு, பக்கீலுமாரு, தொரைசாணிமாரு ஸந்தோஷிச்சு கையை கொட்டித்து. நமக்கு பிடிக்கில்ல. பிச்செஸாமி நாடகமெப்பிடி? நானு பாத்ததில்ல.

[நடேச சாஸ்திரி, கிட்டு ஜோஸ்யர், தீவட்டி சுப்ரமண்ய ஐயர், கறுர் ராஜா இந்நால்வரும் மறுபடியும் பிரவேசித்து மேஜையைச் சுற்றி உட்காருகிறார்கள்.]

தீ. சுப்ர :—பிச்சைக்கு ட்ராமாவிலெ பார்ட்டு இருந்துதோ ?

பிச்சை :—ஆம், ஆனாலும் என் நோக்கம் நடிப்பதல்ல, அரங்க மேடையை மேன்மைப் படுத்துவது. அதையே கலைமகளின் க்ஷேத்ரமாக்குவது.

நடேச :—இந்த நாடக க்ஷேத்ர ஸ்தாபனக் கனவு, வயிற்றை நிறைக்குமா ?

பிச்சை :—பட்டினிதானே பக்தியை வளர்க்கிறது, கற்பனு சக்தியையும் பெருக்குகிறது ?

நடேச :—தற்புகழ்ச்சியையும் அதிகரிக்கிறது !

பிச்சை :—ஒரு புதிய கொள்கையின் தலைவனை எதிரிகள் இகழ்வதுதான் இயல்பு.

நடேச :—ஒஹோ ! தேவரீர் தலைவரோ ? சரிதான் ! ஆனால் உடல்வர், கைவர், கால்வர், எல்லாம் யாவரோ ?

பிச்சை :—அவர்கள் உற்பத்தியாவதற்கு முன்பே எதிரி தோன்றிவிட்டார்—என் பிதாவின் உருக்கொண்டு !

நடேச :—ஆமாம், நான் எதிரி உனக்கு !—நீ செய்யும் காரியங்களுக் கெல்லாம் விக்னமாயிருக்கேனே ? அப்படி இருந்திருப்பேனுனல் நீ இப்பிடித் தொழிலில்லாமல் கூத்தாடிண்டு திரியமாட்டியே !—ஒன் மனம்போல விட்டது தானே இப்பிடி இக்கெதிக்குக் கொண்டு விட்டிருக்கு இப்பொ !—சீட்டை எடுத்துக்குங்கோ, ஐயா !

[சீட்டை எடுக்கிறுர்.]

கிட்டு :—என்ன விஷயமது ?

நடேச :—வியாதிக்கு மருந்துண்டு, முட்டாள் தனத்துக்கு மருந்தேது ? குலத்தையும் மானத்தையும் உலைக்க வந்திருக்கான் !—இறக்கும் சீட்டை !

பிச்சை :—உமது மானத்தை நான் ஏன் உலேக்கவேணும் ?

[விரைந்து உள்ளே போகிருன்.]

கிட்டு :—அட சனியனே! வேடிக்கை இன்னுட்டிருந்தேனே! அவன் கோவிச்சுண்டுன்ன போராப்பிலெ இருக்கு? என்ன சொன்னேள் ?

நடேச:—இப்படி வாய் அசைக்கச்செ மூக்குக்கு மேலெ கோபம் வந்துடரது! வெளியே போகும்படி நானென்ன சொல்லுட்டேனிப்பொ ? தலேவிதியைத்தான் சொல்லணும் ! அவனெச் சமாதானப்படுத்தி அழச்சுண்டு வாரும், சுப்ரமண்ய ஐயரே !

தீ. சுப்ர :—மிஸ்டர் பிச்சை !

கிட்டு :—நில்லு, சுப்பா ! நான் அவனெச் சமாதானப்படுத்திக் கமலாவண்டே அழைச்சுண்டு போயுடறேன். [வெளியே போகிருர்.]

க. ரஜா :—ஜோஸ்யருக்கு மூளே யிருக்கு ! (என்று வெகு அவசரமாகத் தாம்பூலம் போட்டுக் கொள்ளுகிருர்.)

(திரை விழுகிறது.)

திருவாங்கூர்

அங்கம் 1

காட்சி 2

[கிட்டு ஜோஸ்யருடைய வீடு - கமலாவும் கிட்டு ஜோஸ்யரும் நிற்கிறர்கள். பிச்சை கதவைத் திறந்துகோண்டு பிரவேசிக்கிறன்.]

கிட்டு :—அந்தக் கட்டில்மேலேயே ஒக்காந்துக்கோ.

பிச்சை : — (உட்கார்ந்து) இந்த அறைக்குள் காலெடுத்து வைத்ததும் ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வருகிறது.

கிட்டு :—என்ன அது ?

[கமலா உள்ளே போகிருள்.]

பிச்சை:—இதற்கு முன் நான் இந்த அறைக்குள் வந்திருந்த சந்தர்ப்பம்,—மூனு நாலு வருஷங்களுக்கு முன் என் வீட்டில் மௌன சந்யாசி ஒருவர் வந்திறங்கிய தினத்துக்கு முந்தின நாள் மாலை—நான் இவ்வீட்டுக்குள் ஏறினதும், உமது இளையாள் சுப்பம்மாள் உம்மைக் கடிந்து பேசிவிட்டு, என்னைக் கண்டு நாணமுற்று உள்ளே போகவும், நீர் கோபிக்கவும், நான் உம்மைச் சமாதானப்படுத்தவும் செய்தேனே, அவை யெல்லாம் ஞாபகத்துக்கு வருகிறது.

கிட்டு:—அந்த நாளெல்லாந்தான் போயுட்டுதே — இன்னமே திரும்பி வரப்போரதேது? பாவம்! அந்தப் பொண் ஏழைக் குடும்பத்திலே பொறந்ததானாலும் அருமையான குணம். நானும் குடுத்து வெக்கலெ, அதுவும் குடுத்து வெக்கலெ!

பிச்சை:—நீர் பெரிய ஜோஸ்யராச்சே — இதை முன்னுடியே அறியாமல் இருந்ததேன்? உம்ம ஜோதிஷம் உமக்கு உபயோக மில்லையோ?

கிட்டு:—ஜோஸ்யத்தைக் கொண்டு அடுப்பிலெ வை!—பிச்சை! நானும் ஒன்னெப்போலெ பெரிய நாஸ்திகனுயாச்சு இப்போ. ஜோஸ்யம், மந்திரவாதம், புரோகிதம், இதுகளெப்பத்தி எவனுவது பேசினு அவனெக் கொலெ பண்ணணும் இன்னு தோணரது நேக்கு! என் மூத்த தாரம்தான் இறந்துபோனு—அது எங்கப்பா ஜாதகம் பாத்தது. கமலாவுக்கு வாச்ச தாம்பத்யந்தான் இப்பிடி வைதவ்யமாயுட்டுது!—அதுவும் என் குத்தமா யிருக்கட்டும். என் இளையாளும் இப்பிடி யமலோகம் போனுளே! — இது ஆரோட குத்தம்? இந்த நாசமாப் போற ஜோஸ்யந்தானே என்னை ஏமாத்தினது!—ச்சி! பாழடஞ்ச சாஸ்திரம்!

பிச்சை:—ஏனையா இப்படிக் கூறுகிறீர்? இந்தக் காலத்திலே வக்கீல்களும் பாரிஸ்டர்களும் கூட, தங்கள் தொழிலைவிட ஜோதிஷத்தில் அதிகப் பிரியம் கொண்டு அதில் ஆராய்ச்சிகளும் செய்கிறார்களே!

கிட்டு :—போச் சொல்லு, சோத்துக்குச் செத்த உபவாச மூஞ்சிகளே!-கேஸூம் வருமானமும் இல்லாமல் ஜாதகமும் கையுமா இருக்கிற திண்ணை தூங்கிகளே !—மூளை கெட்டதுகள் !

கமலா :—[ஒரு பாத்திரத்தில் பாலைக் கொண்டு வந்து பிச்சையிடம் கொடுக்க, அவன் அதை வாங்கிக் குடிக்கிறான்.] அப்பா! பால் கொண்டுவரப் போன ஆத்திரத்தில் பசுவைக் கட்ட மறந்து போனேன், போய்க் கட்டிவிட்டு வருகிறேன். (திரும்புகிறாள்.)

கிட்டு :—நில்லு, கமலா! நீ கிட்டக்கப் போனா ஒதெச்சுடுமது. நான் போய்க் கட்டிட்டு வறேன். (போகிறார்.)

பிச்சை :—ஏன் நிற்கிறாய் ?

கமலம் :—இதுவரையிலும் உட்கார்ந்திருந்ததால் நிற்பதே இதமா யிருக்கிறது.

பிச்சை :—நீ பழைய கமலந்தானோ என்று சந்தேகமா யிருக்கிறது. எனக்கு — இப்போது பேச்சு மட்டமாக வும், செய்கை வேகமாகவும் இருப்பதாகத் தோன்று கிறது.

கமலம் :—ஏன் ? அப்போதும் செய்கையில் மட்டமா யிருந்தேனா ? என்னை என் அனுமதி யில்லாமலே அபஸ்மாரக் கணவனுடன் இணைக்கத் துணிந்த சந்தர்ப்பத்தில், என் தாலியை அறுத்து வீசி யெறிந்து என் வெறுப்பை விளக்கி நான் வெளியே போக வில்லையா ? கணவனை இழந்த கண்ணகி மதுரா புரியை எரித்த செளரியம் என்னிடத்தில் இப்போது இல்லை! பூமிக்குள்ளே மறைந்த சீதையைப்போலவும் என்னால் செய்ய முடியவில்லை! அவர்களை விட நான் செய்கையில் மட்டந்தான் !

பிச்சை :—அது போகட்டும். எதற்காக உங்கப்பாவை உள்ளே அனுப்பினாய் இப்பொழுது ?

கமலம் :—[நாணத்துடன் தலை குனிகிறாள்.]

பிச்சை :—நேராகச் சொல்லி அனுப்பினுலெ வந்திருப்பேனே. உன்னை அழைத்து வருவதற்காக மெட்ராஸுக்கு வந்தவன் இங்கே வரமாட்டேனு? "நிரந்தரக் காதல்" என்பது ஒரு மித்யை என்ற கொள்கை எனக்குண்டு. ஆனுலும் ஸ்திரீ புருஷர்களுக்கிடையில் பற்றுதலே இல்லை என்பவனு நான்? "காதல்" என்பது உண்டு—என்று நான் நம்பியிருந்த காலத்தில் அந்தக் காதலின் பேராலேயே மூன்று வருஷங்களுக்கு முன்பு உன்னை நான் விவாகஞ் செய்துகொள்ள விரும்பி அழைக்கவில்லையா?

கமலம் :—அப்பாவுடைய சம்மதத்தை நான் சற்று முன்பு ஒரு நிமிஷத்தில் ஒரே வார்த்தையில் பெற்றேனுலும், அவருடைய முன்பாக நான் உங்களிடம் கேட்க வேண்டியதைக் கேட்க எனக்கு நாணமாயிருந்தது. அதுதான் அவரை அனுப்பினேன்!

பிச்சை :—நமது விவாகத்தைப் பற்றிப் பேசத்தானே?

கமலம் :—[மறுபடியும் தலை குனிந்து நிற்கிருள்.]

பிச்சை :—நீ அதைப்பற்றி நன்ருக ஆலோசனை செய்தாய் விட்டதா? மெட்ராஸிலிருந்து வந்ததும் வராத்துமாக ஆத்திரப்படுகிருயே!

கமலம் :—இதை முடிக்கவென்றே சென்னையிலிருந்து வந்தேன். வந்ததும் பெரியப்பாவிடம் அனுமதி பெற்றேன் - தற்செயலாக நீரும் இங்கு வந்தீர். உங்களிடத்திலும் என் ஆனந்தத்தைத் தெரிவித்தேன், அவ்வளவுதான்!

பிச்சை :—எந்தத் துறையிலும் பிரவேசிப்பதற்கு முன்பாக எவனுக்கும் அந்தத் துறையில் சற்றுப் பயிற்சி இருக்கவேண்டுமென்பதைச் சாதாரணமாக எல்லோரும் ஒப்புக் கொள்ளுகிருர்கள். ஆனுல் இந்த ஒன்றில் மாத்திரம் — விவாகமென்ற துறையில் மாத்திரம் — பயிற்சி யில்லாமலே இயற்கையாகவே யாவருக்கும் வெற்றி கிடைத்து விடுமென்று எல்லோரும் எண்ணி விடுகிருர்கள்.

கமலம் :—இவ்வளவு நாளாக நான் பட்ட துன்பமே போதாதா, எனக்குத் தேவையான பயிற்சியை அளிப்பதற்கு ?

பிச்சை :—காதல் இல்லற சுகத்தின் அறிகுறியாக மாட்டாது. சில சமயங்களில் விவாகத்துடன் காதல் முடிவடைந்து விடுகிறது. திருவனந்தபுரம் சட்டக் கல்லூரி மாணுக்கன் ஒருவனும், அவனிருக்கும் லாட்ஜிலுள்ள மலையாள வேலைக்காரி ஒருத்தியும் ஒருவரையொருவர் காதலிக்கலாம். அதைக் கொண்டு அவர்கள் தம்பதிகளாவார்களானல், துக்கத்திலேயே முடிவு பெறும் அவர்களுடைய தாம்பத்யம்! விவாகத்தால் ஏற்பட்ட நெருங்கிய வாழ்வு அவர்களுக்கிடையே யுள்ள பல வேற்றுமைகளையும் நன்ருக விளக்கிக் காட்டும்.—நீ என்னுடைய வெளி வேஷத்தில் பற்றுதல் அடைந்தால் போதுமா ? என் சுபாவ குணம், கொள்கைகள், மானுபிமானம், நன்னடக்கை, துர் அபிமானங்கள் இவைகளில் எல்லாம்கூட அனுதாபம் கொண்டு ஒத்து வாழும் மனேபாவமும் கொண்டாலன்றி, என்ன பிரயோஜனம் ?

கமலம் :—தாங்கள் திரும்பத் திரும்ப இந்தப் பல்லவியே பாடுவதால், தங்களுடைய மனச் சாட்சியை நோக்கியே இந்த வினுக்களைக் கேட்பதாக நான் நினைக்கிறேன்.

பிச்சை :—கமலா! உனக்கு என்மேல் இவ்வளவு பற்றுதல் இருப்பதாக நான் அன்றே அறிந்திருந்தால், உன்னை இதுகாறும் இந்நிலையில் விட்டிருக்கவே மாட்டேன், இப்பொழுது அந்த அபஸ்மாரம் இறக்காமலிருந்தால், உன் வாழ்வு என்னவா யிருக்கும்?—சரி, இனி என்ன செய்ய வேண்டியது ?

கமலம் :—நமது ஆலோசனை யாருக்கும் தெரியவேண்டாம். கூடிய சீக்கிரத்தில் இவ்வூரை விட்டுக் கிளம்பி, சென்னைக்குச் சென்று நமது விவாகத்தை ரிஜிஸ்தர் செய்து விடுவோம். நமக்கு வேண்டிய திரவியம்

என் பெரிய தந்தையாரே தருவதாகவும், விவாக தினத்திலும் பின்னுடியும் நம்முடனேயே அவர் இருக்கப் போவதாகவும் சொல்லியாகிவிட்டது.

பிச்சை :—ஆம், இந்த ஊரை விட்டுக் கிளம்ப வேண்டியதுதான். இந்தச் சுதேச சமஸ்தானத்தில் இன்னமும் விதவா விவாக அனுமதிச் சட்டம் ஏற்படவில்லை. (கிட்டு ஜோஸ்யர் திரும்பி வருகிறுர்.) ஜோஸ்யரவாள்! இந்த ஆத்தில் ஒரு மந்தை மாடுகளிருக்குமோ? ஒவ்வொன்றையும் லக்கம் பார்த்துக் கட்டினீர் போலிருக்கிறது!

கிட்டு :—நான் என்ன, அவ்வளவு இங்கிதம் தெரியாதவனு?

பிச்சை :—இந்த ஸூக்ஷ்மபுத்தி இவளை அந்த அபஸ்மாரத்துக்கு விவாகம் செய்விக்கும்போதே இருந்திருந்தால்?

கிட்டு :—எங்கப்பா ஒரு ஜோஸ்யரானதுனுலே இந்த எழவெடுத்த சாஸ்திரத்தைப் பற்றி ரொம்பப் புளுகிவிட்டார்! இப்பொத்தானெ தெரிகிறது, இதோட வண்டவாளங்களெல்லாம்!--சரி, என்ன தீர்மானிச்சேள் முடிவாக?

பிச்சை :—இன்னும் சந்தேகம் தானே?

கிட்டு :—அப்படியில்லே. நான் ஒரு பழைய காலத்துப் புரோகிதன்—நீ திவான் பேஷ்கார் புள்ளையாண்டான். நீ சம்மதிச்சாலும் ஒங்கப்பா.........

பிச்சை :—எங்கப்பாவா? மற்றெருருவன் மனைவியாயிருந்த கமலாவையே, அவர் முன்னுலேயே, விவாகஞ் செய்யத் துணிந்த என்னிடமா, எங்கப்பாவைப் பற்றிப் பேசுகிறீர்? ஒருவேளை உமக்கு......

கிட்டு :—சிச்சி! நானு? நீ எது கேட்டாலும் தருவேன் நான். நாளைக்கு ஒங்கூட நாடகசாலையில் ஏறி வேஷங் கட்டிக் கூத்தாடணமானுலும் கூடச் சம்மதிப்பேன்! கமலாவும் அப்படித்தான்!

பிச்சை :—ஏனையா, அது இழிவான காரியமோ புருஷன் ஸ்திரீ வேஷம் கட்டி ஆடுவதைவிட?

கிட்டு :—இப்போ இவள் கஷ்டத்தைவிட இழிவாக நேக்கு வேறென்னுமே படலே!—அப்ரம் என்ன முடிவு?

பிச்சை :—Won't you have sound sleep tonight, Kamala?

கமலம் :—Yes, thanks.

கிட்டு :—நேக்கும் தெரியப்படாதோ அது? கொரங்கு மூஞ்சிகள் பாஷெலெ பேசிக்கறேளே!

பிச்சை :—வாரும், சொல்லுகிறேன்—(கிட்டு ஜோஸ்யர் கையைப்பற்றி அழைத்துக்கொண்டு வெளியே போகிறான்.)

(திரை விழுகிறது)

திருவாங்கூர்

அங்கம் II

[நடேச சாஸ்திரியாரின் வீட்டில் ஓர் அறையில் சென்னைக் கலெக்டர் விச்வநாத சர்மாவும், அவருடைய புத்திரி டாக்டர் சாரதாவும், அவர் சகோதரி பொன்னம்மாளும், பொன்னம்மாளுடைய புத்திரன் சங்கர வாத்தியாரும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.]

வி. சர்மா :—என்னதான் வேணுமென்று சொல்லுகிறாய், சாரதா?

பொன்ன :—சாந்திக் கல்யாணத்தெ முன்னிட்டுண்டா கூத்துப் போடறாய்டீ, பொண்ணே?

சாரதா :—ருது சாந்திக்கு முன்பு கண்டனம் செய்யத் தவறினால் பின்பு என்றுதான் செய்யமுடியும், பொன்னு அத்தை? சீமந்தம் வரும்போதா?

பொன்ன :—அசட்டுப் பொண்ணே! கண்டிப்பானேண்டீ?

சங்கர :—மெட்ருஸிலிருந்து புறப்படறத்துக்கு மிந்தியே அப்பாவண்டே சொல்லியிருக்கலாமே!

சாரதா :—அப்போது இதை யொன்றையும் அறிந்தேனில்லே. இன்று காலேயில் அல்லவா தற்செயலாகத் தெரிந்தது இந்த அயோக்கியனுடைய......

பொன்ன :—அடி பாவீ! ஒங்க ஆமடையானேயா இப்பிடி வையருய்?

சாரதா :—ஆம்பிடையானுனல் பரிசுத்த ஆத்மாவாய் விடுவானே?

வி. சர்மா :—நல்லது, சாரதா! இப்படி வந்து உட்கார்ந்து கொண்டு எல்லாம் சொல்லு. தைரியசாலியான உனக்கும் என்னிடத்தில் என்ன ரகஸ்யம்?

சாரதா :—ரகஸ்ய மொன்றுமில்லே, அப்பா!—நேற்று மாலே அவர் எனக்கு வாசிப்பதற்கென்று இந்தப் புஸ்தகத்தைத் தந்தார். அதை ராத்திரி திறந்தேன். திறந்ததும் இதோ இந்தக் கடிதாசி அதற்குள்ளிருந்து விழுந்தது. இது சீமையிலுள்ள ஒரு ஆஸ்பத்திரியில் ஸ்பெஷல் வார்டில் அவர் வியாதியஸ்தராகக் கிடந்தபொழுதுள்ள ஆஸ்பத்திரி ரிக்கார்டு. அதில் அவரே தன் கெட்ட நடத்தையால் தோன்றிய வியாதியென்று அதிகாரிகளிடம் தெரிவித்திருக்கிருர். அன்றியும் இதன் மறுபக்கம் அவரே தம் கைப்பட,

வி. சர்மா :—சரிதான்—நீயே படி.

சாரதா:—"லிலியன் கூப்பருடையவும், அவளுடைய இந்திய ஜோடியான தங்கத்தினுடையவும் ஸ்மாரகமாக!" என்றெழுதியிருக்கிருர். நான் இதை இன்று மாலே வரை யிலும் யாரிடத்திலும் தெரிவிக்கவில்லே. ஆனல் அவர் சற்று முன்பு அந்தத் தங்கத்தையே இந்த வீட்டுக்குள்ளே கொண்டுவந்து விட்டார்.

எல்லோரும் :—இங்கா?

சாரதா :—ஆம்—இங்கே. அவள் ஒரு வீணே வாத்தியாரென்றும் எனக்கு வீணே கற்றுக்கொடுக்க ஏற்பாடு

செய்திருப்பதாகவும் சொல்லி அறிமுகம் செய்வித்தார்.

சங்கரன் :—இம்பிட்டுத்தானு! வேறெ என்னவோ பிரமாதமாக்கும் என்று எண்ணிப்புட்டேனே! நீ இல்லாதப்பொ சுந்தரத்தெ அந்த தாஸி வசீகரிச்சாலும், அவனெ நல்ல வழிலெ திருப்பறதா ஒனக்கொரு பிரமாதம்?

சாரதா :—இல்லறவாழ்வு ஒரு துர்க்குண பரிஹாரசாலையல்ல, ஸ்வாமீ!

சங்கரன் :—அதுவேதான்.

சாரதா :—புருஷனைச் சீர்திருத்த முயல்வது வீண் ஐயா!

சங்கரன் :—ஏனோ?

சாரதா :—ஏனென்றால் புருஷர்கள் ஒருவித மீன்களை ஒத்தவர்கள்: மின்னும் பொருளெல்லாம் அவர்களைத் தூண்டியில் இழுக்கும்—

தம்பதிகள் ஆடும் விளையாட்டொன்றே;
ஆட்ட தர்மம் வெவ்வேறுயின்?
புருஷன் பூவையைப் பெற்றிடப் பூமியில் எதையும் [துணிவான்;
பெற்றபின் மறக்கப் பாழ் நரகிலும் குதிப்பான்.
கணத்தினுள் காதல்—கிணற்றில் குதிப்பாள் [காரிகை—அக்
கணத்திலே நழுவி மீள்வான் கணவனும்.

ஆகவே, நான் மணந்த புருஷனுடைய காதலைக் காக்கவென்று ஸர்வதா என்னால் ஒரு பாஸ்பரஸ் சட்டை அணிந்து கொண்டிருக்க முடியாது!

சங்கரன் :—அது உன் கடமையாச்சே அம்மா!

சாரதா :—கடமையா?—நான் மாத்திரம் இப்படி நடந்திருந்தால் அவர் எனக்கு இந்தக் கடமையைச் செய்திருப்பாரா?

சங்கரன் :—நீ அப்படிச் செய்யலாமா? அது அவனுக்கு அவமானமாகாதா?

சாரதா :—அதைப் போலவேதான் எனக்கும் இந்தப் புருஷனால் அவமானம்! புரிந்ததா ?

சங்கரன் :—இல்லே; புருஷனுக்கொரு நீதி, ஸ்திரீக்கொரு நீதி யாச்சே !

சாரதா :—யாரு ஒப்புத்துண்டா அதை ?

சங்கர :—எல்லாருந்தான்.

சாரதா :—ஒப்புத்துக்கவே இல்லே! புருஷக் காமத்தையும் உலக நீதியையும் ஒன்றாகக் குழப்பவேண்டாம்.

சங்கர :—ஏதோ ஒரு சின்னத் தப்பிதத்துக்காக அவனுக்கு நீ நிரந்தர தண்டனை விதிச்சுடப் பார்க்கறியே !

பொன்ன:—அவனென்ன, கொலவாதம் பண்ணிப் புட்டானா, கொலத்தைக் கெடுத்துப் புட்டானாடீ, பொண்ணே ?

சாரதா :—அவைகளிலும் கொடிது இது அத்தை!—உனக்குத் தெரியாது.—அனேக புருஷர்கள் நீக்கமுடியாத வியாதிக்கு உட்படுவது பலநாட்களாகச் செய்து வந்த கெட்ட நடத்தைகளினால் அல்ல; அற்பமான ஒன்றிரண்டு செய்கையினாலேதான் ! அப்பேர்ப்பட்ட புருஷனுடைய மனைவி ஆரோக்கியமிழந்து, சந்ததியற்று, நீக்கமுடியாத கர்ப்ப வியாதிகளுக்கு உட்பட்டு வருந்துகிறாள். பிறவிக் குருடும் குஷ்டமும் உள்ள எத்தனை ஆயிரம் சிசுக்கள் தங்கள் பெற்றோரின் மேக ரோகங்களின் பயனாக உற்பத்தியாகின்றன, தெரியுமா ?

பொன்ன :—சந்தான தோஷத்துக்கு இதுவா மருந்து?—இதென்ன அதிசயம்டீ!—இந்த ஆத்துப் பேஷ்காராம்படையாள் கல்யாணி இருந்தாளே இல்லேயோ—பிச்சையோட தாயார் — அவளுக்கும் இப்படித்தான் சந்தானங்கள் தக்காமல் மூனு நாலு செத்துச் செத்து விழுந்துது. பர்ச்சம் பார்த்ததுலெ, சந்தானக் குத்தம் இன்னு கண்டுது! அப்பொ இந்தப் பேஷ்காரோட அம்மா உசிரோடிருந்தா — நாகம் பாட்டி — என்னெப்போலெ. கன்னியாகுமரிக்கு மாசாந்தம்

நடந்து நேந்துண்டா. அப்பரம் இந்தப் பிச்சை பொறந்து தக்கினுன்-பெத்துப் பன்னெண்டா நேத்திக்கே மூக்கும் குத்தி, "பிச்சை" இன்னு பேரிட்டா. அவனுக்கென்ன வந்துடுத்து இப்போ? —எல்லாத்துக்கும் நேரே வழிகாட்டி யிருக்காளெ பெரியவாள்!

சங்கா :—என்னமானுலும், சாரதா! நீ ஒரு சின்னக் காரியத்தெ மலையாக்கறியெ. ஸ்வல்ப காரியம்—வெகு துச்சம்.

பொன்ன :—ஆமாண்டா, துரும்பையின்னு தூணுக்கரு இவள்!

சாரதா :—இல்லை, அத்தை! இது ஒரு பிரமாதமான காரியம். நீங்கள் இரண்டுபேரும் அறியமாட்டீர்கள். இவரை மரணத்திலிருந்து டாக்டர் காப்பாற்றினுரே யொழிய, இவருக்குப் பிறக்கப்போகும் சந்ததிகளு டைய உடலிலிருந்து இவர் செய்த பாபத்தின் முத்தி ரையை அந்த டாக்டர் மாற்றி விடவில்லை! மாற்ற வும் முடியாது! இந்தப் புருஷனை என் குழந்தை களின் பிதாவாக்குவது நியாயமாகுமா? தங்களுடைய ரத்தமும் மாம்ஸமும் அருவருப்புடன் வெறுக்கும் புருஷருடன் உள்ள சேர்க்கையால் துடிக்கும் பேதைப் பெண்கள் பலரை நான் என் கண்ணுல் பார்த்திருக்கி றேனையா, பார்த்திருக்கிறேன்!

பொன்ன :—ஓங்கப்பா இப்படி ஒன்னை டாக்கட்டருக்குப் படிப்பிச்சார். நீ அந்தப் படிப்பையே கொண்டு ஆமடையானையே ஒதைச்சுத் தள்ளப் பாக்கறே!

சங்கா :—நம்மடவாளெல்லாம் நன்னுக் கொண்டாடுவா ஒன்னை! சும்மாவா பொண்டுகளுக்குப் படிப்புக் கூடாது சொல்ருள்?

சாரதா :—என்னை எங்கப்பா அஞ்ஞான அந்தகாரத்தி லேயே வளர்த்து, குருடுகளையும் குஷ்டங்களையும் மேகரோகிகளையும் உற்பத்தி செய்யும் நிலமாக்கி யிருக்கலாமே!—பெரியோர்களென்ருல் சின்னவர்கள்

செய்யப்போகும் விவாக பந்தத்தின் கெடுதிகளை யறிந்து தடைசெய்வது நியாயமாகும். நரகிலும் பாழான மற்றொன்றில் கொண்டு சிறியோரைத் தள்ளுவது நியாயமாகாது!

(சுப்பராயன் போற்றி பிரவேசிக்கிருன்.)

சுப்ப:—ஸ்வாமி கூப்படரது. காப்பி ரெடி — கிட்டு ஜோஸ்யரு, தீபட்டி பக்கீலு, தகராறு ராஜாஸ்வாமி எல்லாபரும் பந்திருக்கு.

சர்மா:—வருகிருயா, சாரதா? அவர்கள் காத்திருப் பார்கள் நமக்காக.

சாரதா:—Excuse me, father!...உங்களுக்கு முன்பே நான் சமையலறைக்குச் சென்று சாப்பிட்டாய் விட்டது.

சர்மா:—அப்படியென்ருல் சரி — வா, பொன்னு! — சங்கரா! — (சங்கர வாத்தியார், பொன்னம்மாள், சர்மா இம்மூவரும் போகிருர்கள்.)

சுப்ப:—ஆஸொஜ்ஜி பக்ஷணத்தெ நானு சொல்லிக் கொடுத்தமாதிரி பேபிச்சு, நெய்யு பதாம்பருப்பு, கிஸ்துமிஸ், கல்லுகண்டு எல்லா மிட்டு கிண்டி, ஈயம் பூசிய தட்டிலிட்டு பெக்கணம். இது மங்களபுர போத்திமாருடெ பக்ஷணம். எங்க கொச்சுஸாமி யில்லே — பிச்சை ஸாமி — அவுருக்கு ரொம்ப பளரே ப்ரியமுள்ளது. நானு ஒங்களுக்கு ஸொல்லி கொடுத் தல்லெ பாகம் — அது தன்னெ பாகம்–பாரிஸ்தர் பீட்டிலெ அம்மாளு பக்ஷண ஸெய்யச்செ என்னெ விளிச்சா, நானு ஸொல்லி கொடுக்கரது.— நல்லது, பிச்செ ஸாமி யெங்கெ, டாக்கட்டரம்மா?—கலெக் டர் ஸாமி ஸோதிச்சு பிச்சைஸாமி எங்கெ என்னு.

சாரதா:—எனக்குத் தெரியாதெ.

சுப்ப:—எல்லா எப்பொளுதும் பீட்டிலெ தானிருக்கும். இன்னிக்குக் காணரதில்லெ — உத்தியோகத்தினு போகறதில்லெ, பியாபார ஸெயரதில்லெ, கல்யாணங் களிக்கிறதில்லெ, தாம்பூல முறுக்கறதில்லெ. டீ

காப்பி ஒன்னும் குடிக்கிறதில்லெ. நாடகமெளுதும் — நாடகமாடும். பேஷங்கட்டி நாடகமாடும். ஆநாடகத்தை நானு பாத்ததில்லெ.—டாக்கட்டர்ம்மாளெ! விபாகம் களிக்க முடியாதுன்னு, ஸொல்லித்து! மூணு வருஷ முன்பு.—இப்பொ பச்சாத்தாபப் படரது. எந்து பிரயோஜனம்?

(பிச்சையும் சுந்தரமும் பிரவேசிக்கிறார்கள்.)

பிச்சை :—இந்து மதத்துக்கே இதைவிட அவமானம் வேறில்லை யென்பேன்—(சாரதாவைக் கண்டதும்)— Excuse me, sister உங்களைப் பார்க்கவில்லை நாங்கள்.

சாரதா :—நீங்கள் பேசுங்கள். நான் போகிறேன்.

சுந்தரம் :—இல்லை, நீயுமிருக்க வேண்டியவள்தான். இந்த விவாதத்திலும் பங்கு கொள்ளலாம்.

பிச்சை :—எப்பேர்ப்பட்ட மஹாராஜாவானாலும் சரியே, அவனுடைய காம நோய்க்கு இடங்கொடுப்பதற்காக, ஒரு மதத்திலே லோககுரு என்று பறைசாற்றிக் கொள்ளும் ஆச்சாரியனே முன்வந்து ஒரு பெண்ணை மதம் மாற்றத் துணிந்தது, அந்த மதத்துக்குக்கே அவமானம்தான். It's a disgrace to humanity (மனித வர்க்கத்துக்கே அவமானம்!)

சுப்ப :—என்ன பாஷை! என்ன பாஷை! நம்மட நாக்குலெ நொளையறதில்லை!

சுந்தரம் :—இந்து மதத்தில் உலகத்திலுள்ள எவனுக்கும் சேரலாமென்ற உரிமை கிடைத்து விட்டதே!

பிச்சை :—ரத்தக்கண்ணீர் விட்டழுது கொண்டிருக்கும் மனைவி மக்களை உபேக்ஷித்த பலதார சிந்தையுடைய மன்னனுக்கு லோக குருக்களும் பெண்-தரகர்களாகி விட்டார்களென்று தெரிந்து விட்டது. இந்த உரிமை பால்ய விவாகத்தையும் தாசித் தொழிலையும் பாதுகாக்கத் துணிந்த மதங்களுக்கேதான்! பதினாயிரம் கன்னி

மேயோக்கள் தோன்றினாலும் இந்தப் பாழான நாட்டுக்குச் சரணே யேது ?

சுந்தரம் :—நில்லு, நில்லு ! நீ வாதங்களைக் குழப்புகிறாய். மத குருக்கள் மதமாற்றத்துக்கு மாத்திரமே ஜவாப்தாரிகள், விவாகத்துக்கில்லை. பாலிகமி (Polygamy)யை ஆதரிக்கவே இல்லை அவர்கள்.

சுப்பராயன் :—போளி அமியா ? அதென்ன அமி, ஸ்வாமி ?

பிச்சை ;—ஒரு அக்கிரம விவாகத்துக்கு வசதி செய்து கொடுத்தார்கள். அந்த விவாகத்தைத் தடை செய்யவோ, கண்டனஞ் செய்யவோகூடத் துணிய வில்லை அவர்கள். எல்லாவற்றிலும் ஆச்சரியம், இந்தியாவில் சில தலைவர்களும் இந்த விவாகங்களை அனுகூலிப்பதுதான் ! கன்னி மேயோவைக் குறை கூறுவானேன் ?

சுந்தரம் :—நான்ஸி மில்லர் என்ற சர்மிஷ்டை மிஸ் மேயோவின் நாட்டைச் சேர்ந்தவள் தானே ?

பிச்சை :—அது போதுமா இந்தியாவின் அவமானத்தை நீக்கிவிட ? தூங்கும் எதிரியின் சுண்டுவிரலை நக்கி விட்டதாகப் பெருமை பாராட்டினும் குருடாக்கப் பட்ட கோழை யொருவன் ! ஸ்ரீராமனைக் கடவுளாக் கியும் ராவணனை அரக்கனுக்கியும் நீதி கற்பித்த இந்து மதமா இன்று பாலிகமி (Polygamy)யை ஆதரிப்பது ! தீயிலிட்டுச் சுடவேண்டுமிதை !

சாரதா :—ஹியர், ஹியர்! (Hear! Hear!)

சுந்தரம் :—என்னவானாலும் 'பாலிகமி' அவ்வளவு கெடுதியென்று தோன்றவில்லை எனக்கு.

சாரதா:—ஆன்ட் பாலியாண்ட்ரி ? (And Polyandry ?)—பல புருஷரை விவாகம் செய்தல் ?

பிச்சை :—ஹியர் ! ஹியர் ! (Hear! Hear!)

சுப்பராயன் :—போளியமி யென்னால் தெரிஞ்சுதிப்போ; போளியந்த்ரி யென்னால் என்னுது ?

சுந்தரம் :—(கோபத்துடன்) அது அநாவசியம்.

பிச்சை :—அநாவசியமா ?

சுந்தரம் :—ஆமாம்.

பிச்சை :—அப்படியானல் நீ கூறுவது போக்கிரித்தனம்.

சாரதா :—ப்ரதர்! (Brother!) எங்களிருவரையும் தயவு செய்து கொஞ்சம் தனியே விட்டுச் செல்லுவீரா ?

பிச்சை :—(சுந்தரத்தை நோக்கி) ஸ்ட்யூபிட் ! (Stupid !) (போகிருன்)

(சுப்பராயன் போற்றியும் போகிருன்.)

சுந்தரம் :—(சாரதாவைப் பார்த்து) உன்னைச் சவுக்கால் அடிக்கவேண்டும் !

சாரதா :—அடிக்கிறதுதானே ! தொழிலில்லாப் பயங்காளிக்கு நாசூக்கான தொழிலுமாச்சு !

சுந்தரம் :—இவ்வளவு நாளாகக் கணவன்மீது கொண்டிருப்பதாக ஏமாற்றின காதலின் மாதிரியா இது ?

சாரதா :—காதலா ?—ராட் ! (Rot !) என்னை 'ஸெண்டிமெண்டல்' (sentimental) என்று நினைத்தீரோ, ஸர்?

சுந்தரம்:—காதல் கேவலம் ஒரு ஸெண்டிமெண்டா, மேடம்? (Madam ?)

சாரதா :—சந்தேகமென்ன அதற்கு ? அதனுலேயே ஒரு மித்யை அது ; காமமே பிரகிருதியின் உண்மையான விகாரம்.

சுந்தரம் :—ஷேம் ! (Shame !)

சாரதா :—நோ! (No !) அவளைக் கட்டி யணைத்தபின்புமா—?

சுந்தரம் :—என்னது !!—?

சாரதா :— காமத்தின் வீட்டில் நுழைந்ததாம் காதல் !

சுந்தரம் :—அந்த மதம் பிடித்த அகம்பாவி எனக்குச் செய்த அவமதிப்புக்கு நீயும் உடந்தையா ?

சாரதா :—இந்த இந்திய வேசியையா அல்லது அந்த ஆங்கில விலைமாதையா பற்றிப் பேசுகிறீர் ?

சுந்தரம் :—மறுபடியும் அநாவசியமான ஊகமது !

சாரதா:—இல்லவே யில்லே! அந்தச் சீமை ஆஸ்பத்திரியிலே ரிக்கார்டு ஒன்றையுமே ஊகத்துக்கோ அநாவசியத் துக்கோ விடாதபடி அவ்வளவு தெளிவாகத்தானே இருக்கிறது!

சுந்தரம்:—ஐ ஸி! (I see!) அந்தப் பயல் எனக்கெதிராக இழிவான விளேயாட்டு விளேயாடியிருக்கிருனே?—நீயும் என்மீது பொருமை கொண்டிருக்கிருய்?

சாரதா:—பொருமையா? பூ! (pooh!)—தன் குற்றத்தைப் பிறர்மீது சாட்டாதே தயவு செய்து.

சுந்தரம்:—மரியாதையாகப் பேசு, அல்லது வாயை மூடு!

சாரதா:—அப்படித்தான் பேசுகிறேன். அதற்கப்பாலும் போகிறேன். நாளே நீ நடத்தத் தீர்மானித்திருக்கும் விவாக பூர்த்தியையும் உதைத்துத் தள்ளுகிறேன். ஆகையால் முழம் போட்டுப் பேசு!

சுந்தரம்:—என்ன? தன்நினேவோடு பேசுகிருயா அல்லது பிதற்றுகிருயா?

சாரதா:—தந்தை ஆவதற்கே யோக்கியதையை இழந்த உன்னுடன் எனக்குப் பிறக்க இருந்த சந்தானங்களாவது பிதற்ருமல், தம் நினேவோடு இருப்பதற்காகத்தான், நான் அந்தத் தீர்மானம் செய்தேன்.

சுந்தரம்:—உன் உடல்மீது எனக்கு உரிமை உண்டென்பதை மறந்து பேசுகிருய், ஸ்திரீயே!

சாரதா:—ஆனுல் உன் சட்டத்தின் சக்தியை என் மன உறுதியின் எதிராகச் சற்றுச் சோதனைசெய்து பார்க்கிறதுதானே, புருஷா!

சுந்தரம்:—அச்சம், மடம், நாணம் பயிர்ப்பு இந்த நாலு குணங்களிலே ஒன்றேனும் மருந்துக்கும் உண்டா உன்னிடத்தில்?

சாரதா:—ஏன்? இந்நான்கு குணங்களாலும் தொகுக்கப் பட்ட கயிறு, ஆடவச் செருக்கைச் சுருக்கி, உங்கள் விபசார சிந்தையை நெரித்துக் கொல்லும் பாசமாய் அமையட்டுமே!

சுந்தரம் :—உன் பல்லைப் பெயர்த்துவிடுவேன், தெரியுமா?

சாரதா :—ஓஹோ! சர்வ தேசப் புகழ் பெற அது ஒரு குறுக்கு வழியாயிற்று—ஆனாலும், ஸர்! ஒரு ஸ்திரீக்கும் சில வாயாடிகளைப் பார்க்கிலும் பலம் இருக்கலாமென்றதை மறந்து விட்டீரோ?

சுந்தரம் :—என்ன? (என்று சாரதாவை அடிக்க முன் வருகிறான்)

சாரதா:—(சுந்தரத்தின் கையைத் தன் கையால் பிடித்துத் தடைசெய்து கொண்டு) விலகிப் போ!

சுந்தரம் :—என்னை உதைக்கப் பார்க்கிறாயா? (ஓடிச் சென்று மேஜைமேலிருந்த ரூலர்க் கம்பை எடுத்து வந்து) உன் காலையே முறித்துவிடுகிறேனிப்போ!

சாரதா :—அங்கிருந்து ஓரடிகூடக் கால் வைப்பாயானால்...

வி. சர்மா :—(பிரவேசித்து) இதென்ன சுந்தரம்! நில்லு!

(நடேச சாஸ்திரி, பிச்சை, பொன்னம்மாள், சங்கரன், சுப்பராயன் போற்றி இவர்களும் பிரவேசிக்கிறார்கள். கரூர் ராஜா, கிட்டு ஜோஸ்யர், தீவட்டி சுப்ரமணிய ஐயர் இவர்களும் வருகிறார்கள்.)

சாரதா:—இனி ஒரு நிமிஷங்கூட இங்கே நான்......அயாம் ஆப் டு மெட்ராஸ் (I am off to Madras!)—

(கதவைப் படார் என்றடைத்துக்கொண்டு வெளியே விரைந்து போகிறாள்.)

வி. சர்மா :—நில்லு, சாரதா! நானும் வருகிறேன். (வெளியே போகிறார்).

பொன்னம்மாள் :—ஆனாலுந்தான் இவளுக்கு இந்த மதம் ஆகாது.—என்னதான் சேஞ்சுட்டான் இவன்? எங்க சங்குவுடைய அப்பாவும்தான் அப்படியெல்லாம்... வாடா சங்கு! அத்தனும் துட்டேஞ் செலவிட்டு நாம்பள் பாலக்காட்டிலேருந்து இங்கெ வந்து

இப்படி அகமானப்பட வேண்டாமாயிருந்தது! (சங்கரனைக் கூட்டிக்கொண்டுப் போகிருன்.)

பிச்சை:—இன்று மத்தியானம் உன்னை ஒரு வேசியுடன் இங்கே அவள் கண்டது உண்மைதானு?

சுந்தரம்:—அன்னியரும் மடசாம்பிராணிகளும் என் காரியத்தில் தலையிடவேண்டியதில்லை! (ரூலரைத் தரையில் எறிந்துவிட்டு விரைந்து வெளியே போகிருன்)

(சுப்பராயன் அதைக் கையிலெடுக்கிருன்)

பிச்சை:—அது முறிந்திருக்கிறதுபோல் தோன்றுகிறதே?

சுப்பராயன்:—ஆமா ஸ்வாமி! ரண்டு துண்டாய் போயி! (என்று இரண்டு துண்டுகளையும் காண்பிக்கிருன்)

[நடேச சாஸ்திரியார் பேச்சு எழாமல் நிற்கிறர். மற்றவர்களும் ஒருவரையொருவர் பார்த்து விழிக்கிறர்கள்.]

(திரை)

அங்கம் III

சென்னை மாநகரம்

[சென்னைக் கலக்டர் விசுவநாத சர்மாவின் வீட்டிலுள்ள அறை—விசுவநாத சர்மாவும் சாரதாவும் பேசிக்கொண்டிருக்கிறர்கள்.]

வி. சர்மா:—நேற்று மாலை, கடற்கரையில் அவனுடன் அதிக நேரம் சம்பாஷணை செய்துகொண்டிருந்தேன். அவனுக்கும் அந்தக் கமலமென்ற பெண்ணுக்கும் நடக்கப்போகும் விதவா விவாகமும்கூட, ஒரு புதுமையில் மதிமயங்கித் தானே என்று தோன்றுகிறது எனக்கு. இந்த விவாகம் நடக்கப் போவதாக அவனுடைய தகப்பனர் நடேச சாஸ்திரியாருக்குக் கூடத் தெரியாதாம்.

சாரதா:—அந்தக் கமலாவுடைய பூர்வ சரித்திரம் தெரியுமோ உங்களுக்கு?

வி. சர்மா:—தெரியும்.

சாரதா :—அதிலிருந்து அவளுக்கு அவன் மீதிருக்கும் பற்று விளங்கவில்லையா ?

வி. சர்மா :—இருக்கலாம். ஆனால் அவனுக்கு அவள் மீதிலோ ?

[பிச்சை, கமலம், தீவட்டி சுப்ரமணிய ஐயர் இம் மூவரும் பிரவேசிக்கிறார்கள்.]

பிச்சை :—குட் மார்னிங் (Good morning.) எங்களுக்காகக் காத்திருந்தீர்களோ ?

தீ. சுப்ர :—
கமலம் :— } (வந்தனம் செய்கிறார்கள்.)

சாரதா :—சில நிமிஷம்தானாகிறது நாங்கள் இங்கு வந்து. பாதகமில்லை, எல்லாரும் உட்காருங்கள்.

(பிச்சை ஒரு நாற்காலியில் உட்காருகிறான்).

சர்மா :—உட்காருங்கள், மிஸ்டர் ஐயர்! நீயும் உட்கார், அம்மா! (எல்லோரும் நாற்காலிகளில் அமர்கிறார்கள்) நீங்கள் மாடர்ன் ஹிந்து ஹோட்டெலிலா இறங்கியிருக்கிறீர்கள் ?

தீ. ஐயர் :—எஸ், தினமொன்றுக்கு ஒரு ஆளுக்கு மூன்று ரூபாய்.

வி. சர்மா :—உங்கள் விவாக விஷயத்தில் இவ்வளவு ஒளிப்பென்ன, மறைப்பென்ன ? மெட்ராஸில் விதவா விவாகம் ஒரு அதிசயமா ?

தீ. ஐயர் :—எல்லாரும் உங்களைப்போல் விசால மனமுடையவர்களா யிருப்பார்களா ?

வி. சர்மா :—ஜோஸ்யரவாள் வரவில்லையா ?

தீ. ஐயர் :—வருவார் விவாக நோட்டிபிகேஷன் பதினாலு நாளுண்டு. அதுக்கப்ரம் விவாக ரிஜிஸ்ட்ரேஷன் தேதியிலே வருவார்.

வி. சர்மா :—என்னவானாலும் இனிமேலாவது இங்கே வரலாமே. தனித்திருக்கும் சாரதாவுக்கும் உற்ற துணையாச்சு.

தீ. சுப்ர :—ரொம்ப சந்தோஷம்!

வி. சர்மா :—என் ஜவான் உங்கள் சாமான்களை எடுத்து வர உதவுவான், என்னுடைய காரையும் அனுப்பு கிறேன்.

[இதற்குள் பரிசாரகர்கள் பலகாரங்களை மேஜை மீது நிரப்புகிறார்கள்.]

சாரதா :—சரி, இனியும் தாமதமென்ன? வாயும் கையும் சண்டை போடலாமே!

(எல்லோரும் சாப்பிட ஆரம்பிக்கிறார்கள்.)

வி. சர்மா :—இந்த ஜீரா ஸொஜ்ஜி சாரதா கைப்படச் செய்தது. அன்று பிச்சை அகத்தில் வந்திறங்கின போது சமையல் பண்ணுகிற சுப்பராயன் போத்தி இதைப்போல் பண்ணியிருந்தான். அவனைக் கேட்டு உடனே சாரதா கற்றுக்கொண்டாளாம். இன்று தான் அரங்கேற்றம்!

தீ. சுப்ர :—ஓ! இஸிட் ஸோ?—அப்படியா?—(சாப்பிட்டுப் பார்த்து) 100 மார்க்ஸ்! நூறுக்கு நூறும் கொடுக்க லாம். ஸுப்ரீம்லி டெலிஷஸ்! (supremely delicious) வெகு திவ்யமா இருக்கு!

பிச்சை :—எனக்கு இதில் என்றுமே பிரியமுண்டு.

(சாப்பிடுகிறான்.)

சாரதா :—எனக்குத் தெரியுமது.—இதோ உங்களுக்கு மாத்திரம் தயாரித்த ஐஸ் போட்ட பட்டர் மில்க்—மற்றவர்களுக்கெல்லாம் இதோ காப்பியும் கோக்கோவும்.

கமலம் :—என்ன? அதுவும் தெரியுமா?

சாரதா :—ஆமாம்; காப்பியையும், டீயையும் அவர் அன்றே தள்ளிவிட்டாரே — தங்களைச் சந்திப்பதற்கு வெகு நாளைக்கு முன்னடியே.

வி. சர்மா :—விதவா விவாகத்துக்கும் ஜோஸ்யர் சம்மதம் அளித்தாரா?

தீ. சுப்ர :—கபடம் அறியாத இளங் குழந்தை இவள். எந்தப்பயலுடைய ஏமாற்றத்திலும் அகப்படுவாளானல் இவள் கதி என்னவாகும்? நம்முடைய சங்கராச்சாரியார்களும் ஜீயர்களும்தான் இவள்மேலே மொதலாவது கல்லை விட்டெறிவார்கள். போரும், போரும், ஸ்வாமி, இந்தப் பாழும் சமுதாயத்தின் ஊழல்கள்! என்னை 'எக்ஸ்-கம்யூனிகேட்' பண்ணக்கூட முடியாதே இவாளாலெ!

வி. சர்மா:—ஆளுக்கு ஆள் இந்தவிதம் புகார் இருக்கத்தான் செய்கிறது! நமது சமுதாயத்தையே ஒருதரம் 'ஓவெர்ஹால்' செய்ய (பழுது பார்த்துத் திருத்தி அமைக்க) வேண்டியதுதான். என்ன, கமலா! நீ சும்மா இருக்கிறையே ஒன்றையும் வெளியிடாமல்?

பிச்சை :—அவள் அப்படித்தான் — அழுத்தம் — மிகுந்த அழுத்தம்.

தீ. சுப்ர :—அது பெண்களுக்கு இயல்பாச்சே. விமன் ஆர் வெரி டீப் (Women are very deep!)

சாரதா :—அது அநியாயப் பழியாகும். புருஷர்கள் மாத்திரமென்ன, வெகுளிகளோ?

[வேலையாட்கள் மேஜைமீதிருந்து பாத்திரங்களை மாற்றுகிறர்கள்.]

வி. சர்மா :—நீ தாம்பூலம் போடமாட்டாயோ, பிச்சை?

பிச்சை :—நோ, தாங்ஸ் (No, thanks.)

வி. சர்மா :—ஸ்மோக்? (Smoke?)

பிச்சை :—நெவர் (Never.)

வி. சர்மா :—எல்லாத்திலும் எங்காத்துச் சாரதாவைப் போலவேதான்!—வாரும், சுப்பையரே! வயஸான நமக்கு இவர்களைப்போல் ஆகார விஷயங்களில் தியாக சுகத்தை அனுபவிக்க நம்முடலில் ஆரோக்கியச் செழிப்பில்லை! (இருவரும் தாம்பூலம் அணிகிறர்கள்.)

தீ. சுப்ர :—நான் போய் அந்த ஹோட்டெலிலிருந்து சாமான்களைக் கொண்டுவரட்டுமா?

வி. சர்மா:—(மின்சார மணியை அடிக்க, ஜவான் வருகிருன்). இவரை மாடெர்ன் ஹிந்து ஹோட்டெலுக்குக் காரில் கொண்டுபோய்ச் சாமான்களை எடுத்துவா.

தீ. சுப்ர :—வெளியில் போவாயா, பிச்சை?

பிச்சை :—இல்லே.

தீ. சுப்ர:—சரி; நான் கால்மணி நேரத்திலே வந்து விடுவேன். (ஜவானுடன் போகிருர்.)

வி. சர்மா :—மனுஷ்யன் காரியாகாரியம் அறிந்தவராயிருக்கிருர்.

பிச்சை :—வக்கீலாயிருந்தாலும்!

வி. சர்மா :—வக்கீலெல்லாம் 'அன்பிஸினெஸ் லைக்'கா, என்ன?

பிச்சை :—பின்னே சென்ருல் உதைப்பார்கள், முன்னே சென்ருல் கடிப்பார்கள்! இவர்கள் இல்லாமலிருந்தால் இந்தியா இதற்கு முன்பே சுதந்திரம் பெற்றிருக்குமே!

வி. சர்மா :—கவனித்தாயா, சாரதா? இவனை ஒரு மிகைச் சொல் நிபுணனென்று சொல்லவில்லையா நான்?

சாரதா :—ஆம்; ஆனுல் கனைப்பது பாஸிடிவ் (Positive), உதைப்பது கம்பாரெடிவ் (Comparative), கடிப்பது தானே ஸூபெர்லெடிவ் (Superlative)? இவர் கடிக்கிருரா என்ன?

பிச்சை :—(சிரிக்கிருன்.)

ஜவான் :—(பிரவேசித்து) முதலாவது பிரஸிடன்ஸி மாஜிஸ்ட்ரேட்.

வி. சர்மா :—எனக்கு விடை தரவேணும். மோகன விலாஸத்தில் ஒரு பார்ட்டிக்குப் போகவேண்டியிருக்கிறது. என்னை அழைத்துப் போகத்தான் ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட் வந்திருக்கிருர். ஒரு மணி நேரத்தில் வந்துவிடுவேன். [போகிருர்.]

சாரதா :—இதற்குமுன் மெட்ருஸுக்கு வந்திருக்கிறீரா?

பிச்சை :—ஆம், ஒரு தடவை. ஆனால் இப்பொழுது எல்லாம் புதிதாயிருக்கிறது!

சாரதா :—எப்படிப் பிடித்திருக்கிறது ?

பிச்சை :—நான் ஏற்கெனவே ஏகாந்த கிராமவாசத்தை விட நகரவாசத்தை விரும்புகிறவன். அதனால் சென்னை என்னை வசீகரித்து விட்டது!

சாரதா :—க்வைட் ஸோ! (Quite so!) எனக்கும் அப்படித் தான். என் புருஷனை நிராகரித்ததற்கு ஒரு காரணம் இப்பட்டண வாழ்வைவிட்டுக் கிராம வாழ்வுக்கு மாறுவதிலுள்ள வெறுப்பாயிருக்குமோ ? —என்று கூடத் தோன்றுகிறது.

வி. சர்மா :—(மறுபடியும் பிரவேசித்து) சாரதா! நான் வரும்வரையிலும் அவர்களை விட்டு விடாதே வெளியே! [போகிறார்.]

பிச்சை :—உங்கப்பா ஒரு உயர்ந்த பிறவி-உத்தமர்.

சாரதா :—அவரில்லாவிட்டால் நான் தற்கொலை புரிந்து கொண்டிருப்பேனே இதற்குள்! என் துன்பங்களுடன் மிகவும் அனுதாபமுடையவரா யிருக்கிறார்.

பிச்சை :—ஆமாம். இனிமேல் நீ என்னதான் செய்யத் தீர்மானித்திருக்கிறாய் ?

சாரதா :—நான் ஒன்றையுமே தீர்மானிக்கவில்லை. ஒவ்வொரு படியிலும் புருஷரால் சிருஷ்டிக்கப்பட்ட கொடூரச் சட்டம் இருந்துகொண்டு என் பெண்மையின் பூர்ண வளர்ச்சிசையைத் தடை செய்கிறதே.

பிச்சை :—ஆம். சமுதாயமும் அரசாங்கமும், விவாகத்தில் பிரவேசிக்கும் மார்க்கத்தை இப்பொழுதிருப்பதைவிட மிகவும் கடினமாக்கவேண்டும்.

சாரதா :—ஒரு விவாகம் நன்றாக இல்லை யென்று கண்டால் அந்த நிமிஷமே அதை ரத்து செய்யவாவது வசதியளிக்க வேண்டாமா ?

பிச்சை :—உண்மை. ஆனால் தற்கால இந்துச் சட்டம் வேறுவிதமாக அல்லவா விதித்திருக்கிறது. புருஷன்

உயிருடன் இருக்கும்பொழுது புனர்விவாகம் செய்யும் ஸ்திரீக்கு ஏழு வருஷக் கடுங்காவலாம்?

சாரதா :—அது, புருஷனுக்குத் தித்திக்கும் ரஸமும் ஸ்திரீக்கு மாத்திரம் கசப்பான சக்கையு மல்லவா அளிக்கிறது? ஒரு பெண் கணவனுல் உபேட்சிக்கப் பட்டால் இன்பம் இழப்பதோடு இழிவும் அடைகிருள். ஆனுல் அந்தக் காமுகனுக்கோ புதிய 'சான்ஸு'களுக்கு ஜாஸ்தி யோக்கியதை உண்டாகிறது!

பிச்சை :—ஆகையால்தான் உலகிலுள்ள புருஷர்களில் பாதிக்கு மேலும்......

சாரதா:—ஜார புருஷர்கள்! அவர்களில் ஒரு பாதி, பெண்ணை யடையப் பதிபோட்டுக் கொண்டிருக்கிருர்கள்; மறு பாதி, பெண்ணை விட்டோடப் பார்க்கிருர்கள்!...... ஆம், எனக்கு இப்பொழுது தகுந்த புத்திமதி சொல் வோர் யாருமே யில்லை, தாயில்லா தவ ளாகையால் என் ஹிருதயத்தை யாரிடம் வெளியிட்டழுவேன்? சகோ தரன் இல்லாக் குறையையும் நான் அடிக்கடி உணர்ந்ததுண்டு. நீர் இப்பொழுது தற்செயலாக இங்கு வந்தது என்பாக்கிய மென்பேன்.

பிச்சை :—நான் யார்? சற்று முன் நீ கூறியபடி ஏதோ ஒன்றிரண்டு புதிர்களைக் குழறிக் கனைத்துக்கொண் டிருக்கும் கூத்தாடிதானே! என் கொள்கைப்படி நடக்கக்கூட எனக்குத் தைரியமிருக்கிறதோ என்று தெரியாதே!

சாரதா :—சொல்லும், எனக்கு இருக்கிறது தைரியம்!

பிச்சை :—நான் நன்ருக ஆலோசனை செய்யவேண்டும்.

கமலா :—நான் சொல்லட்டுமா?

சாரதா :—சொல்லுங்களேன், தயவு செய்து.

கமலா :—மறுமணம் செய்து கொண்டு அதனுல் நேரிடும் பலன்களை எதிர்பாருங்கள்.

பிச்சை :—அப்படிச் செய்வதில் தவறில்லை. ஏழு வருஷக் கடுங்காவல்மட்டும் கிடைக்கும்!

சாரதா :—கடுங்காவலைப் பற்றிப் பயமில்லை ; ஆனால் அது நீதியாகுமா ?

கமலா :—ஏன் நீதியாகாது? சட்ட விரோதம்தான், ஆனால் நீதிக்கு மாறல்ல! நாம் இன்று மூல தர்மங்களென்று போற்றிவரும் பலவும் ஒரு காலத்தில் குற்றமாகக் கணிக்கப்பட்டவைகள்தான்! பொருள், விவாகம், மதம், கல்வி இவைகளைப் பற்றிய உரிமைகளெல்லாமே சரித்திரத் தொகுதியில் புரட்சிபோல மாறுபட்டதுண்டு; இன்னும் மாறுபடலாம்.

பிர்சை :—ஆனால் மாமூலைத் தாங்குபவர், என்றுமே அந்த மாறுபாட்டுக்கு விரோதமாகச் சட்டமியற்ற முயலுவார்கள். நம்முடைய பேச்சுரிமையை அமிழ்த்தி விட்டு அவர்கள் கொள்கையை நிலைநிறுத்துவார்கள்.

கமலா :—அப்படிப்பட்ட அநீதியை எதிர்ப்பது நமது கடமை. தருமத்தையும் தத்துவத்தையும் அதிகாரம் வெல்லாதிருக்கும்படி அதனுடன் சண்டையிட வேண்டும். இச்செய்கைக்காக நம்மை உலகம் சிலுவையில் அறைந்து கொல்லுமானாலும், நாளை நமது வீரத்தை மெச்சி, கோயில்கட்டிக் கும்பிடவும் செய்யும்!

சாரதா :—ஆம்; ஆனால் இப்படிப்பட்ட ஸாத்விகக் குற்றம் செய்வதற்கு—இரண்டுபேர் வேண்டுமே. அதிலும். என் துணைவன் ஒரு புருஷனாகவும் இருக்கவேண்டுமே. —நாம் குறை கூறும் புருஷ வர்க்கத்தைச் சார்ந்தவனாக எந்தப் புருஷன் என் பொருட்டுத் தன் இனத்தாரின் உரிமைகளை அழித்து விட்டுச் சிறைக்கும் செல்லுவான்? ஏதேனும் திண்ணை தூங்கி ராமனைப் பிடித்துக் கொள்வதா நான்?

கமலா :—(எழுந்து, சாரதாவின் கையைப் பற்றி) உண்மையில் ஊக்கமிருக்கிறதா உமக்கு ?

சாரதா :—சந்தேகமா அதற்கு? என் இதயத்தினுள் இருந்து ஒரு எரிமலை வெடித்துத் தெறிக்க முயலுகிறது!

கமலா :—உண்மையிலா ?

சாரதா :—ஆம்......என்ன சொல்லுகிறீர் ?

கமலா :—இந்த ஸத்தியப் போருக்குத் துணைவனாக நான் உமக்கு இவரையே தானம் செய்வதானால், இவருடைய கரத்தை அங்கீகரிப்பீரா ?

சாரதா :—அடி பாவி !

பிச்சை :—என்னையா ?...!!!

கமலா :—பதறுதீர் !.. ஆம்.

சாரதா :—என் பாவமே !...அவரையா ?

கமலா :—ஆம்...என்னுடைய பிச்சையை.

சாரதா :—(சற்று அசைவற்று நின்று) நீரென்ன செய்வீர் பின்பு ? உங்களுடைய ஸ்தானத்தை நான் கவர வேண்டுமோ ?..........அதைவிட உயிருள்ளளவும் ஏகாந்தமாக வாழ்வேனே!

கமலா :—ஒருகாலும் கூடாது.

சாரதா :—என் தலை சுழலுகிறது.

கமலா :—(பிச்சையை நோக்கி) இவ்வளவு நாளாக நான் அனுபவித்த ஏகாந்த வாழ்வின் முடிவில் எனக்கு இப்பொழுது கிடைத்திருக்கும் தியாக சந்தர்ப்பத்தில் நான் உம்மை மாத்திரமல்ல, எதையும் துறந்திருப்பேன் ! இந்தியாவில் வாய்ப்பூட்டு இட்டிருக்கும் பெண்ணுலகத்திற்கு நான் செய்யவேண்டிய கடமையை நான் உணர்ந்து விட்டேன் !

சாரதா :—நோ, ஸிஸ்டெர்! (No, sister !) நீங்கள் அவரை விட்டுப் போகக்கூடாது. அவருடைய இன்பத்தைக் கவர்வதைவிட நான் இறப்பேன்.

பிச்சை :—நான் கனவு காண்கிறேனா, என்ன ?

சாரதா :—என் மனம் கொதிக்கிறது. என்றால் எந்தச் சட்டத்தையும் மீற முடியும். ஆனால் யாதொரு தம்பதிகளுடைய இன்பத்தை மட்டும் கவரமுடியாது !

கமலா :—மை டியர் ஸிஸ்டெர்! (My dear sister!) என் பொருட்டு இளகிய மனங்கொண்டு, தாங்கள் செய்ய வேண்டிய கைங்கரியத்திலிருந்து பின்வாங்கினீர்களானல், உங்களை என் சிநேகிதி யென்றே மதியேன். தாம்பத்ய சுகத்தை நான் விரும்புவதானலும், விதவையான எனக்கு இன்னும் வேறு புருஷர்கள் கிடைக்கலாம். ஆனல் விதவையோ கன்னிகையோ அல்லாத உமக்கோ? இது அல்லாமல் வேறு சான்ஸுண்டா?......இனி அவர் காரியம்...(பிச்சையை நோக்கி) நான் உம்மை என் பந்தனத்திலிருந்து விடுவித்திருக்கிறேன்! என் காதலர் என்ற நிலையில் உம்மை இந்தப் போர்முனைக்கு அனுப்புகிறேன்! இந்த ஆத்மத் தியாகத்திற்கு ஏற்ற சந்தர்ப்பத்தையும் எனக்கு அளிப்பதோடு, பாமர உலகத்தாருடைய கொண்டாட்டத்திற்கும் எனக்குப் பாக்கியம் அளித்தவராவீர்!

சாரதா :—ஆனல் என் சுயநலம் என் மனச்சாட்சியை என்றும் புண்படுத்துமே!

கமலா:—படுத்தாது...ஏனென்ருல் இறந்த பின்பு கிடைக்க வேண்டிய கீர்த்திகூட உமக்குக் கிடைக்காமல் போய் விடலாம். ஸாத்விக எதிர்ப்புக்குப் பரிசு மரணமே! அந்த மரணத்தையும் பொதுஜனம் ஒருவித அகம் பாவமென்றே கருதுகிறது சிலவேளைகளில்...அதனல் தானே மனுஷ்ய வர்க்கம் எக்காலத்திலும் தீர்க்க தரிசிகளைச் சிலுவையில் அறைகிறது!

பிச்சை :—நான் உன்னைத் தனியே விட்டுச் செல்லவா?

கமலா :—என்னைப் பற்றிக் கவலைப்படாதீர்! உலகம் முழுவதுமே என்னை ஆதரிக்கும். நீங்கள் இருவரும் தான் துணையற்றவராவீர்கள்!

சாரதா :—ஸிஸ்டர்! எங்களுடைய இந்த எதிர்ப்பு விவாகத்துக்குத் தக்க மூல நியாயங்கள் இருப்பதாக நீங்கள் உண்மையில் நம்புகிறீர்களா?

கமலா :—அப்படிச் சந்தேகமானல் இன்னமும் ஒரு உண்மையை விளக்குகிறேன். தாம்பத்யத்திலுள்ள தோல்விகளுக்குக் காரணம் என்னவென்றால், ஸ்திரீ முன்யோசனேயே செய்யாததும், புருஷன் நிகரற்ற பின்யோசனே செய்வதுமே.........சகோதரரே! நீர் விதவா விவாகமென்ற புதுமையில் மயங்கியும், நான் உம்மீதுள்ள காதலில் மயங்கியும் குருடர்களாயிருந்தோம் இதுவரையிலும்! இன்று நான் உங்கள் இருவரிடையிலுமுள்ள அணைக்க முடியாத, ஜீவசக்தி பூண்ட, பாசத்தை நேரில் பார்த்தறியாதிருந்தால், இன்னமும் நான் குருடியாகவேதான் இருந்திருப்பேன்! நீர் அவளுக்கு உரிமை யுள்ளவர்தான். அதனல் நான் இன்று உம்மை அவளுக்குத் தானம் செய்ததில் ஒரு விதத்திலும் நஷ்டப்படவில்லே!

சாரதா :—ஸிஸ்டெர்!

கமலா :—போதும்! இனி நாம் மாயைகளே ஒழித்துக் காரியங்களேக் கவனிப்போம்.

சாரதா :—உங்கப்பாவையும் எங்கப்பாவையும் அறிவிப்பதெப்படி ?

கமலா: — அப்படிக் கேட்கவேணும் — அவர்கள் இருவரும் விவாக மாகும்வரையில் இதைப்பற்றி அறியவே வேண்டாம். இந்த நகரைவிட்டு வெளியே சென்று சிங்கப்பெருமாள் கோயிலிலோ, திருப்பதியிலோ ஸம்ஸ்கார விவாகச் சடங்கை நடத்திவிட்டு, மறுபடியும் இங்குவந்து எல்லாப் பத்திரிகைகளிலும் விளம்பரப்படுத்திவிட வேண்டும்.

பிச்சை :—புருஷன் பல சந்தர்ப்பங்களிலும் நேர்வழி தெரியாமல் தத்தளிக்கும்பொழுது ஸ்திரீதான் அவனுக்கு வழிகாட்டுகிருள். ஆகவே, கமலா! நீ விளையாடுவது ஒரு 'டைனமைட்டு'டன் என்று ஞாபகமிருக்கட்டும்.— நீ கூறுவது இதய பூர்வமாகத்தான ?

கமலா :—ஆம்; திரிகரணங்களாலும் — மனே வாக்குக் காயங்களாலும்—உங்களே வேண்டிக் கொள்கிறேன்

—பிரார்த்திக்கிறேன் — கட்டளை யிடுகிறேன், எனக்காக இதைச் செய்வீர்கள் என்று!

(இச் சமயம் தீவட்டி சுப்ரமணிய ஐயர் வருகிறார்).

சாரதா :—மாடிமீது வாருங்கள்! சாமான்களை வைக்க வேண்டிய இடத்தைக் காண்பிக்கிறேன். (தீவட்டி சுப்ரமணிய ஐயரை அழைத்துக்கொண்டு உள்ளே போகிறாள்).

பிச்சை :—இதென்ன காரியம், கமலா ?

கமலா .—நமது இன்பத்துக்கு வழி! (விரைந்து உள்ளே போகிறாள்).

(திரை விழுகிறது.)

அங்கம் IV

சென்னை மாநகரம்

[மாடர்ன் ஹிந்து ஹோட்டேலில் ஓர் அறை—வக்கீல் தீவட்டி சுப்ரமணிய ஐயரும் சுப்பராயன் போற்றியும் பேசிக்கொண்டு நிற்கிறார்கள்.]

சுப்பராயன் :—நபஸ்கார, பக்கீலுஸ்வாமி!

தீ. சுப் :—எப்பொ ?

சுப்பராயன் :--நேத்தக்கி பன்னு ஸ்வாமி!-- காலத்து ரயிலிலெ நானும் பேஷ்காரு ஸ்வாமியும். நம்மட கொச்சு பிச்செ ஸ்வாமி யில்லெ? அபுருக்கும் பாரிஸ்தர் சுந்தரஸாமீடெ பார்ய இல்லெ, ஸாரதம்ம டாக்கட்டரு--அவுளுக்கும் பிபாகம் நடந்தது இந்த ஸென்னபட்டணத்திலெ! கலெக்கட்டர் ஸ்வாமி அறியாது, பேஷ்கார் ஸ்வாமிக்கும் தெரியாது. ரகஸ்ய பிபாஹம், ஸ்வாமி!--ஸர்க்கார் ஸட்டத்துக்கு பிரோதமா. பலிய ஸ்வாமிக்கி கம்பி பன்னுது-கண்ணு நீரு பிட்டுது. என்ன ஸங்கடம் வன்னு போச்சு பாக்கணம். நம்மட மனஸு பொறுக்கத்தில்ல.

நானு போயி பிச்செ ஸாமியெக் கண்டுது. பிபர மெல்லாம் சோதிச்சு நானு. ஸாரதம்மையேங் கண்டு ஸோதிச்சு நானு. பட்டணத்துலெ மாடெண் கபே யில்லெ? அங்கெ யிருக்கு ரண்டுபேரும். ஸாரதம்ம ஸொல்லிச்சு : "ஒண்ணுமில்லெ, போத்தி! ஏளு பருஷ ஜெயிலு பாஸம். பின்னெ திரிச்சு பன்னு இன்னொரு பிபாஹ களிக்கும்!" இன்னுஸொல்லிச்சு. எந்து தைரிய, ஸ்வாமி! நம்மட மனஸு நடுங்கரது.

தீ. சுப்ர :—கமலா!

கமலா :—(உள்ளிருந்து வெளியே வந்து) என்ன, அப்பா?

தீ. சுப்ர :—வெளியே போகிறேன். உனக்குத் துணை இதோ! (போகிறார்).

சுப்பராயன் :—(வெளியே உற்றுப் பார்த்துத் திரும்பி வந்து ரகஸ்யமாகக் கமலாவை நோக்கி) பிச்செ ஸ்வாமியும் ஸாரதம்மாளும் இப்பொ இங்கெ பரும். ஸாரதம்ம என்னெ மும்பு கூட்டி ஸொல்லி யனுப்பித்து.

கமலா :—(ஆச்சரியத்துடன் பார்க்கிறாள்).

சுப்பராயன் :—நானு எல்லாம் அறியும், கமலம்ம! ஸாரதம்ம ஸொல்லியாச்சு.—பாரிஸ்தர் சுந்தரஸாமி கூட இங்கே பந்திருக்கரது அறியுமோ, கமலம்மா? நானு பாத்தது இப்பொ—இந்த ஹோட்டலிலெ. அடுத்த முறியிலெ தாமஸிக்கரது. ஸாரதம்மெ கிட்டெ ஸொல்லப் போரது பேகத்துலெ நானு! (போகிறான்.)

(தீவட்டி சுப்ரமணிய ஐயர், கிட்டு ஜோஸ்யர், சுந்தரம் இம்மூவரும் பிரவேசிக்கிறார்கள். தீவட்டி சுப்ரமணிய ஐயர் கையில் "சுந்தரம்" என்று பெயரெழுதி யிருக்கிற ஸூட் கேஸ் ஒன்று இருக்கிறது. (இவர்களைக் கண்டதும் கமலா உள்ளே போகிறாள்).

சுந்தரம் :—இந்த அவமானம் உங்களை விடப் பதின்மடங்கு எனக்கல்லவா? என் ஹிருதயம் துடிப்பது எனக்குத் தெரியும்.

கிட்டு :—அந்தப் பையன் இப்பிடிப் போவன் இன்னு நான் நெனேக்கவெ இல்லே! அவனெ நம்பிக் கமலாவெ அவனண்டெ ஒப்பிச்சேன்.

தீ. சுப் :—ப்ரீடம், ஸோஷல் ரிபார்ம் (Freedom, Social reform) இன்னெல்லாம் பேசிப்பேசிக் கடைசியா அசலாத்துக்கார ஞம்பிடையாளேயே................ பரம சண்டாளன்!

கிட்டு :—நாடகமாடி நாடகமாடி, நாடகக்காரன் புத்தியே வந்துட்டுது போலிருக்கு!

தீ. சுப் :—என் டாட்ட (daughter)ரை வயத்தெரியப் பண்ணிட்டு அவன் வாழப் போருஞ?

கிட்டு :—சுப்பனேட தந்தி வந்திராட்டா எனக்கிதொன் னுமே தெரிஞ்சிராதே!

சுந்தரம் :—எனக்கும் அப்படித்தான்.

தீ. சுப் :—இந்த ந்யூஸ், எல்லா டெய்லி பேப்பர்ஸ் (daily papers) லேயும் அப்பியர் (appear) ஆயிருந்துதே!

கிட்டு :—நான் பேப்பராடா வாசிச்சுண்டிருக்கிறவன்?

தீ. சுப் :—இவனுமா வாசிக்கமாட்டான்?

சுந்தரம் :—நான் இந்தியன் நியூஸ் பேப்பர்ஸ் (news papers) தொடரதே கிடையாது. பிரிட்டிஷ் பேப்பர் (British papers)ஸும் ஜர்னல் (Journals)ஸும் தான் பார்க்கிற வழக்கம். மேலும் நானிந்த ஹோட்டலில் வந்திறங்காதிருந்தால் உங்களைப் பற்றிய விஷயமும் தெரிந்திருக்காது.

தீ. சுப் :—நம்ம ஊர்லெ வெச்சே இதுகளுக்குள் இன்டிமெஸி டெவலப் (intimacy develop) ஆயிருக்கும் இன்னு நெனக்கறேன்.

சுந்தரம் :—நிச்சயமாக. அதுதானே அன்று நான் அவளைச் செருப்பா லடிக்கப் போனேன்!

தீ. சுப் :—பேனெடுக்கறேன் இன்னு காதெக் கடிச்சானே, காதகன்! (கண்ணீரைத் துடைப்பதுபோல் அபிநயம் செய்கிருர்.)

சுந்தரம் :—மாயக்கார மோஹினிகள் எப்பொழுதும் பத்தினிப் பெண்களைவிட மின்னுவார்கள். அவளுடைய வலை ஐயா!

கிட்டு :—அதொன்னும் அப்பொ நேக்குத் தெரியலே. அவன் வார்த்தையை நம்பி யிருந்தேன்! கமலமும் நம்பி யிருந்தா.

சுந்தரம்:—நீங்களேன் இந்த ஹோட்டெலுக்கு மாறினீர்கள்? கலெக்டர் போகச் சொன்னரா உங்களை?

தீ. சுப் :—இந்த நியூஸ் (news) கேட்ட அன்னிக்கே நான் ஷிப்ட் (shift) பண்ணிட்டேன் இங்கே.

கிட்டு :—அந்தக் கலெக்டர் பாவம் காரிலெ வந்து ரெண்டு தடவை தன்னுத்துக்கு வரும்படிக் கூப்பிட்டாராம் இவாளை. ஆனல் இவா தான் போகலெ.

தீ. சுப் :—கமலா தான் வாண்டாம் இன்னுட்டா. இந்த ஜில்டிங் (jilting)கை அவள் ரொம்ப பீல் (feel) பண்ரா. இங்கெ தனியா இருந்தாப் போரும் இண்ரா. எனக்குச் சொக்கன் ஆப்பை பிடுங்கின கதைபோலாச்சு!

சுந்தரம் :—இந்தக் காமாட்டி கையிலிருந்து தப்பினது அவளுக்கு நல்லகால மென்பேன். இவனைவிடப் பதிணயிரம் மடங்கு மேன்மை யுடையவர்கள் கிடைப்பார்கள்.—ஆனல் என் அவமானத்தைப் பாரும். என் வீட்டுக்கு வந்து, என்னை இழிவு படுத்தி நிராகரித்து விட்டு, இங்கு வந்து என் பெயரை இந்நாட்டாரும் கேட்டுச் சிரிக்க வேணுமென்ற துரெண்ணத்துடன், அவளுடைய ஜார புருஷனையே மணந்து அதைப் பத்திரிகைகளிலும் விளம்பரப் படுத்தி யிருக்கிருளே! நான் எத்தனை இழிவுடையவனு யிருந்தாலும்கூட இத்தனை குரூரமாக அவள் நடக்கலாமா?

தீ. சுப் :—யூ ஆர் எ ஜில்டெட் மேன் அண்ட் கமலா இஸ் எ ஜில்டட் வுமன் (You are a jilted man and Kamala is a jilted woman.) நீ தள்ளி வைக்கப்பட்டவன்,

அவள் தள்ளி வைக்கப்பட்டவள். ரெண்டுபேரும் ஒரே போட்டுலெதான் டிராவல் (travel) பண்ரேன்!

சுந்தரம் :—அதோ உள்ளிருப்பது அவள் தானே ?

தீ. சுப் :—எஸ்.

சுந்தரம் :—இந்தக் கிளியை வேண்டாமென்று அந்தப் பூனையைப் பற்றினுனே அவன் !

கிட்டு :—கிளியோ, குருவியோ? — பூனை இதைத் துரத்திட்டுது !

சுந்தரம் :—உலகத்தில் எங்கே சென்ருலும் கிளிக்கு ஆதரவுண்டையா !

கிட்டு :—என்ன சொல்ருய் நீ, சுந்தரம் ? இருபத்தஞ்சுக்கு மேலான விதவையைக் கல்யாணம் பண்ணிக்க எவன் வாரான் இந்தக் காலத்திலெகூட ?

தீ. சுப் :—கெழங்களும், காமாட்டிகளும், கழிசறைகளும், ஏம்போக்கிகளுந்தானே அப்லிகேஷன் (application) போடரு! வேறெ ஆருவரா ?

சுந்தரம் :—யார் வருளா ?—சரி, என்னை எதில் சேர்க்கிறீர்கள்? காமாட்டியிலா, கெழத்திலா, கழிசறையிலா ?

தீ, சுப் :—ஸீரியஸ் (Serious) ஆ ப்ரோபோஸ் (propose) பண்றேளா ?

சுந்தரம்:—ஸீரியஸ் ஆகத்தான் கேட்கிறேன். இழந்த இன்பத்தை வேறு எவ்விதம் புனருத்தாரணம் செய்வேன் நான் ?

தீ. சுப் :—பழி வாங்குகிறது எப்போ ?

சுந்தரம் :—ஆம், அது முடிந்த பின்புதான் விவாகம். அந்தப் பாவிகளுடைய இல்வாழ்க்கையில் குண்டு போடாவிட்டால், நான் இருந்தென்ன, இறந்தென்ன? அதுக்கெல்லாம் தயாராகத்தான் வந்திருக்கிறேன்.—அந்த ஸூட் கேஸை ஜாக்ரதையாக வைக்கவேணும்.

தீ. சுப்ர :—அப்பிடியானு கம்ப்ளெயின்டை (Complaint) இன்னிக்கே பைல் (file) பண்ணிடலாமே ?

சுந்தரம் :—கம்ப்ளெயின்டா? தொலேந் தொழியட்டும் நாய்கள்! அதுகளேத் துரத்திக்கொண்டு ஒரு க்ரிமினல் கேஸ் போட்டு, நானும் கூட ஓடவா?—மாட்டவே மாட்டேன்!

தீ. சுப்ர :—பாஷ்! இப்படி முறம் தட்டிப் பயப்படுத்திணுப் போருமையா நீர், பதிணுயிரம் ரூபாய் செக் (Cheque) கையிலெ வந்துடுமே! கலெக்டரும் ஒரு பேஷ்காருமல்லவா ரியல் பார்டீஸ் (Real Parties)?

சுந்தரம் :—(யோசனே செய்து) இப்பொ அவ்விருவரும் எங்கிருக்கிருர்கள்?

தீ. சுப்ர:— :—மாடர்ன் கபே (Modern Cafe)யிலே இருக்கிறதுகளாம். இன்னி வரைலியும் எங்கும் சுத்தித் திரிஞ்சுதுகள்—இன்னமே யாரும் அழைச்சுக் காப்பியோ சாப்பாடோ குடுக்கிறவா ளில்லெ. — கமலா!

கமலா :—(கதவருகில் வந்து நிற்கிருள்.)

தீ. சுப்ர :—இந்த ஸூட் கெஸை ஜாக்ரதையாக உள்ளே வை. நாங்கள் போகிருேம்.

சுந்தரம் :—அதற்குள் என் பிஸ்டல் இருக்கு அம்மா! அதற்குப் பூட்டுமில்லே. அதனுல் ஜாக்ரதை!—வரட்டுமா? (என்று அவளே நோக்கி ஒரு முறை கண் சிமிட்டி விட்டுப் போகிருன்.)—வாருங்கள்!

தீ. சுப்ர :—வாரும், அண்ணு!

கிட்டு :—எங்கேடா? — நேக்கு அந்தப் பேஷ்காரைப் பார்க்கணமேடா!

தீ. சுப்ர :—எல்லாரையும் பார்க்கலாம்! வாரும்.

[சுந்தரம், தீவட்டி சுப்ரமண்ய ஐயர், கிட்டு ஜோஸ்யர் இம் மூவரும் வெளியே போகிறர்கள்.]

கமலா:—(சற்று அசைவற்று நின்றுவிட்டு, ஸூட் கேஸைத் திறந்து கைத் துப்பாக்கியை எடுத்துப் பரிசோதனே செய்துவிட்டு மறுபடியும் உள்ளே வைக்கிருள். ஸூட்கேஸை எடுத்து அறைக்குள் வைத்துவிட்டு வெளியே வந்து வாசலே நோக்கி நடக்கும்பொழுது, பிச்சையும் சாரதாவும் பிரவேசிக்கிருர்கள்.)

சாரதா :—ஹலோ ஸிஸ்டெர்! (Hullo sister!) (ஓடிச் சென்று கமலாவைக் கட்டி யணைத்து) உமது பாத ரக்ஷையில் படிந்த தூசியைத் துடைக்கக் கூட யோக்யதையற்றவர்கள் நாங்கள். சிறைச்சாலைக்கு நாங்கள் பிரயாணமாவதற்கு முன் எங்களுக் கிந்த பாக்கியத்தை அளித்த உம்மைப் பணிய வந்திருக்கிறோம்.

கமலா :—ஸிஸ்டெர்! உமது ஆத்மா இப்பொழுதாவது சாந்தியும் திருப்தியும் அடைந்ததா ?

பிச்சை :—ஆனால் உன்னுடைய சாந்தம் ?

கமலா :—என்னைப் பற்றிக் கவலைப்படவே வேண்டாம்; உங்கள் வருங்கால வாழ்வைப் பற்றித்தான் எனக்கு என்றுமே கவலையா யிருக்கிறது.

பிச்சை :—எங்களுக் கென்ன வரப்போகிறதென்று அன்றைக்கே தெரியுமே — சிறைவாசம் — அதற்கு நாங்கள் ஸந்நத்தராகவே இருக்கிறோமே!

கமலா :—வாஸ்தவம். ஒருவேளை நீங்களிருவரும் இன்னும் ஒருமணி நேரத்திற்குள் பிரிக்கப் பட்டாலும் படலாமல்லவா ? தைரியம் கெட்ட நான் உங்களை முன்னே தள்ளிவிட்டுப் பின்னே ஒளிந்திருந்து வேடிக்கை பார்க்கிறேனே ! (அவள் கண்களில் நீர் நிறைகிறது.)

பிச்சை :—ஒருவேளை நாமெல்லோருமே இந்த நிமிஷத்திலேயே பிரிக்கப்பட்டாலும் படலாம்.

கமலா :—ஆம். நம்முள் யார் யார் எந்தெந்த இடங்களிலிருந்து என்னென்ன செய்யப் போகிறோமோ ?— நீங்களிருவரும் காதலென்ற சக்தி யொன்றிருப்பதையே மறுக்கிறவர்கள். ஆனாலும் அக்காதலே காதலர்களுக்குச் சமயோசிதமான யுக்திகளை உபதேசிக்கும் சூக்ஷ்ம ஆத்மா!—என்று எனக்குத் தோன்றுகிறது.—சாரதா! உம்மை நான் என்னிலும் வேருக நினைத்ததில்லை. நீர் என் காதலருடைய காதலி. அதனால் உங்கள் பொருட்டு இந்தப் பேதை என்ன விதமான கைங்கரியம் செய்வதா யிருந்தாலும்,

அதைக் கருணையுடன் அங்கீகரித்தருளுவீர்! (கண்ணீரைத் துடைத்துக் கொள்கிருள்.)

பிச்சை :—எங்களுக்குத் தேறுதல் சொல்ல வேண்டிய நீயே இப்படிக் கண்ணீர் விட்டால்........?

சாரதா :—இவ்வளவு வருத்த முறுவீரென்று அப்பொழுதே அறிந்திருந்தால் நான் அவரை உம்மிடமிருந்து கவர்ந்தே யிருக்க மாட்டேனே!

கமலா :—என்னை மன்னிப்பீர், சாரதா! நீர் என்னைத் தவறுதலாக மதிக்காதீர். என் கண்ணீர் வேறு காரணம் பற்றி!

சாரதா :—அதென்ன காரணம்? நாங்களறியக் கூடாதோ?

கமலா :—இவ்விதம் திரை மறைவிலிருந்தாவது விடுதலையை விரும்பும் மாதர்கள் நம் இந்தியாவில் உற்பத்தியாக இன்னும் ஒரு நூற்ருண்டு வேண்டி வருமே என்ற நினைவு திடீரென்று என் உள்ளத்தைப் பாதித்தது; என் கண்களையும் கலக்கியது. என் நிலைமையில் நீர் இருந்தாலும் வேறு விதமாக நடந்திருக்கமாட்டீர்.

சாரதா :—(கமலாவின் கைகளைத் தன் இரு கரங்களாலும் பற்றிக்கொண்டு) அக்கா! இன்று முதல் இவ்வீர சுதந்திரக் கொள்கையை நாடெங்கும் பரப்பிடும் ஜ்வாலையாக்கிவிட்டேன் என்று உணர்ந்திடுவீர்! பத்து வருஷங்களுக்குள் இந்நாட்டிலுள்ள ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு வீரப் புதல்வியாவது தோன்றும்படிச் செய்கிறேன்! உளுத்த சட்டங்களை யெல்லாம் தூள் தூளாகப் பிய்த்துப் பறக்கவிடும்படிச் செய்கிறேன், பாரும்! (கமலா சாரதாமீது சாய்கிருள்! சாரதா அவளை அணைத்துக் கொள்கிருள்).

[இச் சமயம் சுந்தரம், கிட்டு ஜோஸ்யர், தீவட்டி சுப்ரமணிய ஐயர், நடேச சாஸ்திரியார், விசுவநாத சர்மா, திவான்பகதூர் வேங்கு ஐயங்கார்,

சுப்பராயன் போற்றி இவர்கள் எல்லோரும் பிரவேசிக்கிறார்கள். கமலாவும் சாரதாவும் ஆலிங்கனம் செய்ததைச் சுந்தரமும் தீவட்டி சுப்ரமணிய ஐயரும் சுப்பராயன் போற்றியும் பார்க்கிறார்கள். மற்றவர்கள் பார்க்கு முன் அவர்கள் அகன்று விடுகிறார்கள்.]

தீ. சுப்ர :—(கமலாவையும் சாரதாவையும் பார்த்து) வாட் இஸ் திஸ் (What is this ?) கமலா ?

சுந்தரம் :—என்ன இது ?

கமலா :—என் கடமை ! (விரைந்து உள்ளே போகிறாள்.)

வெங்கு ஐயங்கார் :—நாம் இங்கே உட்காருவோமே. (என்று ஒரு சாய்வு நாற்காலிமேல் உட்கார்ந்து கொள்ளுகிறார்.)

[சுந்தரம் ஜன்னலின் மேல் உட்காருகிறன். நடேச சாஸ்திரியாரும் விசுவநாத சர்மாவும் ஐயங்காருடைய இரு பக்கங்களிலுமாய் நாற்காலியில் உட்காருகிறார்கள். கிட்டு ஜோஸ்யர் அங்கிருந்த ஒரு பெஞ்சில் உட்காருகிறார்.]

தீ. சுப்ர :—(வெங்கு ஐயங்காரைப் பார்த்து) அவர்கள் தான் பிச்சையும் சாரதாவும்.

வே. ஐயங்கார் :—ஐ ஸீ (I see). அப்படியானால் நீங்களும் உட்கார்ந்து கொள்கிறதுதானே ?

பிச்சை :—தாங்க் யூ (Thank you.) நாங்கள் வெளியே போகிறோம் ; அவசரமாக ஒரு கூட்டத்தில் பேச ஒப்புக்கொண்டிருக்கிறோம்.

வே. ஐயங்கார் :—எங்கே மீட்டிங் ? (ஒரு பீடாவை வாயில் போட்டுக்கொண்டு) என்ன விஷயம் ?

பிச்சை :—திருவல்லிக்கேணி பீச்சிலே விவாஹ ரத்து பில் (Divorce Bill)லுக்குச் சாதகமாக.

வே. ஐயங்கார் :—இவ்வளவுதானா ? கொஞ்சம் கழித்துப் போனாலும் போதுமே அதற்கு. தற்செயலாக நானும்

என் க்லயன்டும் இந்த இரண்டு பழைய நண் பர்களை வழியில் சந்திக்க நேர்ந்தது. அவர்கள் இந்த வழி வந்துகொண்டிருந்தார்கள். இந்த இடத்துக்கு அழைத்து வந்தேன். வந்த இடத்திலெ நீங்கள் ரெண்டுபேருங்கூட இருக்கிறீர்கள். இதுவும் ஒரு தெய்வச்செயல் அல்லவா? (இன்னுமொரு பீடாவைப் போட்டுக்கொள்ளுகிறார். தட்டத்தை நடேச சாஸ் திரியார், விசுவநாத சர்மா, கிட்டு ஜோஸ்யர் இவர்க ளிடம் சுப்பராயன் போற்றி காண்பிக்க, அவர்களெல் லோரும் ஒவ்வொரு பீடா எடுத்துக் கொள்ளுகி றார்கள்.)

பிச்சை:—இப்பொழுது என்னுடன் சம்பாஷணை செய்வது யார் என்று தெரிவிக்கலாமோ?

வெ. ஐயங்கார்:—உன் தகப்பனுருடைய பழைய சிநேகி தனும், இந்தச் சுந்தரத்தினுடைய புதிய வக்கீலுமான வெங்கு ஐயங்கார் நான்.

தீ. சுப்ர:—தி பேமஸ் லா வெங்கு ஐயங்கார் — திவான் பகதூர். (The famous Law Vengu Iyengar—Dewan Bahadur.)

சாரதா:—அட்வகேட் ஜெனரல்(Advocate General)ஆகவும், லா மெம்பர் (Law Member)ஆகவும் இருந்து பென்ஷன் பெற்ற பின்பு, சமுதாயச் சீர்திருத்த மசோதாக்களை எதிர்த்து வாதிப்பதற்காக வைஸிராயிடம் தூது கோஷ்டி போனது தாங்கள் தானே?

வெ. ஐயங்கார்:—ஆமாம், அம்மா! அந்தப் பழைய உலகப் பேர்வழியேதான்!

பிச்சை:—எங்களை ஏன் இருக்கச் சொல்லுகிறீர்கள்?

வெ. ஐயங்கார்:—இந்தப் பரிதாபகரமான முட்டுக் கட்டை யிலிருந்து மீட்சிபெற ஒரு மார்க்கத்தை ஆராய் கிறோம், வயது முதிர்ந்தவர்களான நாங்களெல் லோரும். உங்களுடைய அபிப்பிராயங்ளாலும் எங் களுக்கு உதவி செய்யக்கூடாதா?

பிச்சை :—எங்கள் அபிப்பிராயங்கள் இந்தக் கூட்டத்தில் ஒப்புக் கொள்ளத் தத்கதா யிருக்குமென்று தோன்ற வில்லையே எனக்கு!

சாரதா :—உங்களுடைய க்லயன்டு (client) என் விஷ யத்தில் தலையிடாமல் கைகழுவி விடுவாரானல் ஒரு வித முட்டுக்கட்டையு மிருக்காது!

வே. ஐயங்கார் :—அப்படிச் சுளுவில் சொல்லிவிடலாம், அம்மா! செய்வதற்குத்தான் மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்படுகிறது,

தீ. சுப் :—ஆன் தி அதர் ஹான்ட், (On the other hand) சுந்தரம், உங்களைச் சட்டப்படி தண்டிக்க வேண்டு மென்றும், மற்றப் பெண்களாவது மேரிஜ் (marriage) என்ற புனிதமான இன்ஸ்டிட்யூஷ (institution)னை ரெஸ்பெக்ட் (respect) பண்ண வேணுமென்றும் சொல்லுகிறுர்.

சாரதா :—ஆம். விவாகத்தைப் புனிதமாக்குவதற்காகவே நான் இவரை மறுமணம் செய்துகொண்டேன் — விவாகமில்லாத கூட்டு வாழ்வை அங்கீகரியாமல்.

சுந்தரம் :—மூடு வாயை, நாயே!

சாரதா :—குலைக்காதே!

வே. ஐயங்கார் :—சிச்சி! இந்த இழிந்த வாக்கு நமக்கு உத வாது. எங்களைத் தயவு செய்து இளமை வாய்ந்த நீங்களெல்லோரும் ஒரு சமரஸ மத்யஸ்த சபையாகப் பாவித்து, குத்து வார்த்தைகளை யொழித்துப் பேசக் கூடாதா?

சுந்தரம் :—நான் பணிகிறேன் உங்கள் ஆணைக்கு. ஆனல் அவர்கள்தான் வசைகூறக் கங்கணம் கட்டி யிருக்கி ருர்கள். — அவர்கள் மறந்தோ, ஏமாற்றத்திலோ செய்த குற்றமல்ல இது; தீர்க்காலோசனை யுடனும், துணிச்சலுடனும், துவேஷ புத்தியுடனும் செய்யப்பட்ட முதிர்ந்த வேசித்தனமே இது!

சாரதா :—வேசித்தனம் உன்னிடத்தில் — அந்த விலை மாதினிடமிருந்து சொல்லமுடியாத ரோகத்தைச்

சம்பாதித்திருக்கிற உன்னிடத்திலேதான்! — நான் இந்த நிமிஷம் வரையிலும் பிரம்மசரியம் அனுஷ்டித்துவரும் கன்னிகையாகவே இருக்கிறேனென்று உணர்வாய்!

சுந்தரம் :—ஆம் — பொட்டுக் கட்டின நித்யகன்னிகை யாகவா?

தீ சுப்பிர :—உன் ரீமேரிஜை (remarriage)யும் (deny) டினை பண்ரையோ?

சாரதா :—இல்லை, அதை மறுக்கமாட்டேன்.

சுந்தரம் :—ஆனாலும், இந்த உலக சரித்திரத்திலேயே — இந்தப்படி யாதேனும் ஒரு மனைவி தன்னை மாலையிட்ட புருஷனை இப்படி அவமதித்ததில்லையே! அதையும் நான் பொருட்படுத்தவில்லை. நமது திருமணம் என்கிற புனித ஸம்ஸ்காரத்தின் மகிமையாலே நமது புராதன பாரத நாடு மாத்திரம் இன்னும் ஜீவித்திருக்கவும், அவளுடைய இளைய சகோதரிகளான பாபிலோனியா, க்ரீஸ், ரோம் முதலான நாடுகள் மண்ணோடு மண்ணாக மடியவும் நேர்ந்திருக்கிறது. இந்தப் பெண்ணைப்போன்ற ஆயிரம் பதிஹத்திகள் தோன்றினாலும் அவர்களனைவரையும் விட விலை மதிப்புள்ள சீதைகளும் ஸாவித்ரிகளும் தமயந்திகளும் தோன்றி யிருக்கும் நாடுதானிது! ஆனாலும் பெரியோர்களே! நமது பாரதநாட்டுக்கு அன்னியமான, அதன் சுதந்திர உணர்ச்சியை விற்றுத் தளைகளை வலுப்படுத்தும், இந்தத் தான்தோன்றிகளுடைய மூட லட்சியங்களை நீங்களும் அங்கீகரிக்கிறீர்களா?

பிச்சை :—இரட்டை விவாகக் குற்றத்தைத்தான் நாங்கள் ஏற்றுக் கொள்ளுகிறோமே; அதற்குள்ள முழுத் தண்டனையையும் கோருகிறோமே! இந்த உண்மையை நிலை நாட்டும்பொருட்டு நாங்கள் இயற்றுவது ஸமூக தர்மமென்றும் கருதுகிறோம்.

சுந்தரம் :—ஸமூக தர்மம்? மண்ணாங் கட்டி தர்மம்!

வே. ஐயங்கார் :—இந்த மானக்கேட்டை ஒழிக்க முடியாதா உங்களால், சிறுவர்களே?

சாரதா :—மானக்கேடா? இந்த விவாகம் உண்மையாயிற்றே?

வே. ஐயங்கார் :—அம்மா! நாங்கள் எல்லோருமாகச் சேர்ந்து உனது தீர்மானத்தை மாற்றும்படி வேண்டுகிறோம். இந்த விவாகம் நடைபெறவே இல்லையென்று ஒரு மறுப்பை இன்னமும் விளம்பரப்படுத்தலாம்.

சாரதா :—என்ன? நடந்ததை இல்லையென்று கூறவா? முடியவே முடியாது!

வே. ஐயங்கார் :—இதோ துக்கம் தாங்காமல் தலை குனிந்திருக்கும் உங்கள் பெற்றோர்களைப் பாருங்கள். அவர்களுடைய மௌனமே எங்கள் அனைவருடைய வாதங்களைப் பார்க்கிலும் உங்கள் மனசை இளக்குமே!

சாரதா :—எந்தப் பெற்றோருக்காவது தம்பெண் அருவருப்புடன் வெறுக்கும் ஒரு விவாக பந்தத்தைப் பலவந்தமாக அவள்மீது சுமத்த உரிமை இருக்கிறதா? என் தந்தையார் அவருடைய துரபிமானத்தால் என் சுகத்தையும் ஆரோக்கியத்தையும் பலிகழிக்கச் சொல்லுகிறாரா?

சர்மா :—நான் அப்படி ஒருகாலும் சொன்னதில்லை.

சாரதா:—தாங்க் யூ, பாதர்(Thank you, father!)இனி நீங்கள் என் வினவுக்கு விடையளியுங்கள். ஐயா!—தங்கள் பிறவிக்குக் காரணமாகிய என்னை எதிர்காலத்தில் வைதிடும் கூன், குருடு, குஷ்டங்களின் தாயாக வேண்டுமோ நான்? சட்டங்களும் சர்க்காரும், இந்தியாவின் பெண்ணினத்தை மாத்திரம் நிரந்தரமாக அடிமைப் படுத்தவென்றோ, அல்லது புருஷரின் நெறி வழுவுதலையும் விபசாரத்தையும் ஆதரிக்கவென்றோ, அல்லது சந்தானங்களுக்கிடையில் வியாதியைப் பரப்பிடுவதற்கென்றோ ஏற்பட்டிருக்குமானால், — இந்த

ஆடவச் சட்டத்தின்படி நான் வாதாடத் தயாரில்லை. என்னைப் படைத்தோனை நோக்கி ஏன் இந்தப் பெண்மையை எனக்களித்தாயென்றும், ஏன் இந்த நாசமாய்ப் போகிற சமுதாயத்தில் என்னைப் பிறப்பித்தாயென்றும் கூவி, என் வயிற்றெரிச்சல் தீர அவனைச் சாபமிடுவதே என் வேலை யினி!

சுந்தரம் :—ஐயா! ஏதோ ஒரு பழைய ஆசுபத்ரி ரிக்கார்டை அத்தாட்சியாகக்கொண்டு, தேகத்தில் மேக ரோகக் கிருமிகள் இருக்கின்றன என்று கூறுகிறார்கள். விவாகமென்ற ஆயிரங் காலத்துப் புண்ணிய ஸம்ஸ்காரமானது இன்றே வெளிக்கிளம்பிய ஒரு கீழ்த்தர வைத்தியக் கல்லூரி மாணவி ஒருத்தியின் அற்பச் சந்தேகத்தினால் இப்படி அவமதிக்கப்படவோ?

சாரதா :—இவர் என்ன செய்திருப்பார், இவரைப்போல் நானும் கற்பழிந்திருந்தால்? இந்த "அற்பச் சந்தேகம்" என்னைப்பற்றி இவருக்குத் தோன்றி யிருந்தால்?

சுந்தரம் :—நீ பெண் பிள்ளை, நான் புருஷனடீ!

சாரதா :—ஓஹோ! பௌல்ட்ரி பார்மி (poultry farm) லுள்ள லைஸென்ஸ் பெற்ற சேவல் கோழியோ? ஐயா! உங்களுக்கும் வெட்கமாயிருக்க வில்லையா, இந்த மனிதன் இந்தியப் புருஷத் தன்மையையே இவ்விதம் இழிவாகச் சித்தரிப்பதைக் கேட்டு?

வே. ஐயங்கார் :—இவருக்குத் தொத்து வியாதி இருப்பதாக ருஜுவானாலும் கூட உனக்குக் கணவனைப் பிரிந்து தனி வாழ்க்கை நடத்த உரிமை கிடைக்குமே யல்லாமல், புனர் விவாகத்துக்கு உரிமை யில்லையே, அம்மா!

சாரதா :—விதவைகளுக்குக் கூடப் புனர் விவாகம் செய்ய அனுமதி யிருக்கிறதே!

வே ஐயங்கார் :—ஆம், ஆனால் நீ விதவை யல்லவே?

சாரதா :—அவன் உயிரோடிருப்பதும் என் குற்றமா?

சுந்தரம் :—பின்பு என் குற்றமோ?

தீ. சுப்ர :—நீ ஏன் செத்துப் போகலையப்பா, அந்த மனிச (Man)னுக்குச் சௌகர்யம் பண்ணிக் குடுக்க வாவது ?

சாரதா :—அதாவது, அவன் செய்த சமுதாயத்துக் கெதிரான குற்றத்துக்காக, நான் தண்டனையடைய வேண்டுமோ ?

பிச்சை :—அவனுக்கு இனிமேலும் இதே குற்றம் செய்ய ஜாஸ்தி வசதியும் செய்து கொடுக்க வேண்டுமாம் !

வே. ஐயங்கார் :—ஸந்தானுபிவ்ருத்தி மாத்திரமா விவா கத்தின் உத்தேசம், அம்மா ?

சாரதா :—நான் அப்படி யெண்ணி யிருந்தேன். நமது முன்னோர்களும் அவ்விதமே எண்ணியிருந்ததாகத் தான் நான் படித்திருப்பதும்.

தீ. சுப்ர :—கம்பானியனேட் மேரிஜ் (Companionate Marriages)களைப் பற்றி — அதாவது குழந்தைகள் பிறவாத விவாகங்களைப் பற்றிக் கேட்டதில்லையோ? இப்போ மேலை நாடுகளிலெல்லாம் பாப்யுலர் (Popular)ஆக இருக்கே!

பிச்சை :—நூற்றுக்கு நூறு சதமானம் ஸநாதனக் கொள்கைதான் இது !

சாரதா :—அப்படியானல் பெண்கள் ஆண்களை மணப்பதை விடப் பெண்களையே மணந்து கொள்ளலாமே !

சுந்தரம் :—பெண்-டாக்டர்களோ ?

சாரதா :—அவர்களுக்கு லட்சிய புருஷர்கள் மேல் பற்றுதல் தோன்றலாம் — ஆனாலும் எந்த மரியாதை கற்ற பாரிஸ்டரும் வெட்கம் கெட்ட வேசியை நாடிச் செல்லான் !

வே. ஐயங்கார் :—சட்டத்தில் முரண்பாடுகள் பல இருக் கத்தான் செய்கின்றன, அம்மா! ஆனாலும் அது அமலில் இருக்கிறதே!

சாரதா :—அதனாலேதான் நாங்கள் அந்தச் சட்டத்தை மீறுகிறோம்.

வே. ஐயங்கார் :—எதற்காக ?

சாரதா :—அதன் அநீதிகளைப் பற்றிப் பொதுமக்களின் உணர்ச்சியைக் கிளப்புவதற்காக.

வே. ஐயங்கார் :—அவ்வளவு எளிதாக அதைக் கிளப்ப முடியுமா ?

சாரதா :—இதுபோல் இன்னும் ஒரு டஜன் எதிர்ப்புகள் தோன்றியபின்பும் முடியாதா ?

வே. ஐயங்கார் :—அந்த டஜன் பூர்த்தியாவதற்கு ஒரு நூற்றுண்டு பிடிக்குமே !

சாரதா :—நான் இன்று ஆரம்பிக்காவிட்டால் இன்னும் பத்து நூற்றுண்டுகள் வேண்டிவந்து விடுமே !

வே. ஐயங்கார் :—ஆனால் நீ சந்தானம் விரும்பினயே ?

சாரதா :—அது கிடைக்காமற் போனல், இரண்டாம் பக்ஷமாக ஆத்மத் தியாகம் போதும். இந்த ஆத்மத் தியாகம் ஏகாந்த வாழ்வையோ, தொத்து வியாதிப் புருஷனுடன் இல்லற வாழ்வையோ பார்க்கிலும் எவ்வளவோ மேன்மையானது !

சுந்தரம் :—நமக்கெல்லோருக்கும் இயற்கையாகவே உள்ளத்தில் தோன்றக்கூடிய பெண்ணினத்தின் மீதுள்ள அனுதாபம், ஐயா ! உங்கள் மனத்திலும் புகுந்து உங்கள் நியாயமான தீர்ப்பைப் பாதிக்க லாகாது. பெண்களுக்குள்ள இயற்கை வசீகரம் என்னிடத்தில் இராது. இதோ நிற்பவன், என் இல்வாழ்க்கையை நாசமாக்கி, எனக்கெதிராக ஆயுதம் தரித்த பகைவனைப் போல் வந்து தோன்றி யிருப்பவன்! என் மனைவியை வேசியாக்கிய இவன் இதோ அணிவகுத்த படைத் தலைவனைப் போல் பட்டப் பகலிலே என்னை எதிர்க்கிறன் ! கடவுள் மேல் ஆணையிட்டுச் சொல்லுகிறேன் — எனக்கு நேர்ந்திருக்கும் இந்த மானக் கேட்டில் உங்களில் யாருக்கேனும் பத்தில் ஒரு பங்காவது நேர்ந்திருக்கு மானல், நீங்கள் இவனை இந்த இடத்திலேயே சுட்டு வீழ்த்தி யிருப்பீர்கள் ! இந்து மதத்துக்கு இயல்பான

ஜீவகாருண்யச் செழிப்பின் ஓர் அம்சம் என்னிட மிருப்பதால், நான் அவனுக்கு உயிர்ப் பிச்சை யளித் திருக்கிறேன்.

பிச்சை :—ஒருகாலு மில்லை! உன் குற்றமுள்ள நெஞ்சு உன்னைப் பயங்காளி யாக்கி விட்டது; அவ்வளவு தான்!

சுந்தரம் :—மதி கெட்ட மனைவியரை அவர் புருஷர்க ளிடமிருந்து கவர்ந்திடும், பொறுப்பற்ற, அகம் பாவத்தைவிட என் கோழைத்தனம் மேன்மைதான்!

வெ. ஐயங்கார் :—அவர்களை நீர்தான் சம்மதிக்கச் செய்ய வேண்டும், மிஸ்டர் சர்மா! என்னால் இயலாது.

வி. சர்மா:—என்னாலும் எப்படி முடியும்? நமது சட்டங்க ளெல்லாம் இதோ இந்தச் சீமை வித்வானுடைய உரிமை-வார்த்தையைப் போல் அவ்வளவு கன்னா பின்னா என்றிருக்கிறதே!—சரி, இனியும் ஏன் வளைய வளையப் பேசவேணும்? அவன் இதற்கு என்ன பணம் வேணுமென்கிறான் பரிகாரமாக?

தீ. சுப் :—(சுந்தரத்தையும் வெங்கு ஐயங்காரையும் பார்த்துக் கண்ணைச் சிமிட்டி) Fifteen Thousand—பதினையாயிரம் ரூபாய்!

சாரதா :—என்ன ?

பிச்சை:—நமக்குச் சுதந்திர மளிக்க அவ்வளவு வேண்டு மாம்!

சாரதா :—நாம் சுதந்திரத்தை யாசிக்க வில்லையே?

தீ. சுப்:—உங்களண்டையும் 'டிமாண்ட்' (demand) பண்ண வில்லையே இதை!

சாரதா :—இந்தப் பதினையாயிரமும் இவருக்கு இழந்து போன மானத்தையும், இந்தச் சமுதாயத்துக்கு ஒரு புதிய நளாயினியையும் வாங்கிக் கொடுக்குமா ?

வெ. ஐயங்கார் :—அவனுக்கு நிச்சயமாக வேறொரு மனை வியை வாங்கிக் கொடுக்கும் அது!

சாரதா :—அவளையும் இழக்கவா ?

தீ. சுப் :—ஒருகாலும் இழக்கமாட்டான்! இந்துப் பெண்களிடத்தில் உன்னைப் போன்ற மதிகேடு கிடையாது! சாதாரணப் பெண் (Average Girl) ணயிருந்தாலும், ஆரோக்கியமுள்ள குழந்தைகளைப் பெற்றெடுக்கக்கூட 'க்ளெவர்' (clever) ஆகத்தான் இருப்பாள்!

சாரதா :—வாயை மூடும் ஐயா! இந்தியப் பெண்ணையே அவதூறு பேசாதீர்! இதைக் கேட்டால் பெற்ற பெண்ணே உம்மைச் சுட்டு வீழ்த்தி விடுவாள், பத்திரம்!

வி. சர்மா :—ஐயாயிரத்துக்குச் சம்மதிப்பானு கேளும்?

சாரதா :—ஒரு தம்பிடிகூடக் கொடுக்காதீர், அப்பா! அதோ அந்த மனிதன் நாணமில்லாமல் விபசாரத்தை ஆதரிப்பதைக் கேட்கவில்லையா? அநியாயமாக இன்னொரு 'அஜ்ஞாத'ப் பெண்ணுடைய நாசத்துக்கும் காரணமாகும் இந்த லஞ்சத்தை அவனுக்குக் கொடுக்கலாகாதென்று உம்மைப் பணிந்து வேண்டுகிறேன்.

வி. சர்மா :—நான் கொடுக்காவிட்டால் நீ சிறைச்சாலைக்குச் செல்வதோடு, இந்த வக்கீலும் தன் மகளை அவனுக்கே சமர்ப்பணம் செய்வார்.

சாரதா :—நான் அதிலும் கொடிய தண்டனைக்குத் துணிந்தாய்விட்டது! மேலும், கமலா இவரைப் போன்றவளல்ல என்பதை நம்புவீர், அப்பா!

தீ. சுப் :—(அதைக் கேட்டுத் திடுக்கிட்டு, உடனே வெங்கு ஐயங்காரின் காதில் ஏதோ பேசுகிருர்.)

வெ. ஐயங்கார் :—ஐயாயிரம் ரொக்கம் இப்போதே தந்தால் என் 'கிளயண்ட்' (client) சம்மதிக்கிருராம்.

சாரதா :—வேண்டாம்—கொடுக்காதீர், அப்பா!

வி. சர்மா :—போ, போ! நான் ஓர் ஏக புத்திரியின் தந்தை—மற்றப் பெண்களைப்பற்றி எனக்குக் கவலையில்லை. 'எக்ரிமெண்ட்' (agreement) எழுதுங்கள், ஐயா!

பிச்சை :—இப்படி எத்தனை நபர்களை விலக்கு வாங்குவீர்கள் ?

வி. சர்மா:—உன்னைப்போல் கனவு கண்டுகொண்டிருப்பவர்களின் எண்ணிக்கை என்ன ?

சாரதா:—நான் இப்பொழுது தற்கொலை செய்து கொண்டால்?

வி. சர்மா :—அதுவும் பிரயோஜனமில்லை. இவனுடைய தண்டனையையோ, அவன் 'அஜ்ஞாத'ப் பெண்ணைக் கெடுப்பதையோ, மாற்ருது அது!

சாரதா:—(பிச்சையைப் பார்த்து) ஐயோ! இதுவா முடிவில், சட்டத்தையும், பாரம்பரியத்தையும் நாம் எதிர்த்துப் போராடியதின் பலன் ?—அப்பா! (என்று பிச்சை மேல் சாய்கிருள்.)

[திடீரென்று ஒரு கைத்துப்பாக்கி வெடிப்பதின் சப்தம் கேட்க, எல்லோரும் திடுக்கிட்டு எழுந்திருக்கிருர்கள்.]

சுந்தரம் :—ஐயோ !—(என்று தன் நெஞ்சில் கை வைத்த வண்ணம் தடுமாறி, மரண வேதனையுடன் கீழே சாய்கிருன். பிச்சை ஓடிப்போய் அவனைத் தாங்கி மெல்லக் கீழே வைக்கிருன்.)

கமலா :—(கைத்துப்பாக்கியுடன் தன் அறையிலிருந்து கடுகடுத்த முகத்துடன் வெளியே வருகிருள்.)

கிட்டு ஜோஸ்யர் :—ஐயோ, கமலா! நீயா ?...

தீ. சுப் :—பொய் சொல்லாதே! (என்று கமலாவுக்கு நேராய் ஓடிச் சென்று கைத்துப்பாக்கியைப் பற்ற முயல்கிருர்.)

கமலா :—ச்சீ ! விலகி நில்லும், மரியாதையாக! (தீவட்டி சுப்ரமண்ய ஐயர் பயந்து நிற்கிருர்).

(வெளியே யிருந்து ஒரு போலீஸ் ஸார்ஜென்ட் விரைந்து பிரவேசிக்கிருன்.)

போலிஸ் ஸார்ஜெண்ட் :—என்ன இங்கே ?—(கீழே விழுந்து கிடக்கும் சுந்தரத்தையும், கைத்துப்பாக்கியுடன்

நிற்கும் கமலாவையும் பார்த்து) செத்துப்போச்சா அந்த ஆளு?

பிச்சை :—மூச்சே இல்லே!

போ. ஸார்ஜெண்ட் :—யார் சுட்டார் இவரை?—இந்த அம்மாளா?

தீ. சுப் :—நோ, நோ! (No, no!)—அவன் —(பிச்சையைச் சுட்டிக் காண்பித்து) அவன் தான்!

கமலா :—(முன் வந்து) ச்சி! பொய் பேசுகிறீரா?—நான் தான் சுட்டேன்!

போ. ஸார்ஜெண்ட் :—(நாலுபுறமும் நிமிர்ந்து பார்த்துக் கலெக்டர் விசுவநாத சர்மாவைக் காண்கிறான். திடீரென்று பயந்து மரியாதையாக அவருக்குப் போலீஸ் ஸல்யூட் (police salute) செய்துவிட்டு நிற்கிறான்.)

வே. ஐயங்கார் :—இஸ்ஹீ டெட்? (Is he dead?)

போ. ஸார்ஜெண்ட்?—(சுந்தரத்தைப் பரிசோதித்துவிட்டு) எஸ்—டெட்!

வே. ஐயங்கார் :—அந்தப் பெண் யாரு?

நடேச சாஸ்திரி :—இந்த வக்கீலுடைய புத்திரி.

கமலா :—இல்லே, நான் பாரதகுமாரி. உங்களுடைய புழுத்து நாறும் சட்டத்தினுடைய ஹிருதயத்திலே குறிவைத்து விட்ட அவளுடைய முதலாவது வெடி குண்டு இதுவே! இனித் தோன்றப் போகும் புரட்சியின் முதலாவது முரசு!

போ. ஸார்ஜெண்ட் :—உன்னைக் கைது செய்கிறேன்.

கமலா :—இதோ! (துப்பாக்கியைக் கொடுக்கிறாள்.)

சாரதா :—(கமலாவைப் பார்த்து) 'ஸிஸ்டெர்!' இதுவா உங்கள் முடிவு?

கமலா :—நீங்கள் எனக்களித்த வாக்கை மறந்து போகாதீர்கள்!

சாரதா :—என்ன அது?

கமலா :—நான் செய்திடும் கைங்கரியத்தை அங்கீகரிப்பதாகச் சொன்ன வார்த்தையை!

(எல்லோரும் திகைத்து நிற்க, திரை விழுகிறது.)

நாடகக் கலைக்கோயில்—கி. பி. 1930

["பிச்சை"]

('புரட்சி முரசு', 'மாங்கல்யம்' முதலிய நாடகங்களின் கதா நாயகன்)

I. "தமிழர் நாடகக் கழகம்"

ஒரு வேண்டுகோள்.

தமிழ் நாடகக் கலையின் சார்பாகவும், அதைப் பார்க்கிலும் உதவியை எதிர்பார்த்து நிற்கும் தற்காலத் தமிழரங்க மேடைக்காகவும் பெரியதொரு வேலைத் திட்டத்துடன் கூடிய "தமிழர் நாடகக் கழகம்" ஒன்றை ஸ்தாபிக்கத் தமிழர் முன்வர வேண்டும். முன்னேற்ற வழி பாழடைந்து, யோக்கியமான நாடக மேடைகளும் நாளுக்கு நாள் குறைந்துகொண்டு, பற்பல இனிய நாடகங்களும் போற்றுவாரற்று மழுங்கிக்கொண்டே வரும் இந்நாளில் இத்தகைய கழகத்தின் அவசியத்தை எடுத்துக்கூறத் தேவையில்லை.

ஆரம்பத்தில், இக்கழகம் தன்னுடைய விசாலமான வேலைத் திட்டத்தால் புதிதாக ஒன்றையும் சிருஷ்டிக்க நிச்சயிக்க வேண்டியதில்லை. இதுவரையிலும் ஆராய்ந்து முடிவுக்கு வந்திருக்கும் சில முக்கியக் கொள்கைகளை நிறைவேற்றி நடைமுறையில் கொண்டு வருவதற்கேற்ற ஆளுதவியையும் ஸ்தாபனக் கருவியையுமே எதிர்பார்க்கிறது. நாடகக்கலை சம்பந்தமாய் எழுகிற வினாக்களுக்கெல்லாம் தக்க விடை வேண்டுமாயின் பெரியதொருமுயற்சியும் அதற்கேற்ற ஊக்கமும் வேண்டியிருக்கின்றன. தகுதியுள்ள ஸ்திரீ புருஷர்கள் இவ்வேலைக்கென்று முன்வந்து தங்கள் முழு நேரத்தையும் சமர்ப்பிக்க வேண்டியிருக்கிறது. பிரசுராலயத்திற்கும் கருவி-ஆலயத்திற்கும் வேண்டிய பொருள் தேடவேண்டியிருக்கிறது. சுருங்கச் சொன்னால், நாளது வரையிலும் ஒவ்வொரு ஊரிலுமாகச் சிற்சில பேர்களால் இடையிடையே

நடத்தி வந்த வேலைகளை இக்கழகம் தானே கையாண்டு, முறைப்படியும், அழுத்தமாகவும், மிகச் சீர்மையுடனும் இயற்றும்.

இக்கழகத்தை இத்தமிழ் நாட்டிலேயே முதன்மை யாக நாட்டப்போவதால் இன்னும் சில வருஷங்களுக் கெல்லாம் இது ஒரே நிலையமாக இருக்கவேண்டும். யாவராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட தலைமைப் பதவியையும் இது வகிக்க வேண்டும். நாட்டின் நாலா பக்கங்களிலிருந்தும் இதன் உதவியை எல்லோரும் யாசிக்கும்படியும், நாடகத்தையே தொழிலாய் அமைத்திடு வோரும், கல்விக் கருவியாய் அமைத்திடுவோரும் இக்கழ கத்தினிடம் மேலும் மேலும் உதவிக்கு வந்து சேரும் படியும் இது நடைபெற வேண்டும்.

நாடகத் தொழிலுக்கு இக்கழகத்தின் உதவி நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டுதான் இருக்கும். பொதுவாக நாடகத்தைப் பற்றிய உணர்ச்சி பொது ஜனங்களிடையே அதிகரித்தால் நாடகங்களைப் பார்வை யிடுவதற்குள்ள ஜனத்தொகை அதிகப்படும். அன்றியும், குறிப்பாக நாடகத் தொழிலாளரை ஆதரிக்க வேண்டுமென்று நக ரங்கள் தோறும் 'நாடக தரிசகர்'களின் சங்கங்களை ஸ்தா பிக்கவும் இக்கழகத்தால் முடியும்.

நாடக அபிமானிகள் சங்கங்களுக்கு உதவி புரிவ தற்கும், சர்வ கலாசாலையிலும் கல்லூரிகளிலுமுள்ள மாணவர்களுக்கு உதவி புரிவதற்கும் வேண்டி, இக்கழகம் ஒரு பிரசுராலயத்தையும் ஸ்தாபிக்க வேண்டும். அவ்வால யத்தினின்றும் நாடக விஷயமான எல்லா உதவிகளும் மெம்பர்களுக்குக் கூடியமட்டிலும் இலவசமாக அளித்திட முயல வேண்டும். உள்நாடுகளிலுள்ள ஊர்களுக்கும் கல்லூரிகளுக்கும் பிரத்தியேக காரியதரிசி ஒருவரை வேண்டிய சாமான்களுடன் அனுப்பி ஆங்காங்குள்ள பிர முகர்களைக் கலந்து அவர்களைக் கொண்டே ஒன்றிரண்டு நாடகங்களை நடிக்கச் செய்வதுடன், நாடக முறை, அபிநய முறை, ஆட்ட முறை முதலியவற்றைப் பற்றிய உபந்

யாஸங்கள் செய்தும் காட்ட வேண்டும். இவ்விதம் விரைவில் தேசமெங்கும் உயர்தர — தேசிய நாடக மேடைகளைக் கொண்டு நிரப்பிவிடவும் வசதிகள் உண்டாகின்றன.

இன்னும் இக்கழகம் கோயில்களிலும் தேவஸ்தானங்களிலும் கல்விச்சாலைகளிலும் சென்று அந்தந்த மதத்திற்கேற்ற பக்திரஸ நாடகங்களை நடித்துக் காண்பிக்கவும் ஒத்தாசை செய்யும். சமுதாயச் சீர்திருத்த மகாநாடுகளிலும், தேசீய ராஜீய மகா நாடுகளிலும் கலந்து அவைகளுக்கேற்ற சமயோசிதமான சரித்திரங்களை நடித்துத் தேச பக்தியையும் உறுதிப்படுத்தும்.

இக்கழகத்தின் ஆரம்ப மகா நாடொன்றை அதி சீக்கிரத்தில் தமிழகத்தில் யாதேனும் முக்கிய நகரமொன்றில் கூட்ட வேண்டும். அது நடக்கும் வாரம் ஒரு தேசீய நாடக வாரமென்றே வழங்கப்படுமென்பதற்கு ஐயமில்லை. அவ்விழாவில் கலந்துகொள்ள விரும்பும் நாடக அபிநயச் சபைகளுக்கெல்லாம், அபிநயத்திற்கும் உபந்யாஸங்களுக்கும் வேண்டிய வசதிகள் அளிக்கப்படும்.

இவற்றிற்கெல்லாம் மிகுந்த செலவு பிடிக்குமென்பது தெளிவு. ஆகவே முதலாவதாகத் "தமிழ் நாடகக் கழக நிதி" என்ற பெயருடன் ஒரு நிதி வசூலிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். நமது நாடகாபிமானிகளும் சபைகளும் நாடகக் கம்பெனிகளும் உண்மையான ஊக்கத்துடன் முயல்வார்களாயின், அத்தகைய நிதி சுலபமாகச் சீக்கிரத்தில் குவிந்துவிடும்.

நிபந்தனைகள்

பெயர்

இச்சங்கத்தின் பெயர் "தமிழர் நாடகக் கழகம்" என்பது.

கொள்கைகள்

தமிழ் நாடு முழுவதிலும் நாடக சபை மயமாக்கி நாடகச் சுவைகளைப் பொது ஜனங்களுக்கு அறிவித்தல்.

தற்பொழுதுள்ள நாடக சபைகளை யெல்லாம், நடிகர்கள், மானேஜர்கள், ஆசிரியர்கள் இவர்களைத் தம்முள் கை மாற்றம் செய்துகொள்ளத்தக்க உறவு உடையவைகளாக்குதல்.

பகிரங்கப் பந்தயங்களை ஏற்படுத்தி 'நாடக ஆசிரியம்' அபிநயம் முதலியவற்றில் நிபுணர்களைக் கண்டு பிடித்தல்.

வருஷந்தோறும் நாடக மகாநாடுகளையும், விழாக் களையும், வாதப் பிரதிவாதங்களையும், பிரதரிசனங் களையும் நடத்தி நாடக முறைகளைப் பிரசுரப்படுத்தல்.

குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை கழகத்தின் அனுமதிகொண்ட அங்கத்தினர்கள் அடங்கிய கமிஷ னென்றை நியமித்துத் தமிழரங்கச் சீர்திருத்தங்களைப் பற்றிய யதாஸ்தை வெளியிடல்.

அரங்கமேடையைப் பற்றிய பத்திரிகை ஒன்றை நடத்தல்.

அங்கத்தினர்

இக் கழகத்தில் அங்கத்தினராக விரும்புவோர் யாதேனும் தமிழ் நாடக சபையொன்றில் அங்கத்தின ராக இருக்கவேண்டும்.

தமிழ் நாடகமுறை அறிந்த சிற்சில குறிப்பிட்ட பண்டிதர்களையும் கௌரவ அங்கத்தினர்களாக இக் கழகத்தின் பொதுக் கூட்டத்திற்குத் தேர்ந்தெடுக்க அதிகாரமுண்டு.

நிர்வாக சபை

உப சபையொன்றுக்கு இரண்டு பேர்கள் வீதமும், கௌரவ அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு பேர்களும் அடங்கிய ஒரு நிர்வாக சபையே இக் கழகத்தின் காரியாதிகளை நடத்தவேண்டும்.

இச்சபையார் தம்முள் நியமித்துக்கொள்ளவேண்டிய உத்தியோகஸ்தர்கள் :—

பிரசார வேலை, ஸ்தாபன வேலை இவைகளை நடத்தும் ஒரு நிர்வாகக் காரியதரிசி,

பொதுக் கூட்டங்கள், விழாக்கள் முதலியவைகளை நடத்தும் ஒரு பொதுக் காரியதரிசி,

அதிதிகளை உபசாரம் செய்யும் ஒரு சத்கார மானேஜர்,

தொண்டர் குழாத் தலைவர்,

பந்தயங்களை நிர்வகித்து நடத்தும் ஒரு பந்தய விசாரணை அதிகாரி,

ஒரு பொக்கிஷதார்.

நிர்வாக சபையின் கடமைகள்

தமிழகத்தில் எல்லா நகரங்களிலும் இக் கழகத்தின் உப சபைகளை ஸ்தாபிப்பது ;

வருஷத்திற் கொருமுறை எல்லாச் சபைகளையும் வரவழைத்து மகாநாடொன்றைக் கூட்டிப் புதிய நிர்வாக சபையைத் தேர்ந்தெடுக்கச் செய்வது ;

மேற்படி மகாநாடு கூடும் வாரத்தில் நாடக விழா ஒன்றை நடத்துவது ;

நாடகப் பத்திரிகை யொன்றை ஸ்தாபித்து, நாடக சம்பந்தமான சகல உதவிகளையும் அளிக்கத் தக்க ஆராய்ச்சிமேடையுடன் கூடிய பிரசுராலயத்தை நடத்துவது ;

நாடகப் பந்தயங்களை நடத்தி, அவைகளுக்குப் பரிசளிப்பதற்கென்று பிரத்தியேக அறிஞர் கமிட்டி யொன்றை நியமிப்பது ;

"தமிழர் நாடகக் கழக நிதி" யென்ற பெயருடன் இக் கழகத்திற்குப் பணம் வசூலிப்பதற்கென்று பொக்கிஷதார் அடங்கிய பிரத்தியேகக் கமிட்டியை நியமிப்பது.

அங்கத்தினர் அதிகாரம்

கழகப் பொதுக் கூட்டங்களில் கலந்து வோட்டு செய்யலாம் ;

நிர்வாகக் கமிட்டியைத் தெரிந்தெடுக்கலாம் ;

கழகப் பத்திரிகையை இலவசமாகப் பெறலாம் ;

பிரசுராலயத்திலிருந்தும், ஸேவாச்ரமத்திலிருந்தும் எல்லாவித உபதேசங்களையும் செய்திகளையும் கேட்டறிந்துகொள்ளலாம் ;

நாடக அபிநயப் பயிற்சிக்கென்று நாடகக் கலைஞர், ஆசிரியர் முதலியவர்களுடைய உதவியைப் பெறலாம்;

கழகப் பிரசுரங்களிலும், கொண்டாட்டங்களிலும். பிரதரிசனங்களிலும் நியாயமான 'டிஸ்கௌண்டை' எதிர் பார்க்கலாம்.

★

II. அமெரிக்காவிலுள்ள ஒரு நாடக ஆராய்ச்சி மேடை

நமது தமிழகத்திலே தேசிய நாடக மேடை யமைப்பதிலும், பொதுக் கூத்துகளை மேன்மைப் படுத்துவதிலும் கவலை செலுத்தி யுழைப்பவர்களுக்கு "ஹார்வெர்ட் ஓர்க்ஷாப்" என்று வழங்கி வரும் அமெரிக்க நாடக ஆராய்ச்சி மேடையைப் பற்றிய சிற்சில விவரங்கள் உபயோகமாயிருக்கு மென்றெண்ணுகிறேன். "ஓர்க்ஷாப்" என்ற இப் பெயர், சுமார் 30 வருஷங்களுக்கு முன்பு ஹார்வெர்ட் சர்வகலாசாலையில் தம் வேலையைத் தொடங்கியபொழுது ஆசிரியர் ஜார்ஜ் பி. பேக்கரால் மிகப் பொருத்தத்துடன் தெரிந்தெடுத்து அளிக்கப்பட்டது. ஏனெனில் அரங்க மேடை சம்பந்தமான சர்வ கலைகளையும் ஆராய்ச்சி செய்வதற்கென்ற ஒரு நாடகக் கருவி நிலையமாக அவர் இதை யமைத்தார். நாடகக் கலையின் ரசஞ நுட்பத்தை ஒரு பொழுதும் கற்பிக்க முடியாது. கலாசிரியர்கள் இயற்கையாகப் பிறக்க வேண்டியவர்களே யன்றி நிர்மிக்கப்படுகிறவர்களல்லர். ஆனால் நாடகக் கலையின் இலக்கணங்களைக் கற்பிக்க முடியுமாகையால் நாடக ஆசிரியர்களையும், ஆசிரியராக விரும்புவோரையும் அரங்க மேடையைச் சார்ந்த கலைகளின் நுட்பமான முறைகளில் பழக்கிவிடுவதற்கென்றே, அம்மகான் தம்முடைய "வேலைச் சாலை"யை ஸ்தாபித்தார்.

இந்த வேலைச் சாலையின் நோக்கம் ஒருவேளை அவர் மனத்தினுள் ஆதிமுதலே தோன்றியிருக்கக்கூடும்; ஆனால் உலகிலுள்ள மற்ற நல்ல காரியங்கள் எல்லாவற்றையும் போலவே இதுவும் ஒரு சிறிய விதையிலிருந்துதான் விசதமாயிற்று. ஆதியாக அவர் ஹார்வேர்ட் சர்வகலாசாலை மாணவர்களுக்கு ஆங்கில ஐரோப்பிய நாடக சரித்திரங்களைப் பற்றிய பாடங்களைக் கற்பித்தார். தாம் இயல்பாகவே அரங்கமேடைக் கலையில் நிபுணராகையால் தம் உபந்யாஸங்களில் நாடக ரூபத்தின் அமைப்பைப்பற்றியும், பிரதர்சன மாதிரிகளின் வளர்ச்சியைப் பற்றியும், காட்சி

அங்கப் பிரிவினைகளின் ஆதார பேதங்களைப் பற்றியும், நாடக பாத்திர அமைப்பில் மனோ விகார விளக்கமே முக்கியமென்று வந்தது எப்படி யென்பது குறித்தும் விளக்கினார். கேவலம் பொம்மை போன்ற பாத்திரங்களை ஆட்டி வைக்கும் கதை-ரசமுடைய வியாயோகம்* முதலிய புராதன மார்க்கங்களினின்றும் உயிருடைய மானிடப் பாத்திரங்களே தங்களுடைய கதைகளை அமைத்துக்கொள்ளும் துன்ப இயல், இன்ப இயல் நாடகங்களுக்கு மாற்றம் ஏற்பட்டது எவ்விதமென்றும், கவிகளுடைய 'ஏட்டுச் சுரைக்காய்' நாடகங்களுக்கும், அரங்க மேடை அனுபவங்களை அறிந்திருக்கிற நாடக ஆசிரியர்களுடைய நாடகங்களுக்கும் உள்ள வித்தியாசத்தைப்பற்றியும், அப்பண்டிதர் அழுத்தமாகப் புகட்டினார். இத்தகைய பாடத்தினிடையிலே, அமெரிக்காவிலேயே உயர்ந்த ரக நாடகமில்லாத விஷயத்தையும் எடுத்துரைக்க வேண்டியதாயிற்று. நூற்றுக்கணக்கான நாடகமெழுதுவோர் அக்காலத்திலே அமெரிக்காவில் இருந்தாலும் ஒரு கையளவுகூட உண்மையான உயர்தர நாடக ஆசிரியர்கள் இல்லை. ஆங்கில பாஷையிலுள்ள முதல் தரமான நாடகங்கள் இங்கிலாந்திலோ அயர்லாந்திலோதான் இயற்றபட்டன. ஆகவே அமெரிக்க ஆசிரியர்களை நாடக வழியிலே திருப்பி, அமெரிக்க விஷயங்களைப் பற்றித் தங்கள் அனுபவத்திலிருந்தே எழுதத் தூண்டி உத்ஸாகப் படுத்துவதற்காகப் பண்டிதர் பேக்கர் தம் உபந்யாஸங்களுடன் நாடகமெழுதும் முறையைப் பற்றியும் சில பாடங்களைச் சேர்த்துக் கொண்டார்.

ஆதியில் இவ்விதம் நாடக ஆசிரியர்களை உண்டாக்க முயல்வதைப் பற்றிப் பலவிதமான இகழ்ச்சிகளும் கண்டனங்களும் தோன்றின. ஏனெனில் நாடக ஆசிரியர்கள் கவிகளைப்போல் பிறவியிலேயே தங்கள் கலையின் நுட்பங்களை அறிந்திருக்க வேண்டியவர்களாம்! வாஸ்தவத்தில் அவர்கள் நாடக வாஸனையோடு பிறந்த

---

* வியாயோகம்—காமமும் ஹாஸ்யமும் நீக்கித் தலைவனுடைய வீரச் செயலைக் கூறும் ஓர் அங்க நாடக வகை.

வர்களே யாயினும், தங்களுடைய கருவிகளை உபயோகப் படுத்தும் வழிகளையும், தங்களுடைய ஆட்ட முறை களையும் பற்றிப் பிறவியிலேயே அவர்கள் எப்படி அறிந்திருக்க முடியும்? பண்டிதர் பேக்கருடைய அபிப்பிராயத்தில் இவ்விதப் பாடம் கற்றுக்கொள்வதே நாடகக் கலைக் கருவிகளில் அவசியமான ஒன்றாகும். அன்னிய நாட்டு ஆசிரியர்கள் தங்கள் வினாவிடைகளை எவ்விதம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்களென்றும், அவைகளில் எவ்வித ஜயாபஜயங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்றும் அறிந்திடுவது நாடக மாணவனுக்கு உபயோகம் ஆவதோடு, தன்னுடைய சொந்த வழிகளையும் பண்டிதர்களுடைய மதிப்புரைக்குக் கீழ்ப்படுத்தி அமைக்க முயல்வதும் அவனுக்குச் சிறந்த ஆரம்பம் ஆகும்.

ஆகவே இவர் 'நாடக ஆசிரியம்' என்ற விஷயத்திற்கும் ஒரு வகுப்பைத் தொடங்கினார். இவருடைய மாணாக்கர்களைப் "பேக்கர் டஜன்" என்றழைப்பது வழக்கம். ஏனெனில் இவர் தம்முடைய சிஷ்யர்களாகிய நாடக ஆசிரிய மாணவர்களைப் பன்னிரண்டுடன் நிறுத்திவிடுவார். அக்டோபர் மாசம் ஆரம்பமாகிற இவருடைய இவ் வகுப்பில் சேர விரும்புவோர் சுமார் ஜூன் மாதத்திலேயே மூன்று அங்கங்கள் அடங்கிய நாடகமொன்றை இயற்றி இவரிடம் சமர்ப்பிக்கவேண்டும். இவர் அவ்வாறு வந்த நாடகங்களில் தகுதியுள்ள பன்னிரண்டைத் தேர்ந்தெடுத்து அவைகளின் ஆசிரியர்களான பன்னிரண்டு பேர்களைத் தம் வகுப்பிலே சேர்த்துக்கொள்வார். இவ்விதப் பாடம் ஓர் உபந்யாஸ முறையான பாடமன்று, சொந்த ஆராய்ச்சியால் ஏற்படுகிற அனுபவப் பாடமாகும். அது இரண்டு வருஷங்களாக நடைபெறும். ஆதியாகத் தரக்கூடிய பாடம் குட்டிக்கதையை நாடக ரூபமாக்குவதே. இது ஓர் உயர்ந்த முறையாகும். ஏனெனில் இது மாணவனுக்குக் கதைக்கும் நாடகத்திற்குமுள்ள வித்தியாச ரூபங்களைத் தெளிவாகப் புகட்டுகிறது. மேலும் அவனுக்குக் கதையொன்றை முன்கூட்டியே தயாரித்துக் கொடுப்பதால், திடீரென்று அநேக வித பாடங்களை

ஒன்றாக அவன் உருவேற்றவேண்டி வராது. கதையும் பாத்திரங்களும் அளிக்கப்பட்டிருப்பதால், ஒன்றில் சம்பாஷணையையும் செய்கையையும் சேர்ப்பதும் மற்றவை களில் உருப்பட்ட ஆட்களை அமைப்பதும்தான் அவன் செய்யவேண்டியது. நாடக ரூபமாகப் பிரதர்சித்தலுக்கு ஏற்ற முறைகளிலேயே அவனுடைய முழுக் கவனத்தையும் செலுத்தலாம்.

குட்டிக் கதையை ஓர் அங்கமுடைய நாடக ரூப மாக்கியபின்பு, தானே ஓர் ஒற்றை அங்க நாடகம் இயற்ற முயலவேண்டும். கொஞ்சம் இனமான கதை யொன்றை நிர்மிப்பதென்பது சிலர் நினைப்பதைப் போல் அவ்வளவு சுலபமான காரியமல்ல. ஒவ்வொரு மாணுக்கனையும் தன் னுடைய கதையின் சுருக்கத்தை எழுதியனுப்பச் செய்யும் பொழுது அதன் குணகரமான அறிவைச் சீக்கிரம் அறிய வசதி ஏற்படும். அது சரிதானென்றும், காரணகாரி யத்துடன் இருக்கின்றதென்றும் ஒப்புக்கொள்ளப்பட்ட பிறகு, அதைச் சம்பாஷணையாக்க அனுமதிக்கப்படுகிறது. இவ்விதம் ஏக அங்க நாடகம் தீர்ந்தபின்பு, நீண்ட நாடக மெழுதவும் அனுமதி கொடுக்கப்படுகிறது.

ஆகவே, மேற்கூறிய இலக்கியங்களில் உபயோகப் படுத்தவேண்டிய இலக்கணங்களைக் கற்பிக்கும் கல்வி முறை யாது? நான் முன்பே தெரிவித்ததைப்போல், அது உபந்யாஸ மார்க்கமேயன்று. அச்சிறிய கூட்டம் ஒரு பெரிய வட்ட மேஜையைச் சுற்றிப் பண்டிதர் பேக்க ருடைய தலைமையில் கூடும். இவர் ஒவ்வொரு நாடகத் தையும் அக்கூட்டத்திற்கு வாசித்துக் காண்பிப்பார். இவரையும் ஆசிரியனையுமன்றி வேறு எவனுக்கும் அந்த நாடக மெழுதியது யாரென்று தெரியாது. பின்பு பண் டிதர் பேக்கரால் துவக்கப்பட்டு ஒரு பொது வாதப் பிரதி வாதம் ஏற்படும். இவ்விதம் இக்கூட்டத்திற்கு ஞானம் அதிகரித்துக்கொண்டே போகப் போக வாத விஷயங் களும் மாறுதல் அடைந்துகொண்டே போகின்றன. ஆதியாக ஒவ்வொருவரும் நாடகத்தில் சொல்லியிருக்கும் விஷயங்களைப்பற்றிக் குறை கூறிக்கொண்டு வருவார்கள்.

ஆனால் நாளடைவில் எல்லோரும் நாடகத்தில் அடங்கிய விஷயங்களையும் ஆசிரியனுடைய கொள்கைகளையும் விட்டு விட்டு, அவன் எழுதிய நாடகத்தின் இலக்கண முறையைப் பற்றியும், அவனுடைய அபிப்பிராயங்கள் அரங்க மேடையில் நடிக்கும்பொழுது பார்ப்பவர்களுக்குத் தெளி வாகவும் உறைப்பாகவும் பதியும்படி யிருக்கின்றனவா என்பதைக் குறித்தும் தான் விவாதிப்பார்கள்.

இவ்விதம் ஒரு விஷயத்தை அரங்க மேடையி லேற்றி, அங்கிருந்து சபையோருக்குத் தாவச் செய்யும்படி அமைப்பதே இந்த நாடக பாடத்தின் உயிராகும். சாதாரணமாக மேஜையைச் சுற்றி உட்கார்ந்து சம்பா ஷணை செய்யும்பொழுதே ஒரு நாடகம் நடிக்கத் தகுதியுள்ளதா, இல்லையா என்று எல்லோருக்கும் விளங்கக்கூடும். ஆனாலும் சில சமயங்களில் பண்டிதர் பேக்கர் தனிமையாக அழைத்து உபதேசித்த பின்பும் நம்பிக்கை வராமலிருக்கும் சில மாணாக்கர்களும் ஏற் படுவதுண்டு. அவர்களுக்கு நடித்துக் காண்பித்தே தீர வேண்டிவரும். ஆகவே, இந்த விஷயத்திற்காக ஒரு கூட்டம் நடிகர்களும், ஒரு ஸ்டேஜ் மானேஜரும், ஓர் அரங்கமேடையும், ஒரு கூட்டம் சித்திர மெழுதுவோரும், மின்சார நிபுணர்களும் மேற்படி வேலைச்சாலைக்கு இன்றி யமையாதவராயினர்.

ஆகையால் வேலைச்சாலைக் கம்பெனியாரென்று மேற் படி மாணாக்கர்களுக் கிடையிலேயே நடர்களும் நடிகளும் அடங்கிய, பண்டிதர் பேக்கரையே ஸ்டேஜ் மானேஜராகக் கொண்ட, ஒரு நாடக சபை ஏற்பட்டது. சாதாரணமாக எல்லா நாடக சபைகளிலும் நாடகாசிரியனைப் பொருட் படுத்துவதே யில்லை. எல்லா மானேஜர்களும், ஆசிரிய னுடைய ஜோலி தன் நாடகத்தை அச்சிடக் கொடுத்த வுடனேயே நின்றுவிட்டதென்று எண்ணிவிடுகிறார்கள். ஆனால் பண்டிதர் பேக்கர் தம்முடைய சபையில் நாடக ஆசிரியனையே அதிமுக்கியமான ஆளாக வைக் கிறார். நாடகங்கள் ஆசிரியர்களுக்காகத்தான் நடிக்கப் படுகின்றன. அவைகளிலிருந்து தங்கள் குறை

களை ஆசிரியர்கள் அறிந்துகொள்ளக்கூடு மென்பது பண்டிதர் கருத்து. இச்சபையிலே ஒரு நாடகத்தை நடிப்பதற்காக எடுத்துக் கொள்வது இரண்டு காரணங்கள் பற்றி யாகலாம். ஒன்று, ஆசிரியனுக்கு அதிலுள்ள குறைகள் புலப்படாமலிருக்க வேண்டும், இல்லாவிட்டால் அது பண்டிதர் பேக்கரால் சிறந்ததென்று கணிக்கப்பட்டு நியூயார்க் நகரத்திலேயுள்ள பிரபல நாடகத் தொழிலாளர்களால் நடிக்கக்கூடிய தன்மையில் இருக்கவேண்டும். இவ்விரண்டு விதத்திற்கும் ஆசிரியன், பண்டிதர் பேக்கருடைய பக்கத்திலேதான் அமர்ந்திருந்து ஒத்திகைகளை நடத்தித் தன் அபிப்பிராயங்களையும் தெரிவிக்க வேண்டும்.

மெம்பர்களும் ஆசிரியனுக்காகவே நடிக்கின்றனர். ஒவ்வொரு ஆக்டரும் ஆசிரியனுடைய கருத்தைக் கிரகித்து அதைத் தன் அபிநயங்களாலும் ஸ்வர பேதங்களாலும் வெளியிட முயல்கிறான். யாதேனும் வார்த்தைகள் நடிகனுக்கு வாய்க்கு நுழையாமற் போகலாம், அல்லது தவறான வார்த்தைகளாகப் படலாம், மிகையென்று தோன்றலாம், அல்லது காணுதென்று தெரியலாம். அப்படியானல் அவன் அதை ஆசிரியனிடம் தெரிவிக்கிறான். ஆசிரியன் அதற்கிணங்கித் தன் வார்த்தைகளைத் திருத்தியமைக்கிறான். இச்சபையில் "ஸ்டார்" என்ற ஸ்தானமே கிடையாது. எல்லா மாணுக்கருக்கும் தோட்டி முதல் தொண்டைமான் வரையிலும் உள்ள வேஷங்களை நடிக்கத் தெரிய வேண்டும்.

காலக் கிரமத்தில் இந்த வேலைச்சாலை பிரபலமடைந்து வந்தவுடன், நாடக ஆசிரியர்களையும் நடிகர்களையுமன்றி ஸ்டேஜ் மானேஜர்களையும் தன்னிடம் இழுக்கத் தொடங்கி விட்டது. ஆகையால் பண்டிதர் பேக்கர் அவ்வகையினருக்காகவும் ஒரு வகுப்பைத் திறந்து வைத்தார். இதற்கும் அனுபவ மார்க்கமாகிய பாடங்களைத்தான் நிர்மித்தார். ஒவ்வொரு மெம்பரும் தம்முடைய சொந்த அபிப்பிராயத்தின்படியுள்ள மாதிரிகளை ஆராய்ச்சி செய்து பார்க்கலாம். ஒவ்வொருவனும்

தனக்குப் பிரியமான நாடகமொன்றை யெடுத்துக் கொண்டு பல ஸீன்களடங்கிய மேடையின் ப்ளான் களைத் தயார் செய்து, நாடக பாத்திரங்கள் நடமாடுகிற பாதைகளையும் ரேகைகளால் குறிப்பிட்டு வரைந்து காட்ட வேண்டும். இவ்விதம் வரைந்து பார்த்தபின்பு நடிகர் களைக் கொண்டு நடித்துப் பார்த்துக் குறைகளை அறிந் திடவும் வேண்டும்.

காலக் கிரமத்தில் பாஸ்டன் நகரிலுள்ள கலைக் காட்சிச்சாலைக் கல்லூரி அதிகாரிகளும் இந்த வேலைச்சாலை யுடன் ஒத்துழைக்க ஆரம்பித்தார்கள். தங்கள் மாணவர் களில் யாவரேனும் நாடகக் கலைப் பயிற்சியை விரும்புவார் களாயின், அவர்களை இந்த வேலைச்சாலைக் கனுப்பினார்கள். அத்துடன் ஒரு சிறந்த மின்சார நிபுணரும் இச்சாலையில் சேர்ந்து பல வர்ணமுள்ள லைட்டுகளையும், அவைகளால் ஏற்படுகிற பாவ ரஸ பேதங்களையும் பற்றி ஆராய்ச்சி செய்து விளக்க ஆரம்பித்தார்.

இத்தகைய அரங்க மேடை, அதற்கிசைவான நோக்கமுடைய 'தரிசிப்போர்' இல்லாவிடில் பூர்த்தி யாகுமா? ஆகவே, கொஞ்ச நாளில் ஒரு 'நாடகம் தரிசிப் போர் சங்க'மொன்றும் ஸ்தாபிக்கப் பட்டது. யேல் (Yale) சர்வ கலாசாலையிலிருந்து இச்சாலைக்காகப் பத்து லட்சம் டாலர்கள் நன்கொடையாகக் கொடுத்திருக்கிறார்க ளாயினும், பண்டிதர் பேக்கருடைய சிறிய கொட்டகையில் முன்னூறு பேருக்குத்தான் உட்கார இடமுண்டு. இந்த முன்னூறு பேர்களையும் சீசன் டிக்கெட் கொடுத்து இல வசமாகவே அழைப்பார்கள். இந்த முன்னூறு பேர்களும் நாடகம் பார்த்த மூன்று தினங்களுக்குள் நாடகத்தைப் பற்றியும், ஆக்டர்களைப் பற்றியும், ஸீன்களைப் பற்றி யும், மின்சார வசதிகளை உபயோகப்படுத்திய மாதிரி யைப் பற்றியும் மதிப்புரைகள் எழுதிப் பண்டிதர் பேக்க ருக்கு அனுப்பவேண்டும். எழுதி யனுப்பத் தவறியவர்க ளுடைய டிக்கெட்டுகளை உடனே ரத்து செய்து விடு வார்கள். பண்டிதர் பேக்கர் இம்மதிப்புரைகளை முதலாவது நாடக ஆசிரியரிடத்திலும், பின்பு முறையே நடர்கள்,

காட்சி தயாரிப்போர் முதலியவர்களிடத்திலும் காண்பித்து, அவரவர்களிடம் எங்கெந்த விஷயங்களில் குறைபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன என்று காட்டிக்கொடுப்பார்.

இந்த "வேலைச் சாலை"யின் வேலை இத்துடன் நின்றுவிடவில்லை. ஒவ்வொரு வருஷத்திலும் நியூயார்க்கைச் சார்ந்த பிரென்டானோ புஸ்தகசாலையார் பண்டிதர் பேக்கரால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாலு ஏக அங்க நாடகங்களை அச்சிட்டுப் பிரசுரப்படுத்தி வருகிறார்கள். ஒவ்வொரு வருஷத்திலும் நியூயார்க்கிலுள்ள மானேஜர்கள் உத்தமமான நீண்ட நாடகங்களுக்கும் உத்தம நாடக அபிநயத்திற்கும் பரிசு ஏற்படுத்தி யிருக்கின்றனர். வருஷந்தோறும் இந்த வேலைச் சாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பலவேறு நகரங்களுக்குச் சென்று ஆங்காங்கே சிறிய வேலைச்சாலைகளை ஸ்தாபித்து இதே முறைகளை அனுஷ்டித்து வருகிறார்கள். ஆசிரியர்களிலும் நடிகர்களிலும், மானேஜர்களிலும் அநேகர் தாங்கள் கற்ற கல்வியையே தொழிலாய் அமைத்துக்கொண்டு வாழ்கின்றனர். இன்னும் சிலர் தாங்கள் கற்ற சிறந்த அனுபவத்தை நாடகாபிமானிகள் சங்கங்களிடையே பரவச் செய்து அமெரிக்க நாடக வளர்ச்சிக்காக உழைத்து வருகின்றனர். இவர்கள் எல்லோரும் நாடகக் கலையினிடம் பொதுஜனங்களுக்கு நல்ல மதிப்பேற்படும் விஷயத்திற்காக மிகப் பாடுபடுவதோடு, பாமரர்களுங் கூட உண்மையான உயர்ந்த கலைகளை விரும்பவும், கேவலம் கண் காது முதலிய பஞ்சேந்திரியங்களைத் திருப்திசெய்யக் கூடியவைக்கும், உண்மையான நாடகத்திற்கு முள்ள வித்தியாசத்தை யுணர்ந்திடவும், ஒத்தாசை செய்து வருகிறார்கள். 'நோபெல்' பரிசு, 'பூலிட்ஸர் பரிசு' முதலிய பரிசுகளைப் பெற்று, தற்பொழுது உலகப் புகழுடன் விளங்கும் பல அமெரிக்க நாடகாசிரியர்களும் இந்த நாடக ஆராய்ச்சிச் சாலை மாணாக்கர்களே!

இத்தகைய வேலைச்சாலை யொன்று நமது தமிழகத்திலும் ஏற்பட நாளாகவில்லையா ?

III நாடகக் கதா வஸ்துக்கள்

1. அநுபவம் ஒழித்தல்

நாடகத்தின் உண்மைக் கருத்து ஆயாச நிவிர்த்தியே யென்றும், அதில் ஏதேனும் கம்பீர விஷயங்களை நுழைத்தல் அனுவசியமும் ரஸாபாசமு மாகுமென்றும் சில ரஸிகர்கள் எண்ணி வருகின்றனர். சம்சாரக் கடலி லேயே மூழ்கிக் கிடப்பவருக்குக் கொஞ்சமேனும் அதை விட்டு வெளியே வந்து சந்தோஷிப்பதற்கென்று ஏற்பட்ட அரங்கமேடை, ஜீவித ரகசியத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்யவோ, அல்லது வியாக்கியானம் செய்யவோ முயல்வதா?—என்றும் சொல்கின்றனர். அதனுடைய சுத்த இன்பத்தினிடையில் ஆசிரியன் தனது பிரியக் கொள்கை களையுங்கூட நுழைத்து விடுகின்றானேயென்றும் நினைக் கின்றனர். நாடகமென்பது அனுபவ தத்துவத்தையோ, அல்லது மனோராஜ்யத்தையோ, எதை வேண்டுமோ அடிஸ்தானமாக்கிக் கொண்டாலும், ஜீவிதாநுபவம் என்ற மலரிலிருந்து வடித்தெடுக்கப்பட்ட இன்ப ரஸத்தை மாத்திரம் அளிக்கவேண்டுமாம். சாந்த ரஸ முள்ளதும், சிரிப்பை யகற்றுவதுமாகிய நீதிபோதங்களைக் கொண்டு நுழைத்திடுவது இக் கக்ஷியாருக்குப் பிடிக்கிற தில்லை. ஏற்கெனவே ஆழ்ந்த கருத்துக்கொண்ட மனச் சமா தானமற்ற வாழ்வை, மறுபடியும் மனோரஞ்சனைக்கென்று ஏற்பட்ட கூத்திலும் சித்ரீகரித்தல் (விளக்குதல்) உசித மாகாதாம். "ஒரு புட்பால்" (foot-ball) பந்தயத்தை நம் முள் யாராவது ஜீவிதாநுபவத்தின் குணகுண விசாரணை யாகக் கணிப்பதுண்டா? டென்னிஸ்—யுத்தத்தில் நீதி போதம் ஏதேனுமிருக்க விரும்புகிறோமா? அல்லது சீட் டாட்டத்தில் வேதாந்த விசாரணைகளையோ, தீண்டாமை யொழித்தலையோ நுழைத்திட விரும்புகிறோமா? மானஸிக வினோதத்தையே கருத்தாகக் கொண்டிருக்கும் நாடகக் கலையினிடையே தத்துவ போதத்தை ஏன் நுழைக்கவேண்டும்?" என்றெல்லாம் கேட்கின்றனர். காளி தாஸன் எழுதிய "சாகுந்தள"மும், ஷேக்ஸ்பியர்

இயற்றிய "நடுவேனில் இராக் கனவு"ம், சுத்த இன்பத்தை மாத்திரம் கருத்தாய் அமைத்தே எழுதப்பட்டதென்றும் சொல்லுகின்றனர்.

2. இயற்கையின் பிரதிமை

நாடகத்தை லோகாநுபவத்தின் உருவாக அமைத்திட வேண்டுமென்ற மற்றொரு வாதியர் உண்டு. அது நமது மனக் கண்ணுக்கும் சங்கற்ப நேத்திரத்திற்கும் எதிராக உலகத்தினிடையே தோன்றிடும் மானிட வஸ்துவைத்தான் பிரதர்சிப்பிக்க வேண்டுமாம். ஸ்ரீ பாத்ரைக் கோலம் (Mr. Padraic Colum) என்ற அயர்லாந்து தேசத்து நாடகாசிரியர் கூறுவதாவது :—

"நாம் சித்திரம் எழுதிடும் சாலை யொன்றுக்குள் இருப்பதாக எண்ணிக் கொள்வோம். பற்பல படங்கள் அங்குமிங்கும் சிதறிக்கிடக்கின்றன. நமக்காகச் சித்திரம் எழுதுவோன் வந்து அவைகளில் ஒன்றை யெடுத்து ஒரு சட்டத்திலே வைத்துக் காண்பிக்கிறான். உடனே அதை நாம் அதிக நுட்பமாகக் கவனிக்கிறோம்...அதைப்போலவே, கடைத் தெருவிலே நடக்கும் ஓர் இழிந்த பிச்சைக்காரி நம்மிடம் யாசகம் கேட்கிறாளென்று வைத்துக்கொள்வோம்; அவளது முகத்தையோ, நிலையையோ, அல்லது பாவனைகளையோ நாம் திரும்பிக்கூடப் பார்க்கிறோமில்லை, வந்துவிடுகிறோம். ஆனால் யாராவதொரு நடிகன் அந்தப் பிச்சைக்காரியைப்போல் வேஷங் கட்டிக்கொண்டு அரங்கத்தில் நடிக்கும்பொழுது நமது கண்கள் திறக்கப்படுகின்றன. அவளது முகத்திலுள்ள மேடுகள், பள்ளங்கள், வரைகள், கவலைக் குறிகள், கும்பிடும் கைகள் எல்லாம் அர்த்தபுஷ்டியுடையனவாகத் தோன்றுவதோடு, நம் அனைவருடைய மனத்தினுள்ளும் இருக்கும் மனோபாவங்களுடைய பிரதர்சனங்களே யென்றும் அறிகின்றோம்."

நாடகமென்றது உலக ஜீவிதத்தையே படமெடுத்தாற்போல் பிரத்தியேகமாக எடுத்துக் காண்பிக்கக்கூடியதென்றும், அதன் ஆசிரியன் ஜீவிதத்தினிடையே சென்று அதை இரண்டாந்தடவையும் சிருஷ்டி செய்யக்கூடிய

சித்திர வேலைக்காரனென்றும் நாம் எண்ண வேண்டுமாம். கேவலம் அற்பமான வேடிக்கைக்கும் ஆயாச நிவிர்த்திக்குமாக ஏற்பட்ட பொருள்களைக் கொண்டு நாடகரங்கத்திலே நிறைப்பதை இக்கட்சியினர் இகழ்ந்துரைக்கின்றனர். அதைப்போலவே ஜீவித தத்துவ ஆராய்ச்சிகளையும் நீதி நியாய முறைகளையும் கொண்டு மலினப்படுத்திவிடக்கூடாதென்றும், அவை இயற்கைக்கு விரோதமான செயற்கைப் பிரகடனங்களே யன்றிப் படங்களாகமாட்டா வென்றும் கருதுகின்றனர். சுருக்கத்தில், நாடகாசிரியன் இயற்கையை அப்படியே படமெடுக்க வேண்டியவனே யன்றி அதற்கு மிஞ்சியோ குறைவாகவோ ஒன்றுமே செய்யக் கூடாதாம்.

இவ்வித நாடகங்கள் நமது நாட்டிலே இதுவரையிலும் அதிகமாய் ஏற்பட்டதில்லை. மேலை நாடுகளிலும் சென்ற நூற்றுண்டின் அந்திய காலத்திலேதான் ஆதியாகத் தோன்றின. ரஷ்யா தேசத்து ஆசிரியரான ஸ்ரீ. மாக்ஸிம் கார்க்கி என்றவரும், பிரெஞ்சு தேசத்து ஸ்ரீ. மாரிஸ்டோணே என்றவரும், இத்தாலிய தேசத்து ஸ்ரீ. கியக்கோஸா என்றவரும் மேற்கூறிய கட்சியைச் சார்ந்த ஆசிரியப் பிரமுகர்களேயாவர்.

3. வாழ்வின் விருப்பம்

மூன்றுவது கூட்டத்தார் நாடகமென்பது, நமது ஜீவிதானுபவத்துக்கு அதீதமான இன்பங்களை ஆத்மாவுக்கு அளித்திடக்கூடியதென்றும், மானிடரிதயத்தின் ஆசைகளை மனக்கண்ணுக்குக் காட்டி ஆனந்திப்பதென்றும் எண்ணி வருகின்றனர். ஸ்ரீ மார்க்கன் என்ற ஓர் ஆங்கிலேய வித்வான் கூறுவதாவது:-- "மனோராஜ்யத்திலே நாம் பலவித சம்பவங்களை விரும்புகிறோம். ஆனால் அவைகளிலே, அநேகமும் இயற்கை யனுபவத்திற்கு மாருகவே யிருக்கின்றன. கலையின் முக்கியக் கருத்து நம்மை அம்மாயாரூபமான பிரதேசத்திற்கு அழைத்துச் செல்வதாம். நாடகம் என்பதும் பரிபூர்ண கலையாதலின், இவ்விதக் கடமையும் தர்மமும் அதற்கு உண்டாம்.

லோகானுபவத்தின் ரஸம் அனைத்தையும் வடித் தெடுக்கப்பட்டதும், செயற்கைச் சிறப்பினால் மானிடக் கருவிகளின் வசீகரண சக்தியை அதிகரிப்பதும் ஆகுமாம் அது. எவற்றினுடையவும் உத்தமத் தன்மையையும் உயிரையும் மாத்திரமே எடுத்துக் காட்ட முயல வேண்டு மாம். அதன் நாடக பாத்திரங்கள் இயற்கைக்கு மாறு பட்ட உயிரற்றவை யாயினும் சரி, அல்லது சூத்திரப் பாவைகளாயினும் சரி, இக்கட்சியார் கவனிப்பதேயில்லை. அன்றியும் கேவலம் நேரம் போக்குவதற்காக ஏற்பட்ட ஒரு வேடிக்கை யென்றும் இவர்கள் அதைக் கருத மாட் டார்களாம். இவர்களுக்கு நாடக மென்பது ஸாராம்சம் புகட்டுவதோடு, உயர்தர வாழ்வுக்கும் வழிகாட்ட வேண்டு மாம். அவ்வாறு இல்லாவிட்டால் நாடகமாகாதாம். அது இயற்கைக்கு விரோதமான சம்பவங்கள் உடையதாயினும் பாதகமில்லையாம். நமது நாட்டு நாடகங்களாகிய "ஹரிச் சந்திரன்" "பிரகலாதன்" 'நந்தன்" முதலியன வெல்லாம் இவ்வர்க்கத்தையே சார்ந்தன. மேலே நாட்டிலும் மேட் டர்லிங்க், வெர்ஹாரன், பெர்னர்ட்ஷா முதலிய மகான்களும் இத்தகைய இயக்கத்தை ஆதரிக்கின்றவர்களேயாம்.

4. தத்துவ விளக்கப் பிரதிமை

இன்னும் நான்காவது கட்சி யொன்று, நாடகத்தை இயற்கையின் பிரதிபிம்பமாகவும் அதன் தத்துவ விளக்க மாகவும் கருதி வருகிறது. இவர்கள், இரண்டாவதாகக் கூறப்பட்ட சுத்தப் பிரதிமைக் கட்சியைவிட ஒருபடி உயர்ந்தவர்களாவர். ஏனெனில் அப்பிரதிமையைப் பற்றிய ஆசிரிய அபிப்பிராயமுங்கூட அதிலேயே அடங்கி யிருக்க வேண்டுமென்கிறார்கள். சுத்தப் பிரதிமையில் ஆசிரி யனுக் கிடமேயில்லை. ஜீவித விருப்பத்தில் ஆசிரியனை யன்றி வேறில்லை. தத்துவ விளக்கப் பிரதிமையில் ஆசிரி யனது அபிப்பிராயம் வரவேண்டுமாயினும் அது பகி ரங்கமா யிருக்கக்கூடாதாம். எவ்வளவுக் கெவ்வளவு ஆசிரியன் மறைந்து நிற்கிறானோ அவ்வளவுக் கவ்வளவு நாடகமும் சிறப்பாகுமாம். ஸ்ரீ. ஜ்யார்ஜ் கால்டராண் என்ற ஆராய்ச்சிக்காரர் சொல்வதென்னவெனில், "ஒவ்

வொரு ஆசிரியனும் இயற்கையினிடமே தன் செயற்கைக்கு வேண்டிய கருவிகளைத் தேடிச் செல்கிறான். அங்கிருந்து பொருளொன்றைக் கடைந்தெடுக்கிறான். இத்தகைய இயற்கைவாதியின் பிரத்தியேக குணம் யாதெனில், பழைய காலத்து ஆசிரியனைப்போல் அப்பொருளை இன்னும் வடித்தெடுத்திடவோ, அல்லது கட்டுக்கதை யாசிரியனைப்போல் பற்பல சுகந்தத் தைலங்களை யிட்டு மறைத்திடவோ செய்யாமல் மறுபடியும் அதற்கு இயற்கையினழகையே அளித்திட முயல்வதேயாகும்.''

இக் கட்சியார் மூன்றாவது விளக்கிய கோஷ்டியைக் காட்டிலும் ஒருபடி உயர்ந்தவர்களாவார்கள். ஏனெனில் முன்னவர்கள் நாடகத்தைக் கேவலம் இயற்கைத் தோற்றங்கூட இல்லாத ஒரு வியாசமாகவே நினைப்பவரன்றோ? ஸ்ரீ. மாரிஸ் பேரிங் என்ற ஆராய்ச்சிக்காரர் அபிப்பிராயப் படி, ''ஜீவிதம் ஒரு நாளுமே திடீரென்று விளங்கவேண்டிய ஒரு கணித சாஸ்திரப் பிரச்னையாகத் தோன்றுவதில்லை; ஆயிரக்கணக்கான அற்ப விஷயங்கள் ஒன்று சேர்ந்து பிரமாதமாகத் தோன்றிடும் விஷயமே யாகும்.''

அயர்லாந்து மகா கவியாயிருந்த காலஞ் சென்ற ஜே. எம். சிஞ்சு என்பவர், ''நாடகம் என்றது உயர்ந்த சங்கீதத்தைப்போல் ஒன்றையுமே கற்பித்திடவோ, ருசுப்படுத்திடவோ செய்திடாது. ஆனால் அது பெரியதோர் மகாத்மாவின் உண்மை வாழ்வைப்போல் வாய்திறவா வழிகாட்டியாக இருக்கும்'' என்றார். இத்தகைய நாடகங்களை மேலை நாட்டில் நார்வே தேசத்துக் கவிச் சக்ரவர்த்தியா யிருந்த இப்ஸென், ரஷ்யா தேசத்து ஆண்டன் செக்காவ், பிரஞ்சு தேசத்து ஹென்றி பெக், ஜெர்மனி தேசத்து ஹாப்ட்மன் முதலியவர்கள் எழுதி உலகமெங்கும் பரவச் செய்திருக்கின்றனர்.

இந்திய ஆசிரியர்கள் கடமை

ஆனால் நமது நவீன இந்தியாவின் கடமை யாது? நமதாசிரியர்கள் மேற்கூறிய திட்டங்களில் யாதினைக் கையாளப் போகின்றனர்? இவ்வினாக்களுக்குத் திட

ரென்று ஒரே வாக்கியத்தில் பதிலளிக்க முடியாது. மானிட புத்திவிகாசம் நாளுக்கு நாள் புதிய வழிகளையும் முறைகளையும் உற்பத்தியாக்கிக் கொண்டிருப்பதால் ஒன்றையுமே வரையறுத்து விதித்திட முடியாது. மேலும் இப்பொழுதும் நம்மை யறியாமலே புதியதோர் முறை நமது ஆசிரிய கோடிகளிடையே தோன்றிக்கொண் டிருக்கவில்லை யென்று யாரால் கூற முடியும்? செயற்கைத் திறமை என்றுமே ஒரே வழியிலே தான் வேலை செய்திடுமென்று எண்ணுவது கலா சம்பந்தமான ஒரு மாயையே ஆகும். ஆகவே ரஷ்ய நாடக ஆசிரியருள் காளிதாஸ ஸ்தானம் வகித்தவரும், காலம்சென்ற மஹானு மாகிய ஆண்டன் செக்காவ் என்பவருடைய அனுபவ சித்த மான உண்மை வாக்கியமே நமது நாடக ஆசிரியர்களுக்கும் உபயோகப்படு மென்றெண்ணி, அதை எடுத்துக் காட்டி இக்கட்டுரையை முடிக்கிறேன். அவர் கூறுவதாவது :--

"நான் உதார கோஷ்டியையோ, பண்டைப் பற்றுக் கோஷ்டியையோ, முன்னேற்ற வாதத்தையோ, புரோகி தத்தையோ, அல்லது ஒன்றிலுமே சேர்ந்திடாத தனிக் கோஷ்டியையோ சேர்ந்தவனல்லன். சுதந்தர ஆசிரியனுக மாத்திரமே யிருக்க விரும்புகிறேன். ஆனால் எந்த வித மான வாய்மைகளையும், ஏமாற்றங்களையும் வெறுக்கிறேன். சடங்குகளையும், பூசாரிகளையும், மூடத்தனங்களையும், கொடுங்கோன்மைகளையும் வியாபார ஸ்தலங்களிலும் சிறைச்சாலைகளிலும் மட்டுமல்ல, — சாஸ்திர ஆராய்ச்சி யிலும், இலக்கியத்திலும், வாலிபக் கூட்டங்களிலும் நான் அவைகளைக் காண்கிறேன். அத்துடன் முத்திரை வாக்கு களையும் (slogans) பட்டப் பெயர்களையும் கேவலம் மாயைக ளாகவே கருதுகிறேன். மானிட தேகம், ஆரோக்கியம், புத்தி, சக்தி, அருள், அன்பு, உன்னதமான சுதந்திரம் இவைகளே என்னுடைய மகா பவித்ரமான பொருள்கள். நான் உண்மை யாசிரியனுயிருப்பின் இம்முறைப்படியே நடப்பேன்."

இதைவிட மேன்மையான கொள்கை யொன்றும் நமது ஆசிரியர்களுக்கு உண்டோ?

தினமணி வெளியீடுகள்

[டாக்டர் டி. வி. இராதாகிருஷ்ண சாஸ்திரி "பாரதமணி"யில் எழுதுகிறார்.]

"இலக்கிய ஆலோசனையாளர்களின் உன்னதக் கூட்டுறவுடன் ஆசிரியர் பி. ஸ்ரீ. அவர்களால் பதிப்பித்து வெளிவரும் இவ்விதழ்கள் தமிழ்நாட்டிற்கு அரிய ஸேவை என்று மதிக்கப்பட வேண்டியவை. எல்லாப் புத்தகங்களுமே உயர்ந்த நோக்கம் கொண்டு அனைவரும் படித்து மகிழும் வண்ணம் இயற்றப் பட்டவைகள். பலர் எழுதியுள்ள இப்புத்தகங்களில் ஓர் அம்சம் பொதுவில் விளங்குகிறது. நம் நாடு நலம்பெற, எல்லாத் துறைகளிலும் மேம்பாடடைய, உதவும் விஷயங்களைப் போதிக்க வேண்டும். இந்த ஒரே நோக்கம் அனைவரையும் இயக்குகிறது. இவ்விதம் பலரையும் ஒன்றுகூட்டி ஆசிரியர்களின் ஸத்ஸங்கம் ஒன்றைக் கூட்டுகிறார்கள் 'தினமணி' வெளியீட்டார்கள் என்று சொல்லுவது மிகையாகாது.

"இலக்கியத் துறையில் தெளிவான உணர்ச்சியை ஊட்டும் வகையில் அமைந்தது வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரிகளின் 'நவரஸங்கள்.' உணர்ச்சிப் பெருக்கில் ஊறுவது இன்பம். இதை யனுபவிக்கும் வகையால் உணர்ச்சியைப் பெருக்குவதே காவியத்தின் கைங்கர்யம். சோகமும் வீரமும், ஹாஸ்யத்தைப் போலவே இன்பம் பயப்பது என்றவை போன்ற உண்மைகளை விளக்கிக் காட்டி ஒன்பது வகையில் இன்பம் சுரக்கச் செய்கிற ஒன்பது இரஸங்கள் என்று நம் தமிழ் எழுத்தாளர்களின் கவனத்தைக் கவர்கிறார்.

"சரித்திர சித்திரங்களில் ஒன்றையொன்று மிஞ்ச முடியுமா என்று போட்டியிடும் வகையில் அமைந்தன கபீர்தாஸர், தளவாய்த் தாத்தா, தஞ்சை நாயக்கர், மௌலானா ஆஜாத் ஆகியகிரந்தங்கள் கே. கிருஷ்ணமூர்த்தி விவரிக்கும் கபீர்தாஸர் சரித்திரம் பாமரர்களுக்கும் ஆத்ம ஞானமும் சமரஸ புத்தியும் சித்திக்கும் வகையில் அமைந்துள்ளது. ஆராய்ச்சி மனப்பான்மையுடன் வாசிப்பவர்களுக்கும் மிகவும் உதவும் வகையில் சித்தரித்திருக்கிறார்.

"ஸ்ரீ. எம். எஸ். சுப்பிரமணிய அய்யர் தீட்டிய சரித்திர வரலாறுகள் **தளவாய்த் தாத்தாவும், தஞ்சை நாயக்கரும்.** தேச பக்தியும் நிர்மாண சக்தியும் தமிழன் உள்ளத்தில் கங்குக்கரை யில்லாமல் பாய, வேறு சாதனங்களும் வேண்டுமோ? எக்காலத்திலும் பெரியோர்கள் ஒரே வகையினர். அவர்கள் வேலைத்திறனும் ஒரே மாண்புடையது என்று அறிய இச்சரித்திரங்களில் காண்கிற அரியநாயகரின் தொண்டின் பெருமையையும், கோவிந்த தீக்ஷிதரின் கைங்கரியத்தின் திறனையும் ஊன்றிப் படிக்க வேண்டும். பாரதியாரின் தமிழ்நாடு நம் கண்களுக்கு முன் மறுபடியும் காட்சியளிக்கும். மூச்சினிலே ஒரு சக்தி பிறக்கும். ஆசிரியர் சுப்பிரமணிய அய்யர் ஒரு தேச பக்தர் என்று இப்புத்தகங்களே சாக்ஷி சொல்லும்.

"ஸ்ரீ எம். எம். இஸ்மாயில் எம். ஏ. நமக்களித்திருக்கும் '**மௌலானு ஆஜாத்**' என்ற புத்தகம் தற்காலம் மிக்க பயன்படக்கூடியது. நடை, விஷயம் எல்லாம் மனதைக் கவரும். ஹிந்து முஸ்லிம் சமரஸம் ஏற்பட ஆஜாத்தின் வாழ்க்கையைச் சகலரும் படித்துணரும் படி விவரித்து எழுதுவதே ஒரு பெருந் தொண்டாகும். எவ்வளவு அந்தரங்க சுத்தியுடன் மௌலானு ஆஜாத் இந்தியா பூராவும் இஸ்லாம் ஆக வேண்டும் என்கிறார்! உலகத்திலுள்ள எல்லா மதமும் இஸ்லாமே! அவருக்கு மத மாற்றம் அவசியம் இல்லை. தூய வாழ்வே இஸ்லாம் போதிப்பது, சத்தியாக்கிரகம் குரான் போதிப்பது என்றெல்லாம் சொல்லுகையில் சமரஸ பாவம் உச்ச நிலையை அடைகிறது. தண்டனை ஏற்கையில் விடுத்த மாஜிஸ்ரேட்டுக்கு அறிக்கை ஒரு வேத ஸாரம். படிக்கப் படிக்க உணர்ச்சி பொங்கும். அந்தச் சமயம் நாம் ஆஜாத் என்றே எண்ணுவோம். இஸ்மாயிலின் எழுத்தின் திறமையா? ஆஜாத்தின் வாழ்க்கையின் பெருமையா? படிப்பவர்கள் இரண்டும்தான் என்போம்.

"தேசிய ஸ்வதந்திரத்திற்கு உழைப்பவர்கள் பிற நாடுகள் முன்னேற்றம் அடையும் வழிகளையும் அவசியம்

படித்துப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அப்படிப் பெரும் போர்களைப்போல் சரித்திர புத்தகங்கள் குவிந்திருக்கையில் படிப்பதற்குப் பிரமை தட்டும். இதை நன்குணர்ந்தே தமிழர்களுக்கு உதவ, வி. எஸ். நாராயணன் அவர்கள் "**வீர ரஷ்யா**" (**இரண்டு பாகங்கள்**) என்று நமக்களிக்கும் புத்தகத்தில் ரஷ்யர்கள் நிலையைப் படிப்படியாக நன்கு விவரிக்கிறார். நம் தேசத்தைப் போலவே பல பூசல்களும் ஊழல்களும் மிளிர்ந்திருந்த ரஷ்யாவை உறுதியான கொள்கைகளைக் கடைப்பிடித்த லெனினும் ஸ்டாலினும் எவ்விதம் ஆச்சரியப்படும் விதமாக வீர ரஷ்யர்வாக்கி இருக்கிறார்கள் என்று விளக்குகிறார். அவர்கள் தேடிய ஸ்வதந்திரத்தைக் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரையில் சிருஷ்டித்துக் காப்பாற்றப் பயன்படும் வகையில் எவ்வாறு சமூகத்தைத் திருத்தியமைத்தார்கள் என்று விளக்குகிறார்.

"வி. மஹாலிங்கம் எம். ஏ., அவர்கள் சித்தரித்துள்ள '**ஐசுவரிய அமெரிக்கா**' இவ்வித கைங்கர்யத்தில் மற்றுமொரு சான்று. அமெரிக்காவில் செல்வம் பெருகிய விதமும், ராஜ்யம் உருவாகிய விதமும் தெளிவாக நமக்கு விளக்கப்படுகின்றன. அனைவரும் படித்துப் பயன் பெறலாம்.

"இவ்வாறு உணர்ச்சியையும் முறைகளையும் பெறும்படியான புத்தகங்கள் ஒரு புறமிருக்க, நாம் தற்காலம் எத்திசையிலும் பார்க்கும் யுத்தத்தின் கொடுமை தாங்கக் கூடியதாக இல்லை. இவ்விதம் பயங்கர யுத்தமாக எவ்விதம் அமைந்தது? அந்த ஆயுத பலத்தின் பெருக்கும் எப்படி ஏற்பட்டதென்று எண்ணமிடுபவர்களுக்குப் பதில் சொல்லும் வகையில் அமைந்தது "**நற்காலப் போர்க்கருவிகள்.**" ஆசிரியர் சூடாமணி தெள்ளிய நடையில் வெகு சரளமாக இதன் நுட்பங்களையும் வளர்ச்சியையும் விளக்குகிறார். கத்தி முனையில் நடப்பது என்கிற பழமொழியைப்போல் இக்கஷ்ட சாத்தியமான வேலையை வெகு நன்றாக செய்திருக்கிறார். யுத்தகாலச் சட்டத்தைச் சிறிதும் மீறாது நமக்கு வேண்டிய பல விளக்கங்களைத் தெளிவாகக் கொடுக்கிறார்."—"**பாரத மணி**"

Indian Express Br. Press, Madras.

தினமணி வெளியீடு

பதிப்பாசிரியர்: பி. ஸ்ரீ.

1.	மகாத்மா காந்தி—நினைவு மாலை [2-ம் பதிப்பு]	..	
2.	ரவீந்திரநாத டாகுர்	..	
3.	கைலாஸம்-மானஸஸரோவர் (பிரதிகள் கைவசமில்லை		
4.	போலந்து—பின்லந்து	...	
5.	சிறுகதை மஞ்சரி	...	
6.	ஹாஸ்ய நாடகங்கள், கட்டுரைகள்	...	
7.	தில்லைக் கோவிந்தன்	...	
8.	அன்னை கஸ்தூரிபா	...	
9.	முன்னிலா	...	
10.	தள்வாய்த் தாத்தா (அரியநாயக முதலியார்)	...	
11.	மௌலானா ஆஜாத்	...	
12.	கதை வனம்	...	1
13.	நவ ரஸங்கள்	...	0
14.	வீர ரஷ்யா (பாகம் I)	...	0
15.	காந்தீயத் திட்டம்	...	1
16.	தற்காலப் போர்க் கருவிகள்	...	1
17.	[illegible]தா நாடக மஞ்சரி	...	0
18.	[illegible]ர ரஷ்யா (பாகம் II)	...	0
19.	[illegible]ீர்தாஸர்	...	0
20.	ஐசுவரிய அமெரிக்கா	...	0
21.	தஞ்சை நாயக்கர்	...	0
22.	ஜீவ கலை	...	0
23.	அமிர்த சந்திரன்	...	1
24.	சீனா	...	0
25.	உத்தம வாழ்க்கை	...	0
26.	ஜனநாயகப் பிரச்னைகள்	...	0
27.	என் தந்தையார்	...	0

(ஒவ்வொன்றுக்கும் தபால் செலவு பிரத்தியேகம்)

இன்றைய தமிழ் வசன நடை ... அச்சில்